
விலை ரூபா 20.00

www.onlineuthayan.com




பக்கங்கள்: 28

★

# உதயன்

சுடர் 27
கதிர் 66

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 17 செவ்வாய்க்கிழமை (31/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

### ஆசனப்பட்டிச் சட்டம் கண்டவுடன் தண்டம்

வாகனங்களில் ஆசனப்பட்டி அணியாது செல்பவர்களுக்கு எதிராகத் தண்டப்பணம் அறவிடும் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதன்படி வாகனங்களில் ஆசனப்பட்டி அணியாது செல்பவர்களுக்கு அவ்விடத்திலேயே தண்டப்பணத்தை அறவிடும் திட்டத்தை கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு

சுதந்திரதினம் மற்றும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக 5 ஆயிரம் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அனுராதபுரத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார். அனுராதபுரத்தில் தற்போது முதற்கட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், எதிர்வரும் மூன்றாம் திகதியின் பின்னர் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படவுள்ளது.

### வைத்திய அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று ஹோமாகம, அவிசாவளை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது. அரச வைத்திய அதிகாரிகளுக்கு அரசு வழங்குவதாக அறிவித்த தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்படாமை, அது தொடர்பில் மேல் மாகாண சுகாதார அதிகாரசபையின் மந்தகதியான செயற்பாடு உள்ளிட்ட சில விடயங்களை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் வைத்தியர் நிலந்த சொய்சா தெரிவித்தார்.

### கைதிகளுக்கு பாடசாலை

சிறைக் கைதிகளுக்கான நவீன தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய பாடசாலையொன்றை நிர்மாணிக்க எண்ணியுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார். இதன்மூலம் கைதிகளுக்கு கணினிக் கல்வியைப் போதிப்பதுடன் சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். ஹோமாகம, வட்டரெக்க பகுதியில் இந்த நவீன வசதிகளுடனான பாடசாலையை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு கல்வி அமைச்சருக்கும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருக்கும் இடையில் அண்மையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

## ஜெனீவாவில் அரசை எதிர்க்க கூட்டமைப்பும் தயாராகிறது

கொழும்பு, ஜன.31

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்படவிருக்கும் போர்க்குற்றச் சாட்டுக்களிலிருந்து அரசை காப்பாற்றுதவற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில் அந்தக் கூட்டத் தொடரில் பங்கு கொண்டு இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் தீவிர முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது. இதற்கான முழு முயற்சிகளும் தற்போது நடைபெற்று வருவதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

மார்ச் மாத இறுதியில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளது. இதில்

»27

## வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா

கொழும்பு,ஜன 31

வடமாகாணத்தின் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கி 200 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி 20 வெளிநோயாளர் பிரிவும், 10 சுகாதார வைத்திய அதிகாரிகள்

»27

# கூட்டமைப்பின் தேவை தனிநாடே அவர்களுக்கு இல்லை அதிகாரம்

## தெரிவுக்குழுவின் விருப்பே தனது விருப்பமும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜனவரி 31

அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் நாடாளுமன்றத்தின் பெரும் பான்மை விருப்பமே எனது விருப்பம். 13பிளஸ் என்ற எனது நிலைப்பாடு புதிய தீர்மானமல்ல. இதனை நான் அன்றிலிருந்து கூறிவருகிறேன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குத் தனிநாடு ஒன்றே தேவையாக இருக்கிறது. தனிநாடு ஒன்றுக்குரிய அதிகாரத்தை நாம் கொடுக்கவே மாட்டோம். அது தான் எமது நிலைப்பாடு.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

- ★ பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் என்னால் பெந்தரைக்கும் போகமுடியாது.
- ★ 30 வருடகால பிரச்சினையை என் ஒருவனால் தீர்க்கமுடியாது.
- ★ தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு.
- ★ தெரிவுக்குழுவிற்கு வருவதற்கான எண்ணமே கூட்டமைப்பிடம் இல்லை.
- ★ 13 பிளஸ் பற்றி அறிவிக்க கிருஷ்ணாவிடம் சம்மதித்தேன்.
- ★ 13 பிளஸ் புதிதான விடயமல்லவே.
- ★ இனவாதத்தைக் கக்குகின்றன தமிழ்ப் பத்திரிகைகள்.
- ★ விட்டால் நிதி அதிகாரத்தையும் கேட்பர்.

நேற்று நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

நியாயமான அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்கான ஆணையை மக்கள் எனக்கு வழங்கியுள்ளனர். மஹிந்த சிந்தனையின் 54ஆம் பிரிவில் நாம் இதனைத் தெளிவாகக் கூறி

»27

### சாவகச்சேரியில் பொலிஸ் பதிவு

சாவகச்சேரி,ஜன.31

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று பொலிஸார் பதிவுகளை மேற்கொண்டனர்.

நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தை வியா

»27

## எமக்கு வேண்டும் நியாயமான தீர்வே

### அடித்துக் கூறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜன.31

தனிநாடு ஒன்றுக்கான அதிகாரங்களையே கூட்டமைப்பு கேட்கிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கூற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முற்றாக நிராகரித்துவிட்டது.

''தனிநாட்டுக்கான அடிப்படையைக்கொண்ட எந்த அதிகாரங்களையும் நாம் கேட்கவில்லை. சாதாரண முறையில் நியாயமான அதிகாரப்பகிர்வை உலகின் பல நாடுகள் மேற்கொண்டிருக்கின்றன. அவ்வாறானவற்றைத்தான் நாம் வலியுறுத்துகிறோம்'' என்று 'உதயனி'டம் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவ

»27

## பிள்ளையானை எச்சரிக்கிறார் கருணா

கொழும்பு,ஜன 31

கிழக்கு மாகாண முதல்வர் சந்திரகாந்தன், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை என்று முன்வைத்துள்ள கோரிக்கை அவருக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) எச்சரித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது போன்று காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு ஒருபோதும் மாகாணங்களுக்கு வழங்காது என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். மேலும், அவர்களுக்கு காவல்துறை அதிகாரங்கள் எதற்குத் தேவைப்படுகின்றன என்று

»27

## திருமலை மாணவர்களைக் கொன்றது அதிரடிப்படையே

### பஸிலின் வாக்குமூலம்; விக்கிலீக்ஸ் அம்பலம்

கொழும்பு, ஜன.31

திருகோணமலை கடற்கரையில் வைத்து 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஐந்து மாணவர்களை விசேட அதிரடிப்படையினரே படுகொலை செய்ததாக, தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமெரிக்காவிடம் தெரிவித்திருந்தார் என்று விக்கிலீக்ஸ்

»27

## விடுதலைப் புலிகள் மீதான தடை தமிழக அரசுக்குக் கால அவகாசம்

சென்னை,ஜன 31

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கின் போது அரசு பதில் மனுவைத் தாக்கல் செய்யச் சென்னை உயர்நீதிமன்றம் காலஅவகாசம் வழங்கியுள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தடையை நீக்குவது தொடர்பாக ஆராய

»27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய உத்தியோகத்தர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு

## 15 கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன. 31

அரச தாதிய உத்தியோகத்தர்கள் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் இன்று ஒரு மணிநேரப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை இந்தப் பணிப்புறக்கணிப்பில் இவர்கள் ஈடுபடவுள்ளனர். இதற்கு உரிய தீர்வு வழங்கத்தவறின் எதிர்வரும் 9ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அதற்கும் உரிய பதில் கிடைக்கப்பெறாதவிடத்து எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுக்கு முன்பாக அமைதிப்போராட்டம் நடத்தவுள்ளதாகவும் யாழ்.அரச தாதிய உத்தியோகத்தர் சங்க செயலாளர் தெரிவித்தார்.

**இதற்கு உரிய தீர்வு வழங்கத்தவறின் எதிர்வரும் 9ஆம் திகதியும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தாதிய உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர்.**

அரச தாதியர்களுக்கான சீருடைக்கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதில், இடர்க் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும், பராமரிப்புக் கொடுப்பனவை அதிகரித்தல், முன்னைய நடைமுறைப்படி '2ஏ' தரம் சுப்ரா பதவியுயர்வு வழங்கல், 2011 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற சபையை ஸ்தாபித்தல், மருத்துவ சேவையைப்போல் ஊழியர் தர சுற்றுநிருபத்தை வெளியிடல், தரம் 1 பதவியுயர்வை 1.1.1988 இற்கு முன் திகதியிடலும் இந்தத் திகதியிலிருந்து அதற்குரிய நிலுவைகள் வழங்குதலும் தாதிய கல்விமாணிப் பட்டதாரிகளை சேவைக்குள் உள்வாங்குதலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குதலும், வைத்தியர்களுக்கு வழங்கப்படுகின்றமை போல் தமக்கும் தொலைபேசி மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்குதல்.

தாதிய சேவைக்கு வாரத்தில் ஐந்து நாள் வேலை தொடர்பான தெரிவுக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துதல், மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரித்தல், அரச தாதிய உத்தியோகத்தர் சங்க திருத்தப் பிரேரணையை தாதிய சேவை யாப்பில் சேர்த்துக் கொள்ளுதல், ஏனைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், மேலதிக நேரக்கொடுப்பனவுகள் என்பவற்றை மட்டுப்படுத்துவதைத் தவிர்த்தல்,பொதுச் சுற்றுநிருப இலக்கம் 2-19/2009 இனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை அகற்றுதல், விசேட தர தாதிய உத்தியோகத்தர்கள், அதிபர்கள் மற்றும் தாதியப் பணியாளர்களுக்கு தீர்வையற்ற வாகனம் வழங்குதல், ஆட்சேர்ப்பிலும் பதவியுயர்வு என்பவற்றைத் தகுதியை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அதற்குரிய சுற்றுநிருபங்களை வெளியிடல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் புறக்கணிப்பு இடம்பெறவுள்ளது. (ம-4)

# முத்திரைச் சந்திப் பூங்காவை மூடாது தடுத்து நிறுத்துக

## ஜனாதிபதிக்கு தமிழரசுக் கட்சி கடிதம்

முத்திரைச்சந்தியில் உள்ள பூங்காவை வேறு இடத்துக்கு மாற்றும் நடவடிக்கையை நிறுத்தும்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதியிடம் கோரியுள்ளது. இதுகுறித்து அந்தக் கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:


முத்திரைச் சந்தியிலுள்ள பூங்காவை மூடிவிட்டு அந்த நிலத்தை வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக நாம் அறிந்துள்ளோம்.

இந்தப் பூங்கா வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் பிரதேசத்தில் அமைந்தள்ளதால் அதன் பொருத்தத்தையும் முக்கியத்துவத்தையும் பேண நாம் ஆவலாக உள்ளோம். இந்தப் பூங்கா பொதுமக்களதும், குறிப்பாக சிறுவர்களதும் பொழுதுபோக்கு மற்றும் ஓய்விடமாகவும் இருந்து வந்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையால் இந்தப் பூங்கா பராமரிக்கப்பட்டு வந்தபோதும் போர்ச்சூழ்நிலையால் அது தொடர முடியாது போய்விட்டது.

இப்பொழுது போர் முடிவுற்ற நிலையில், நல்லூர் பகுதி மக்களின் நலனுக்காக இந்த பூங்காவினை யாழ்ப்பாணம் மாநகர சபை தொடர்ந்து பராமரிக்க அனுமதிப்பதே நியாயமானதாகும். எனவே இந்த விடயத்தில் தாங்கள் தலையிட்டு குறித்த் காணியைத் தனியார் நிறுவனங்களுக்கோ அரச நிறுவனங்களுக்கோ வழங்கும் நடவடிக்கையை நிறுத்தி உதவுமாறும் வேண்டுகிறோம்- என்றுள்ளது. (ந)

*உங்களுக்கும் காது குத்துறதோ...?*



இலங்கைக்கு வந்துள்ள உலகப் புகழ் பெற்ற குத்துச் சண்டை வீரர் ஹொலிபீல்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தார். இதன்போது மைக் டைசனால் போட்டி ஒன்றில் கடித்துக் குதறப்பட்ட ஹொலி பீல்டின் காதை பார்த்து நலம் விசாரித்தார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவனுக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியில் தங்கியுள்ள மாணவன் ஒருவருக்கு டெங்கு நோய்த் தாக்கம் இருந்தமை இனம்காணப்பட்டதையடுத்து அங்கு சுகாதாரத்துறையினர் புகையூட்டல் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துள்ளனர்.

விடுதியில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர் ஒருவர் சுகயீனம் ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது டெங்கு நோய்த் தாக்கம் இருந்தமை கண்டறியப்பட்டது.

இதனை அடுத்தே கொக்குவில் பகுதிக்கான பொதுச் சுகாதார பகுதியினர் பல்கலைக்கழக விடுதிகளுக்குப் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

பல்கலைக்கழக ஆண்கள், பெண்கள் விடுதிகள் இரண்டிலும் டெங்கு நோய் ஒழிப்புக்கான புகையூட்டல் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

விடுதிகளில் கழிவு நீர் தேங்கி நிற்பதனால் நுளம்பு பெருக்கும் அபாயம் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்தே இந்தப் பகுதியில் டெங்கு ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டது. யாழ். பல்கலைக்கழக வளாகத்திலும் டெங்கு ஒழிப்புக்கான புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.(த-14)

# நிபந்தனை வேண்டாம் திறந்த மனதுடன் வாரீர்

## கூட்டமைப்பை அழைக்கிறார் பஸில்

கொழும்பு, ஜன.31

தீர்வுப் பேச்சில் புலிகளைவிடவும் கூடிய நிபந்தனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதித்துவருகிறது. இப்படி நடந்துகொள்ளாமல், திறந்த மனதுடன் பேசுவதற்குக் கூட்டமைப்பு முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.



**புலிகளைவிடவும் கடுமையான நிபந்தனைகளைக் கூட்டமைப்பு முன்வைக்கின்றது என்கிறார் பஸில்.**

ஜனாதிபதி மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் புலிகளுடன் பேச்சு நடத்த முற்பட்டபோது பல நிபந்தனைகளை புலிகள் முன்வைத்தனர். ஆனால், அவற்றை நாம் நிராகரித்தோம். எமது கூற்றை ஏற்று, அவர்கள் பேச்சுக்கு வந்தனர். எப்போதும் சமரசப் பேச்சுகளில் முன்நிபந்தனை தேவையற்றது. ஆனால், இப்போது புலிகளைவிடவும் கடுமையான நிபந்தனைகளைக் கூட்டமைப்பு முன்வைக்கின்றது. இப்படி நடந்துகொள்ள வேண்டாம். திறந்த மனதுடன்பேசுவோம்; வாருங்கள் - என்றார் அமைச்சர் பஸில். (ஓ-சி)

# விடுவிக்கப்பட்ட போராளிகளை தொடர்ச்சியாகச் சந்திப்போம்

## அமைச்சின் ஆலோசகர் கூறினார்

யாழ்ப்பாணம், ஜன.31

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் குறை நிறைகளைக் கேட்டறியும் சந்திப்புத் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளைச் சமூகத்தில் தனிமைப்படுத்த நாம் விடமாட்டோம். அவர்களை ஒன்றிணைத்துச் செயற்பட வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற முன்னாள் போராளிகளுடனான சந்திப்பின்போது உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

சுமார் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். சுமார் 11 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். சுமார் ஆயிரம் பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர். அவர்களும் விடுவிக்கப்படவுள்ளனர்.

24 புனர்வாழ்வு நிலையங்கள் ஆரம்பத்தில் செயற்பட்டன. தற்போது நான்கு நிலையங்களே மூடப்படாமல் உள்ளன.

விடுவிக்கப்பட்ட அவர்களை அமைச்சு கைவிட மாட்டாது. அவர்களது நலனில் ஆர்வமாக இருக்கிறது.

மாற்றுக் கருத்துகளாலும் மாற்றுச் சிந்தனையாலும் நாம் முன்னாள் உறுப்பினர்களைத் தனிமைப்படுத்த மாட்டோம். பொருளாதார ரீதியாகத் தொழில் ரீதியாக இவர்களுக்குச் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவை இனங்காணப்பட வேண்டும்.

போராடிய காலத்தில் உங்கள் நடவடிக்கைகள் மோசமானதாகக் கருதப்படவில்லை. ஆனால் தற்போது ஜனநாயகச் சூழல். அனைத் [illegible] எனவே ஜனநாயக ரீதியில் பயணிப்பதே அவசியம் - என்றார். (த-14)

# தனிநாட்டு அதிகாரம் கோரவோ நிபந்தனை விதிக்கவோ இல்லை

## நியாயமான தீர்வே தேவை என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜன. 31

தனிநாடு ஒன்றுக்கான அதிகாரங்களையே கூட்டமைப்பு கேட்கிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கூற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முற்றாக நிராகரித்துவிட்டது.

''தனிநாட்டுக்கான அடிப்படையைக்கொண்ட எந்த அதிகாரங்களையும் நாம் கேட்கவில்லை. சாதாரண முறையில் நியாயமான அதிகாரப்பகிர்வை உலகின் பல நாடுகள் மேற்கொண்டு [illegible]. அவ்வாறானவற்றைத்தான் நாம் வலியுறுத்துகிறோம்'' என்று 'உதயன்'னுக்கு கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.



''ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வே எமது தேவை. தீர்வுப் பேச்சுகளில் நாம் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை. புதிய விடயங்களையும் புகுத்தவில்லை. தீர்வுப் பேச்சுகளை ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியும், நானும் நடத்திய பேச்சின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறே நாம் இப்போது கூறுகிறோம். இது கூட்டத்தின் குறிப்பில் கூட தெளிவாக உள்ளது. இது புதிய நிபந்தனையாகப் பார்க்கப்படுகின்றமை எம்மையும், அமைதித் தீர்வொன்றை விரும்பும் எமது மக்களையும் கவலையடையச் செய்துள்ளது. எதுவித புதிய நிபந்தனைகளையும் நாம் விதிக்கவில்லை'' - என்றார் சம்பந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தன்னிச்சையான தீர்வை நோக்கி அரசு; தமிழர் தரப்பு தடம் புரளக் கூடாது!

மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது இவை வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அறுத்து உறுத்துத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இவை இரண்டும் தனிநாட்டுக்கான அதிகாரங்கள் என்றும் அவர் வியாக்கியானம் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவுடனான சந்திப்பின் போது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் செல்லவும் தயார் என்று கூறியவர் இதே ஜனாதிபதிதான். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதற்கே மறுக்கும் அரசு, அதற்கு அப்பால் சென்று எதனைத் தான் தரப்போகிறது என்று பலரும் ஆச்சரியம் தெரிவித்தனர். 13+ அல்ல 13- தான் கிடைக்கப்போகிறது என்று ஐ.தே.க. கிண்டல் அடித்தது. ஜனாதிபதி நேற்று பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்த கருத்து அதனை முழுஅளவில் உறுதிப்படுத்திவிட்டது.

தற்பொழுது அரசிடம் உள்ள தீர்வுப்பொதி பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லாத மாகாணசபை, மேல்சபையாக மூதவை (செனேற்). மூதவை யோசனை கூட்டமைப்பால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தெரிவுக்குழுவுக்கு தனது உறுப்பினர்களை நியமிக்க மறுத்தாலும், கூட்டமைப்பு இல்லாமலேயே தெரிவுக்குழுவை இயங்கவைக்க அரசு முடிவு செய்துவிட்டது. மொத்தத்தில், மற்றொரு அனைத்துக் கட்சி மாநாடாகப் போகிறது தெரிவுக் குழுவின் கூட்டம். முன்னர் அனைத்துக்கட்சி மாநாட்டையும் கூட்டமைப்பு, ஐ.தே. கட்சி, ஜே.வி.பி. ஆகியன புறக்கணித்திருந்தன. அனைத்துக்கட்சி மாநாட்டின் இறுதி அறிக்கை வெளியிடப்படாது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

இன்றைய களநிலையில், அரசின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அமையப் போவது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மற்றொரு திருத்தம் கொண்டுவருவதுதான். அதாவது மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்களை சட்டபூர்வமாக ஒழிக்கமுடிவாகிவிட்டது. அதற்கான அறிவிப்பும் அரசின் தோழமைக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவிடமிருந்து வந்துவிட்டது. மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கும் தீர்மானம் ஒன்றை ஜாதிக ஹெல உறுமய அரசிடம் சமர்ப்பிக்க உள்ளது என்பது பிந்திய தகவல்.

ஆகவே, எந்த ஓர் ஒப்பந்தமும் இலங்கையில் நிரந்தரமானது அல்ல. 1987இல் ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அரசின் ஆதரவுடனான நீதிமன்ற வழக்கின் மூலம் பிரிக்கப்பட்டுவிட்டன. அதே ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்களும் அரசமைப்பில் மற்றொரு திருத்தம் கொண்டுவரப்பட்டு நீக்கப்பட உள்ளன.

தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் எந்த ஓர் உரிமையையும் பறிக்கும் அதிகாரம் நாட்டின் நீதிமன்றத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும் இருப்பதை மறுக்கமுடியாது; அது மாற்றப்படவும் முடியாதது. கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சில் எட்டப்படும் முடிவுகள், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானங்கள், நாடாளுமன்றம் நிறைவேற்றும் தீர்மானங்கள் எவையுமே நிரந்தரமானவை அல்ல.

இத்தகைய தளம்பலான, தடுமாற்றமான சூழமைவில், மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தைக் கோருவது குறித்து கூட்டமைப்பு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தமும் ஏற்கனவே தோல்வி அடைந்த ஒன்று என்பது மறக்கமுடியாதது. அரச தரப்பும், புலிகள் தரப்பும் பேச்சில் ஈடுபட்டிருந்த வேளையில் இரண்டு தரப்புகளும் இராணுவத் தீர்வில் அதிகம் நம்பிக்கை வைத்திருந்ததால், நோர்வேயின் மத்தியஸ்தம் தோல்வி கண்டது. இன்று அப்படியான சூழ்நிலை எதுவும் இல்லை.

அதனால், அரசு தன்னிச்சையான தீர்வை நோக்கிச் செல்ல எத்தனிக்கும் இன்றைய நிலையில், மூன்றாவது தரப்பு நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தை நாடுவதே தமிழர் தரப்புக்கு உள்ள ஒரே மார்க்கம், மாற்றுவழி என்ற நிலையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

ஆனால் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு தனது சொந்த நலனை நோக்காகக் கொண்டு செயற்படாத ஒன்றாக இருந்தால் மட்டுமே அது சுத்த சாத்தியம். ஜெனிவா மாநாட்டுக்கு இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில் தமிழர் தரப்பு அவதானமாகச் செயற்படவேண்டிய காலம் இது. எந்த ஓர் அவசர முடிவும் போருக்குப் பின்னரான சகல முயற்சிகளையும் நாசமாக்கி விடக் கூடியது.

இன்றைய பல்தேசிய (Multi National) பொருளாதாரக் கூட்டமைப்பில், கன்னை பிரிந்து அல்லது குழுமம் சேர்ந்து, அபிவிருத்திக்கான நட்பு, உதவி என்ற போர்வைகளில் குறிப்பிட்ட நாடுகளின் வளங்களைச் சுரண்டித் தமக்குப் பல வகைகளில் நயம் தேடுவதைக் குறிவைத்தே மத்தியஸ்தத்துக்குச் செல்கின்றன. அதற்கு உள்நோக்கமும் இல்லாத நாடு எது, அல்லது நாடுகள் எவை என்று இனம் காண்பது சந்திரனைப் பூமிக்குக் கொண்டு வருவது போலாகும்.

அருகில் உள்ள பெரிய நாடான இந்தியா செய்த மத்தியஸ்தமும், அதனால் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தமும் அமிழ்த்தப்பட்ட புறநிலையில், தனக்கு நியாயம் தேடித் தருமாறு எந்த நாட்டிடம் கேட்பது, கேட்க முடியும் என்பதில் தமிழர் தரப்பு அவசரப்பட்டுத் தப்புத்தண்டா செய்துவிடக் கூடாது.

தனக்கு உதவக்கூடிய தரப்பை அல்லது கூட்டுத்தரப்புகளை இனங்காண்பதில், தனக்கு உதவிக்கு அழைப்பதில், எத்தகைய அரசியல் தந்திரோபாயத்தை, எந்தவகை சார்ந்த நுண்மதித் திறனைக் கையாள்வது என்ற மதிநுட்பத்துடன் செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களிடையே உள்ள அரசியல்வாதிகளை மட்டுமன்றி, சிவில் சமூகத்தில் இனங்காணக்கூடிய புத்திஜீவிகளையும், புலமை சார்ந்தவர்களையும் ஒன்றிணைத்து ஒருமித்த மனதுடன் எங்களுக்கு நலன் செய்ய வல்லவர்கள் யார் என்று தீர்மானிப்பது மிக மிக முக்கியம். தாங்களே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் என்ற மேலோங்கித் தனத்துடன், அரசியல் தரப்பு மட்டும் தனித்துச் செயற்படக் கூடாது. ஒரு கையால் ஒலி எழுப்ப முடியாது; இரண்டு கரங்கள் சேர்ந்தால் மட்டுமே ஓசை வரும்; அதிலிருந்தே தாளம் பிறக்க முடியும்.

தத்தமது பதவி, மேதாவிலாசம், அரசியல் வேற்றுமை, தனிநபர் உயர்ச்சி என்பன போன்ற சுயநலத்தனங்களை நிலத்தில் புதைத்துவிட்டு, காரியத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபடவேண்டும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்ற நிலையை உருவாக்கினால் மட்டுமே, எமக்குச் சேரவேண்டிய உரிமைகளுக்காக ஆணித்தரமாக வாதாடவும், உதவவும் வல்ல மத்தியஸ்தரை இனங்காண முடியும்.

தமிழ் மக்களின் உடனடித் தேவை அதுவே.

# நீதிமன்றத் தீர்ப்புகளையடுத்து ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு

இலங்கை அதிபர் சேவைக்கு 2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, அதை அடுத்து நடைபெற்ற நேர்முகப்பரீட்சை மற்றும் நியமனங்கள் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களினால் மேலும் பல ஆசிரியர்கள் அதிபர்களாகப் பதவி உயர்வு பெறவுள்ளனர்.

அதிபர் சேவை நியமனம் தொடர்பாகக் கடந்த வாரம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை தரம் III, இலங்கை அதிபர் சேவை தரம் -11 ஆகியவற்றில் பதவி உயர்வு பெறத் தவறியவர்களில் பலர் தகுதி பெறவுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 பதவி உயர்வு தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை அடுத்து போட்டிப் பரீட்சையில் 82 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களின் நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் II பதவி உயர்வு தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை இரண்டிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளி 221க்கும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வு போட்டிப் பரீட்சைக்கு 2005 ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2006 ஆம் ஆண்டு பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சைகள் முடிவுகளின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நியமனங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட நியமனங்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கூட்டாக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இலங்கை அதிபர் சேவை தரம் III தொடர்பான வழக்கின் தீர்ப்பு கடந்த 24 ஆம் திகதியும் இலங்கை அதிபர் சேவை தரம் II தொடர்பான தீர்ப்பு கடந்த 26 ஆம் திகதியும் வழங்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பாகக் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின்செயலாளர்யோசெப்ஸ்ராலின்,

''நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் பல ஆசிரியர்கள் அதிபர் சேவைத் தரங்களில் பதவி உயர்வு பெறவுள்ளனர். இது ஆசிரியர் சேவைக்கு கிடைத்த பெரும் வெற்றி'' எனக் கூறினார். (த-11)

# சவேந்திர சில்வா நியமனம் அமெ. அமைப்புகள் எதிர்ப்பு

நியூயோர்க்,ஜன 31

ஐ.நா அமைதிகாக்கும் நடவடிக்கைளுக்கான சிறப்பு ஆலோசனைக்குழுவுக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில், அமெரிக்கா வைத்தளமாக கொண்ட மனித உரிமை அமைப்புகள் பலவும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் இந்த நியமனத்தை நிராகரிக்குமாறும் ஐ.நா பொதுச் செயலரிடம் கோரியுள்ளன.

அந்த அமைப்புகள் இணைந்து இது தொடர்பாகக் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

பொதுமக்கள் கொல்லப்பட்ட, கணக்கிடப்படதாத அளவிலானோர் பாதிக்கப்பட்ட, அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள் மீறப்பட்ட, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா முக்கிய பாத்திரம் வகித்தவர் என்று இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மனிதாபிமான நடவடிக்கை என்று இலங்கை அரசு இதனைக் கூறியுள்ள போதும், ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இந்தப்போரில் போர்க்குற்றங்களும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றுள்ளதற்கான நம்பகமான சாட்சியங்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.ஐ.நா பொதுச் செயலரிடம் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கிய 58 ஆவது டிவிசன் இந்தக் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டதாக விவாதிக்கப்பட்டுள்ளது.ஐ.நா அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக் குழுவுக்கு நியமிக்கப்படும் ஒருவரது தலைமைத்துவ ஆற்றலும், குற்றச்சாட்டுகளற்ற அப்பழுக்கற்ற தன்மையும் தகைமைகளாகக் கருதப்படவேண்டும்.

சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டால், சிறப்பு ஆலோசனைக் குழுவுக்கான அவரது நியமனம் உலகத்துக்கு திகைப்பூட்டும் செய்தியாக அமையும்.எனவே ஐ.நா பொதுசெயலர் பான் கீ மூன் சவேந்திர சில்வாவின் இந்த நியமனத்தை நிராகரிக்க வேண்டும் அல்லது அவரது நியமனத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்- என்றும் அந்த அமைப்புகள் கோரியுள்ளன. (த)

## சீனா கைவிட்ட காணியை வாங்குகின்றது இந்தியா

கொழும்பு,ஜன 31

கொழும்பில் மிகவும் ஆடம்பர ஹோட்டலை நிர்மாணிக்கும் முகமாக காணியொன்றுக்கு இந்தியாவின் ஐ.டி.சி குழுமம், இலங்கை அரசுக்கு முற்பணத்தைச் செலுத்தியுள்ளது.

கொழும்பு காலி முகத்திடலில் அமையவுள்ள இந்த ஹோட்டலுக்காக 50 வீத கொடுப்பனவான 73.5 மில்லியன் டொலர்களை இந்திய நிறுவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் 300 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் இந்த ஹோட்டல் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தக்காணியை சீனாவின் சி.ஏ.டி. ஐ.சி நிறுவனம் கொள்வனவு செய்த போதும் காணி விற்பனை தொடர்பான கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்பட்டமையால், இலங்கை அரசு முற்பணக் கொடுப் பனவை சீன நிறுவனத்துக்கு திருப்பியளித்தது.

இந்தக்காணி ஏற்கனவே ஹொங்கொங்கின் சங்க்ரி லா குழுமம் ஹோட்டல் அமைப்பதற்கான காலி முகத்திடலில் கொள்வனவு செய்துள்ள காணியை ஒட்டியதாக அமைந்துள்ளது. (த)

## கிழக்கு மாகாண சபைத் தீர்மானம் தமிழ்க் கூட்டமைப்பு வரவேற்பு

மட்டக்களப்பு,ஜன 31

மாகாணத்துக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்புத் தெரிவித்துள்ளது. கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் தலைமையிலான கிழக்கு மாகாண சபையில் கடந்த வெள்ளியன்று இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

மாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோரும் சந்திர காந்தனின் நகர்வுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான எமது கோரிக்கைகளை இலங்கை அரசு தொடர்ந்து புறக்கணிக்குமேயானால் இதுபோன்ற மோசமான விடயங்கள் நடக்கும்.

தமிழர் பிரச்சினைக்கு இலங்கை அரசு எந்தப் பதிலையும் வழங்கவில்லை. மாறாக தமிழர்களின் விருப்பங்களுக்கு மாறான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது. அவர்கள் கிழக்கு மாகாண சபையின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

ஒருமனதாக அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் மத்திய அரசு உடனடியாக அதுபற்றிக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். -என்றார் சுரேஷ். (த)

## நிகழ்வுகள் இன்று

**நாட்டிய நிகழ்வு**

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நாட்டியாஞ்சலி நிகழ்வு மாலை 6.30 மணிக்கு யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் கலந்துகொள்வார்.(த-313)

**விளையாட்டு விழா**

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டு விழா நண்பகல் 12.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் என். கருணாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொள்வார். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீடுகளுக்கு அருகில் வடிகால்; பிரதேச மக்கள் கொதிப்பு

நெடுங்கேணி, ஜன.31

வீடுகளுக்கு முன்பாக கழிவுநீர் வடிகால் அமைக்கப்படுவதால் குடியிருப்பாளர்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

நெடுங்கேணி தெற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள பத்து வீட்டுத் திட்டம் 1982 இல் அமைக்கப்பட்டது. அப்போதைய பிரதேச செயலர் பாலசுந்தரம் இந்த வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கான சகல முயற்சிகளையும் எடுத்திருந்தார்.

தற்போது வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள், வீடுகளுக்கு அருகில் வடிகால்களை அமைத்து வருவதால் அங்குள்ள மக்கள் வீடுகளில் வசிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.



**பல்வேறு தடவைகள் இடம்பெயர்ந்து துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் தமது வீடுகளைப் புனரமைப்பதில் ஈடுபட்டு வரும்போது, இந்த வடிகால்கள் பெரும் இடையூறாக மாறியுள்ளன.**

பல்வேறு தடவைகள் இடம்பெயர்ந்து துன்பங்களை அனுபவித்து வந்த இந்த மக்கள் தமது வீடுகளைப் புனரமைப்பதில் ஈடுபட்டு வரும்போது, இந்த வடிகால்கள் பெரும் இடையூறாக மாறியுள்ளன.

இந்த வீடுகளுக்கு எதிரில் அரச காணிகள் உள்ளன. அதில் வீதிக்குத் தேவையான அளவு காணியை எடுத்துக் கொள்ள முடியும்.

ஆனால் மக்களின் குடியிருப்புக் காணிகளை வடிகால்கள் அமைப்பதற்கெனச் சுவீகரிப்பதானது இங்குள்ள மக்களிடையே பெரும் கவலையையும், கொதிப்பையும் உருவாக்கியுள்ளது. (க-435)

# மணல் அனுமதிக்கு உரிமைக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.31

மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்கும் உரிமையைப் பிரதேச சபை நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பிரதேச சபைத் தலைவர் நா.வை. குகராசாவினால் இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய மணல் அனுமதி இன்று பல்வேறு தரப்பினர் கைகளிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்கள் இழக்கப்படுகின்றன.

இன்று பல்வேறு சேவைகளை வழங்குவதற்கும், வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் பிரதேச சபைக்கு நிதி தேவைப்படுகின்றது. இதில் ஒரு பெரும் பகுதியை இந்த மணல் அனுமதி வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இது இப்போது பிரதேச சபைக்குக் கிடைப்பதில்லை.

மேலும் எமது பிரதேசத்திலிருந்து மணல், மண் போன்ற

**பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய மணல் அனுமதி இன்று பல்வேறு தரப்பினர் கைகளிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்கள் இழக்கப்படுகின்றன.**

அரிய வளங்கள் சட்ட விரோதமான முறையில் பெருமளவில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் சூழலுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகின்றது. சூழலையும், சுற்றாடலையும் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு பிரதேச சபைக்கு உண்டு.

எனவே பிரதேச சபைக்கு வருமானத்தை ஈட்டவும், சூழலைப் பாதுகாக்கவும் மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்கும் உரிமையை பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (க-6)

# எமனாக மாறியுள்ள இ.போ.ச. பஸ்கள்

மன்னார்,ஜன.31

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் அரச பஸ்கள் மோதிய விபத்துச் சம்பவங்களின் போது 8 பேர் மரணமாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, மன்னார்- நானாட்டான் பிராதன வீதி மற்றும் ஏ-32 வீதி ஆகிய வீதிகளிலே மேற்படி விபத்துச் சம்பவங்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

குறித்த விபத்துக்களில் தொடர்புடைய அரச பஸ்கள் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. இதேவேளை சில சாரதிகள் அரசியல் செல்வாக்குடன் நியமிக்கப்படுவதனால் பல பிரச்சினைகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இவர்களால் ஒழுங்கான முறையில் பஸ்ஸைச் செலுத்த

**ஏ–32 வீதி ஆகிய வீதிகளிலே விபத்துச் சம்பவங்கள் அதிகம்.**

முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இத்தகைய சாரதிகளை வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் பிடித்து வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

எனவே அரச போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ்களைச் செலுத்தும் சாரதிகள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகக் இருக்க வேண்டும் எனவும் இனி வரும் காலங்களில் நியமிக்கப்படுபவர்கள் அரசியல் செல்வாக்குகள் இல்லாது, திறமை உள்ளவர்களாக இருக்க வேண்டுமெனவும் மன்னார் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-601)



*வவுனியா கந்தசாமி கோயில் வீதியிலுள்ள கவிச் சக்கரவர்த்தி கம்பனின் சிலையும், அது அமைந்துள்ள இடமும் பராமரிப்பின்றி மோசமான நிலையில் காணப்படுகின்றன. (421)*

# 'நாய் கடிக்கும் கவனம்'

மன்னார், ஜன.31

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் அத்துமீறிக் காணப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலையில் பணிபுரிவோர், நோயாளிகள் மற்றும் பொதுமக்களெனப் பலரும் பாதிப்புக்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இங்கு சுமார் 30 இற்கும் மேற்பட்ட நாய்கள் நிரந்தரமாகத் தங்கியுள்ளன. இவை நோயாளர் விடுதி, பிரேத அறை, உணவகம் மற்றும் வெளியிடங்களில் கேட்பாரற்ற நிலையில் சுதந்திரமாக உலாவி வருகின்றன. அத்துடன் தமது கண்களில் தென்படுபவர்களை விரட்டுவதுடன் கடிக்கவும் முயற்சி செய்கின்றன.

இதனால் இங்குள்ளவர்களும், வருவோரும் அச்சத்துடனேயே காணப்படுகின்றனர். எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் இந்த நாய்களை உடனடியாக இங்கிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-601)

# தமிழ்ச் சங்கத்தால் போட்டிகள்

கிளிநொச்சி, ஜன.31

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் மாணவர்களிடையே இந்த ஆண்டும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் ஆண்டுதோறும் திருக்குறள் மாநாடு நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு 10 வது திருக்குறள் மாநாடு நடைபெறுவதையொட்டி வழமைபோல் மாணவர்களுக்கான திருக்குறள், தமிழ் இலக்கியத் திறன் தேர்வும், நாவன்மைப் போட்டியும், பாடசாலைகளுக்கிடையே குறள் இசை, சங்கக் கொடிப்பாடல், தமிழ் இசைப்பாடல், நாட்டுப்புறக் கலைகள், சமூக இலக்கிய நாடகங்கள், நாட்டுக்கூத்து, தனி ஆடல், சிறுவர் நாடகம், ஆகியபோட்டிகளும் நடைபெற்றவுள்ளன.

இந்தப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்டுப் பின்னர் மாவட்ட மட்டத்தில் நடைபெறவிருக்கின்றன. இவற்றில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள் கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள சிலப்பதிகார விழா, தமிழ் மகள் ஔவையார் விழா, தமிழ்ச் சான்றோர் விழா, இலக்கிய விழா ஆகியவற்றிலும், மாவட்ட மட்டத்தில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டிலும் வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சுற்றறிக்கையும் வேண்டுகைப் படிவங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எனவே இப் போட்டிகளில் அதிகளவான மாணவர்களைப் பங்குபற்றச் செய்யுமாறும், இவற்றுக்கான வேண்டுகைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் தமிழ்ச் சங்கச் செயலர் வே.இறைபிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (க)

# விரட்டப்பட்ட தமிழ்க் குடும்பங்கள்

**இரவு நேரத்தில் ஓர் அரசியல் பிரதிநிதியுடன் சென்று ஆவணங்களைப் பறித்துச் செல்வதற்கான அவசியம் பிரதேச செயலாளருக்கு ஏன் ஏற்பட்டது என்று கேட்கிறார் வினோ எம்.பி.**

மன்னார், ஜன.31

நடுத்தெருவில் நிற்கும் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மன்னார் அரச அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் இந்தியாவிலிருந்து தமது சொந்தப் பிரதேசத்தில் மீள் குடியமரும் நோக்குடன் வருகை தந்த 10 அங்கத்தவர்களைக் கொண்ட 3 குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்ற அவல நிலை தொடர்பாகவே அவர் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

இந்த மூன்று குடும்பங்களும் இந்தியாவிலிருந்து திரும்பி வந்து கடந்த ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து தற்காலிகமாக நானாட்டான் பிரதேசத்திலுள்ள தோமஸ்புரி கிராமத்தில் வசித்த நிலையில் தமது சுயவிருப்பின் பேரில் கடந்த ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து தமது குடும்பப் பதிவை நீக்கிவிட்டு மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தில் தமது உறவினர் வீட்டில் தங்கியிருக்கின்றனர். அங்கு அவர்களுக்குக் குடும்பப் பதிவு மேற்கொள்ளப்பட்டு உலர் உணவு முத்திரையும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி இரவு 9 மணியளவில் திடீரென அங்கு சென்ற மாந்தை மேற்குப் பிரதேச செயலாளரும், மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் அக்குடும்பங்களது பதிவுப் புத்தகங்களையும், உலர் உணவு முத்திரையையும் பறித்தெடுத்து விட்டு அடுத்த நாள் கிராம சேவையாளரிடம் சென்று பெற்றுச் செல்லுமாறு கூறியுள்ளனர்.

அடுத்த நாள் கிராம சேவையாளரைச் சந்தித்த போது அக் குடும்பங்களது அனைத்துப் பதிவுகளும் நீக்கம் செய்யப்பட்டு, நிவாரணங்களும் நீக்கப்பட்டதாகவும், அக்குடும்பங்களைச் சன்னார் கிராமத்திலிருந்து வெளியேறுமாறு தாம் அறிவுறுத்தப்பட்டதாகவும் கூறிப் பிரதேச செயலாளரின் கடிதம் காண்பிக்கப்பட்டது. பதிவுகளும், உதவிகளும் வழங்கப்பட்டுச் சுமார் மூன்று மாதங்களின் பின் அனைத்தும் நிறுத்தப்பட்டு வெளியேற்றல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் காரணம் அவர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை.

இதன் மர்மம் புரியாமல் அம்மூன்று குடும்பங்களும் நடுத்தெருவில் நிற்கின்றன. இரவு நேரத்தில் ஓர் அரசியல் பிரதிநிதியுடன் சென்று ஆவணங்களைப் பறித்துச் செல்வதற்கான அவசியம் பிரதேச செயலாளருக்கு ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். பதிவு செய்வதற்கும், நிவாரணங்கள் வழங்குவதற்கும் அனுமதி வழங்கிய அதிகாரிகள், மூன்று மாதத்தினுள் தமது முடிவை மாற்றி அமைத்துக் கொண்டதன் காரணத்தைத் தெரிந்து கொள்ளவும் விரும்புகின்றேன்.


எனவே நீதியான விசாரணை ஒன்றை மேற்கொண்டு விரும்பிய இடத்தில் இந்தக் குடும்பங்கள் குடியமர்ந்து வாழவும், இடம்பெயர்ந்தோருக்கான சகல வசதிகளையும் அவர்களுக்கு வழங்கவும் ஒழுங்குகள் செய்து கொடுக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்று இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சொகுசுப் பயணத்துக்கு இரவிரவாக வீதிக்கு 'காப்பெற்'

## யாழ்.மத்திய கல்லூரியை சுற்றிவரப் போடப்பட்டது





யாழ்ப்பாணம், ஜன.31

ஜனாதிபதியின் சொகுசுப் பயணத்துக்காக யாழ். மத்திய கல்லூரியைச் சூழவுள்ள வீதிகள் அனைத்தும் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதற்கான பணிகள் இரவிரவாக இடம் பெற்று வருகின்றன.

ஏற்கனவே வேம்படி மகளிர் கல்லூரி வீதி, சப்பல் வீதி என்பன காப்பெற் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாகச் செல்லும் இரு வழிப் பாதை வீதிகள் நேற்று முன்தினம் இரவிரவாகத் திருத்தப்பட்டன.

**யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப் பட்டுள்ள நீச்சல் தடாகத்தைத் திறந்து வைப்பதற்காக எதிர்வரும் 5ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.**

யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தைத் திறந்து வைப்பதற்காக எதிர்வரும் 5ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இதனை முன்னிட்டே இந்தப் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

நீச்சல் தடாகம் செல்லும் பகுதியில் உள்ள உள்ளக வீதியை அமைக்கும் பணிகளும் துரிதப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு அவரின் கண்ணில் படும் வீதிகளை அவசர அவசரமாகத் திருத்துவதில் அதிகாரிகள் முழுவீச்சில் செயற்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, நகரின் மத்தியில் சத்திரச் சந்திக்கு அண்மித்த கே.கே.எஸ். வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத் அளவுக்குப் பெரும் சேதமடைந்து காணப்படுகின்றது.

போக்குவரத்து நெரிசல் மிக்க இந்த வீதி கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளது. வீதியின் நடுப்பகுதி கூட பெரும் சேதங்களுக்கு உள்ளாகியே காணப்படுகின் றது.

ஜனாதிபதியின் வருகையோடு இந்த வீதிக்கும் விடிவு கிடைக்குமா என்று வீதிப் பாவனையாளர் கேட்கின்றனர். (ம-17)

## பிள்ளைகளை தேடும் தாய்

கடந்த போர்ச் சூழலில் உறவினர்களால் கைவிட்ட நிலையில் கைதடி முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வரும் வயோதிப மாது ஒருவர் தனது பிள்ளைகள், உறவினர்களைத் தேடி அலைவதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சொந்த இடமாகக் கொண்ட செல்லர் பூமணி (வயது- 82) என்ற வயோதிப மாதுவே தனது உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார்.

சிவசுப்பிரமணியம் (வாழைச்சேனை), மகாலட்சுமி (ஆசிரியை - மன்னம்பிட்டிய), இராசலட்சுமி ஆகியோர் தனது பிள்ளைகள் என்றும் அந்த வயோதிப மாது தெரிவித்துள்ளார்.

இந்த வயோதிப மாதுவைப் பற்றித் தெரிந்த உறவினர்கள் உடனடியாக இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (த-17)

## ஓட்டோ சேவையை ஒழுங்கமைக்க திட்டம்

அச்சுவேலி, ஜன.31

யாழ்.மாவட்டத்தில் ஓட்டோ சேவையை ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைகளின் கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கம் மேற்கொண்டு வருகிறது. இதற்கான ஆலோசனைகளை வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கி வருகின்றார்.

யாழ்.மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல ஓட்டோ உரிமையாளர்களுக்கும் சங்கத்தின் ஊடாக அங்கத்துவ அடையாள அட்டையும் பிராந்தியக் குறியீடும் வழங்கப்படவுள்ளன.

இந்த வகையில் பிரதேச ரீதியில் சுன்னாகம், சங்கானை , மானிப்பாய், அச்சுவேலி, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் கிளைச் சங்கங்களின் உறுப்பினர்களை பதிவு செய்யும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிளைச் சங்க உறுப்பினர்களின் விவரங்களை முனீஸ்வரன் வீதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறும் கூறப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு கணிசமான அளவு ஓட்டோக்கள் பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது.

சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஓட்டோக்களை இனங்காணுவதற்கு முடியாமல் இருப்பதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக வேண்டி வருகிறது.

**ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கு பிரதேச ரீதியில் குறியீடுகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன்உரியமுறையில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் வழங்கப்பட்ட உரிமையாளர் அடையாள அட்டையை ஓட்டோ சாரதிகள் வைத்திருக்க வேண்டும்.**

ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கு பிரதேச ரீதியில் குறியீடுகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் வழங்கப்பட்ட உரிமையாளர் அடையாள அட்டையை ஓட்டோ சாரதிகள் வைத்திருக்க வேண்டும்.

தொழிலைச் சீராக்கல் செய்யும் வகையில் பதிவுகளை மேற்கொண்டு உரிமையாளர் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு ஓட்டோ உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் ஓட்டோ பயணத்துக்கான கட்டண அறவீடு மற்றும் பயணத் தூரத்தைக் கண்டறியக் கூடிய கருவிகள் என்பனவும் பயன்படுத்தப்படலாம் எனவும் கூறப்பட்டது. (ம-11)

## வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்துக் காப்பு அபகரிப்பு

வீதியில் வந்து கொண்டிருந்த வயோதிபமாதுவின் கழுத்தை நெரித்துக் கொண்டு அவரது கையில் அணிந்திருந்த காப்பு அபகரிக்கப்பட்ட சம்பவம் சுன்னாகம் கதிரமலை வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தக் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இத்தகைய மற்றுமொரு முயற்சி கடந்த 19ஆம் திகதியும் இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று வீதியால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த அரச உத்தியோகஸ்த்தரான பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் சங்கிலியை அறுக்க முயன்ற போதிலும் அப்பெண் சமயோசிதமாகச் செயற்பட்டதால் அவர்களது முயற்சி கைகூடவில்லை.

பிரதேசப் பொலிஸாரும் விழிப்புக் குழுவினரும் இணைந்து இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ம-38)

## 104 பணியாளருக்கு நலனோம்பு நிதி

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.மாவட்டக் கூட்டுறவு நலனோம்பு சங்கம் கடந்த வருடத்தில் 104 பணியாளர்களுக்கு நலனோம்பு நிதியாக 3 லட்சத்து 88 ஆயிரத்து 849 ரூபா கொடுப்பனவை வழங்கியுள்ளது.

மரணக் கொடுப்பனவாக ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 375 ரூபாவும் விபத்துக்காக 22 ஆயிரத்து 500 ரூபாவும் ஓய்வுபெற்ற பணியாளர் கொடுப்பனவாக ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 974 ரூபாவும் நலனோம்பு நிதியில் இருந்து வழங்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் எஸ் கெங்காதரன் தெரிவித்தார்.

சங்கப் பணியாளர்களின் இயற்கை மரணம், விபத்துக்களால் இடம்பெறும் மரணம், விபத்துக்களால் பாதிப்படைதல் போன்றவற்றுக்கான கொடுப்பனவாக இது வழங்கப்பட்டுள்ளது.

**சங்கப் பணியாளர்களின் இயற்கை மரணம், விபத்துக்களால் இடம்பெறும் மரணம், விபத்துக்களால் பாதிப்படைதல் போன்றவற்றுக்கான கொடுப்பனவாக இது வழங்கப்பட்டுள்ளது.**

கடந்த வருடத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட பணியாளர்களில் 104 பேருக்கு இந்த நலனோம்பு சங்கம் தனது கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

இதேவேளை, இந்த நலனோம்புச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கிவரும் கொடுப்பனவுகளின் தொகையை இந்த ஆண்டில் இருந்து அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## கொலை சந்தேகநபருக்கு பிணை வழங்க மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

ஊர்காவற்றுறை நாரந்தனையில் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் சந்தேகநபருக்கு பிணை வழங்க யாழ். மேல் நீதிமன்றம் மறுத்துள்ளது. அத்துடன் அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை, நாரந்தனையைச் சேர்ந்த போல் றொபின்சன் றொனி என்பவர், அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் சம்பவம் நடந்து மூன்றாம் நாள் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அந்த வழக்கு பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ். மேல் நீதி மன்றுக்கு மாற்றப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்றில் இந்த வழக்கு நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் கடந்தவாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி சந்தேகநபரை பிணையில் விடுவிக்கும்படி நீதிபதியிடம் மனுத் தாக்கல் செய்தார்.

சந்தேகநபர் பிணையில் விடுக்கப்படும் பட்சத்தில் அவர் சாட்சிகளை அச்சுறுத்த அல்லது வேறுவகையில் சாட்சியமளிப்பதைத் தடுக்க முயலக்கூடும் எனவும் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் வரை பிணை வழங்க முடியாது எனவும் கூறி அரச சட்டவாதி இதனை ஆட்சேபித்தார்.

இதனையடுத்து பிணை நிராகரிக்கப்பட்டது. (ம-4)

## தீயணைப்புக் கருவியை எவ்வாறு பயன்படுத்துவது?



யாழ்ப்பாணம், ஜன.31

குடாநாட்டிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களின் பணியாளர்கள் தீயணைப்புக் கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற இந்தப் பயிற்சி நெறியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் மற்றும் கூட்டுறவுச் சபை ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தீயணைப்புப் பயிற்சி ஆலோசகர் எஸ்.ஜெயவர்த்தனா இந்தப் பயிற்சி நெறியை வழங்கினார். இதில் திடீர் தீ ஏற்பட்டால் அதை எவ்வாறு அணைப்பது, தீ விபத்தை எவ்வாறு தவிர்ப்பது போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அண்மையில் கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தின்போது அங்கு நின்ற பணியாளர்கள் தீயணைப்புக் கருவியை இயக்குவதற்குச் சிரமப்பட்டுள்ளனர்.

இதனை அவதானித்த நிலையிலேயே இந்தப் பயிற்சி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் முடங்கியுள்ள பஸ்களுக்கு உதிரிப்பாகங்கள்

## உடனடியாக வழங்கப்படும் என்கிறார் போக்குவரத்துத்துறை அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன.31

பருத்தித்துறைச் சாலையில் முடங்கியிருக்கும் பஸ்களுக்கான உதிரிப் பாகங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே பஸ்களை உடனடியாக சேவையில் ஈடுபடுத்த முன்வாருங்கள் என்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார வெல்கம அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை டிப்போவுக்கு இவர் சென்றபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

**உதிரிப் பாகங்கள் இன்றி இ.போ.ச. பஸ்கள் முடங்கியிருப்பதை அமைச்சர் நேரில் பார்வையிட்டார்**

வடபிராந்திய பிரதம முகாமையாளர் க.கணேசபிள்ளை மற்றும் பருத்தித் துறை, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு சாலைகளதும் உயர் அதிகாரிகளுடன் பருத்தித் துறைசாலையில் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த போதே அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

பருத்தித்துறை சாலையின் குறைநிறைகளை நேரில் பார்வையிட்ட அமைச்சர் குமார வெல்கம, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 13 பஸ்களும் ஏன் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என்று அதிகாரிகளை வினவினார்.

உதிரிப் பாகங்களின்றியே அவை சேவையிலிருந்து முடங்கியிருக்கின்றன என்று அமைச்சருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

கொழும்பு தலைமையகத்திலுள்ள களஞ்சியத்திலிருந்து பஸ்களுக்கான உதிரிப் பாகங்களைப் பெற்றுத் தருகிறேன். ஒரு மாத காலத்துக்குள் முடியுமானவரை சேவையில் அவற்றை ஈடுபடுத்துங்கள் என்று அமைச்சர் பணித்தார். (ம-14)

## மதுவில் மிதந்த சாரதி காத்திருந்த பயணிகள்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.- கொழும்பு பயணிகள் பஸ் சாரதி மதுபோதையில் தள்ளாடிக் கொண்டிருந்ததால் யாழ்.நகரில் மணிக் கணக்கில் காத்திருந்த பயணிகள் பின்னர் பிறிதொரு பஸ்ஸில் ஏறித் தமது பயணத்தைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ். நகரில் கடந்த வாரம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ்.- கொழும்பு பயணிகள் தனியார்பஸ்ஸில்கொழும்பு செல்வதற்காக ஏற்கனவே முன்பதிவு செய்திருந்தனர். குறிப்பிட்டளவு பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ். நகருக்கு வந்து அந்த பஸ் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பஸ்ஸில் பயணிகள் நிறைந்த நிலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் அந்த பஸ்ஸின் சாரதி பயணத்துக்கான ஏற்பாடு எதையும் செய்யவில்லை.

பொறுமை இழந்த பயணிகள் பஸ் நடத்துநரையும் சாரதியையும் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தனர். பயணிகள் சிலர் பஸ்ஸின் 'ஹோர்னை' அடித்தும் சாரதி வரவில்லை. சினமடைந்த பயணிகள் 'ஹோர்னை' தொடர்ந்து ஒலியெழுப்பும் வகையில் அழுத்திவிட்டனர். இதன் போதும் பயன்கிட்டவில்லை. இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் மக்கள் பெரும் விசனம் அடைந்தனர்.

பின்னர் பிறிதொரு பஸ் அங்கு வந்து நின்றது. அனைவரையும் அந்த பஸ்ஸில் ஏறுமாறு கூறப்பட்டது. பயணிகளும் அவ்வாறு செய்தனர். பின்னர்தான் தெரிய வந்தது பஸ் சாரதி மதுபோதையில் எழுந்திருக்கக் கூட முடியாதளவுக்கு மிதந்து கொண்டிருக்கிறார் என்பது.

யாழ்.- கொழும்பு பயணிகள் பஸ் ஒன்று போக்குவரத்துச் சேவையின்றி தனியார் பஸ் நிலையத்தில் நிற்பது தெரிய வந்ததையடுத்து அந்த பஸ் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக அங்கு கடமையில் இருந்த பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## குற்றச்செய்திகள்

யாழ்ப்பாணம், ஜன. 31

ரயர்கள் தேய்ந்த பயணிகள் பஸ்ஸில் மிதிபலகையில் பயணிகளை நிற்க வைத்து, ஆபத்தான முறையில் பஸ்ஸைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு யாழ். நீதிமன்றம் இரண்டாயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பஸ்ஸில் பயணிகள் நிறைந்து வழிய, மிதிபலகையில் நின்று தொங்கியவாறு பயணித்துக் கொண்டிருந்த உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றையே, யாழ். பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

அதன் சாரதிக்கு எதிராக ரயர்கள் தேய்ந்த நிலையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றமை, மிதிப் பலகையில் பயணிகளை நிற்க வைத்துச் சென்றமை, ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.


விசாரணையின் போது சந்தேகநபர்தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு இரண்டாயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜன.31

ஒட்டோ ஒன்றில் கன்றுக்குட்டி ஒன்றை ஏற்றிச் சென்ற நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்பட்டார். அவருக்கு நீதிமன்றில் எஸ்.எம்.மகேந்திரராஜா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நபர் கன்றுக் குட்டியைக் கொண்டு செல்ல அனுமதி பெற்றிருந்தார் எனினும் அதனை ஓட்டோவில் கொண்டு செல்ல அனுமதி பெறவில்லை. இதனால் மிருகவதைச் சட்டத்தின் கீழ் அவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து சனிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர். அதன் போதே பிரஸ்தாப நபருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)



மகாத்மா காந்தியின் 64 ஆவது ஆண்டு நிறைவு தினமாகிய கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் மலர் மாலை அணிவிக்கிறார். (த-23)

## 25,656 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை

**காய்ச்சல், சிறு விபத்துகளால் ஏற்பட்ட காயங்களுக்காகவே அதிகமாகச் சிகிச்சை பெற்றுள்ளனர்**

யாழ்ப்பாணம், ஜன.31

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் 25 ஆயிரத்து 656 பேர் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் மாலை நேரங்களில் மட்டும் சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

சண்டிலிப்பாய், ஆனைக் கோட்டை, சுதுமலை, உடுவில், சங்குவேலி, தாவடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களின் வைத்திய சேவைக்காக இயங்கிவரும் இந்த வைத்தியசாலையில் கடந்த வருடம் 25 ஆயிரத்து 656 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் காய்ச்சல், சிறு விபத்துகளால் ஏற்பட்ட காயங்களுக்காகவே அதிகமாகச் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் மேலதிக சிகிச்சைக்காக அதிகமானோர் யாழ். போதனாவைத்திய சாலைக்கு அனுப்பட்டு சிகிச்சை பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-313-100)

## பரு.நீதிமன்றச் செயற்பாடுகள் சமயக் கிரியையுடன் ஆரம்பம்

வடமராட்சி, ஜன.31

புனரமைக்கப்பட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகள் சமயக் கிரியைகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு நீதிமன்ற வளாகத்தின் மையப் பகுதியில் பருத்தித்துறைச் சிவன் கோயில் பிரதமகுரு தலைமையில் சமயக் கிரியைகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து நீதிமன்ற வளாகத்துக்கு எதிரே இருக்கும் கோட்டு வாசல் அம்மன் கோயிலில் இருந்து படங்கள் எடுத்து வரப்பட்டன.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. மாலை 4.15 மணிக்கு புனரமைக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் தலா 5 குற்றவியல், சிவில் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**புனரமைக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் தலா 5 குற்றவியல், சிவில் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.**

இந்த வழக்குகளில் ஒரு வழக்குக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகிய தினத்தன்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், மல்லாகம் மாவட்ட இளைப்பாறிய நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் உட்பட யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர். (ம-236)

## சகோதரர்களான 'புதுமாப்பிள்ளை'கள் சினிமா வில்லன்கள்போல் அடாவடி

**'மாமனார்' வீடுபுகுந்து 'வீரதீரம்'**

யாழ்ப்பாணம், ஜன.31

சகோதரர்களான புது மாப்பிள்ளைகள் இருவர் பிறிதொரு சகோதரிகளான தமது 'மனைவி'மாரின் பிறந்த வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து அங்கிருந்த குடும்ப உறவினர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். அது மட்டுமன்றி அங்கிருந்த பொருள்களையும் அடித்து சேதமாக்கியுள்ளனர்.

தாக்குதலால் காயமடைந்த ஏழு பேரில் மூவர் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். வைத்திய சாலைப் பொலிஸாரும் இது பற்றி முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

தமிழ் சினிமாக்களில் வரும் காட்சி போன்று இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் நவாலி, தெற்கு, அரசடி ஒழுங்கையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடந்துள்ளது. சம்பவத்தில் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த பா.பாஸ்கரன் (வயது-50), பா. ஸ்ரீபிறேமினி (வயது-41) ஆகிய கணவன் மனைவியும் ஸ்ரீபிறேமினியின் சகோதரரான சி.தனேந்திரன் (வயது- 33) ஆகிய மூவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாஸ்கரன் தம்பதியரின் இரண்டு புதல்விகளும் அதே இடத்தைச் சேர்ந்த பிறிதொரு சகோதரர் களைக் காதல் திருமணம் செய்து அவர்களது வீட்டுக்குச் சென்று விட்டனர். இந்த நிலையில் சனிக்கிழமை இரவு பாஸ்கரன் என்பவரது வீட்டுக்குச் சென்ற புதுமாப்பிள்ளைமார் இருவருமே இந்த அட்டாவடியில் ஈடுபட்டனர் என பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். சொத்துக்களைத் தம்வசப்படுத்துவதே இருவரது நோக்கமாக இருக்கலாமெனவும் அவர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-4)

## சிக்கன கடன் வழங்கு சமாசத்துக்கு 200 மில்லியன் ரூபா செலவில் 3 மாடி

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கென புதிய 3 மாடி கட்டடம் 200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சமாசத்தின் செயலாளர் திருமதி ச.பரமானந்தம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் விசேட கூட்டம் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கட்டடத்துக்கான 2 பரப்புக் காணியை கே.கே.எஸ். வீதியில் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வாங்கியுள்ளோம்.

கட்டடத்துக்கான 200 மில்லியன் ரூபாவும் சமாச நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து பிரதான அலுவலகம் மண்டபம், பயிற்சி வகுப்புக்கான மண்டபம் என்பன அமைக்கப்படவுள்ளன.

கட்டடத்துக்கான அனுமதியை விரைந்து பெற்றுத் தருவதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். அனுமதி கிடைத்ததும் பணிகள் ஆரம்பமாகும்.- என்றார். (ம-311- ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாமின் வருகை; இலங்கையில் மாற்றம் வரும்

**அப்துல் கலாம் மும்மொழி நடைமுறை தொடர்பான திட்டவரைபு ஒன்றை ஆரம்பித்துள்ளார். இது எமது மொழிப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும் என்று கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதர் குறிப்பிட்டார்.**

வத்துகாமம், ஜன.31

முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் வருகையுடன் இலங்கையில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. அவரது மும்மொழி நடைமுறைத் திட்ட வரைபு அதிக மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதர் கே.நடராஜ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரயில்போக்குவரத்துத் துறையிலும் இலங்கைக்கு இந்தியா உதவிசெய்து வருகிறது. இது பொருளாதார ரீதியில் முக்கியமான ஒன்றாகும். அதேபோல், இந்திய அரசு நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. பின்தங்கிய நிலையில் உள்ள மலையகப் பகுதி மக்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கு இது காரணமாக அமைகிறது.

இலங்கையின் இனப் பிரச்சினை,முறுகல்நிலைக்கு மொழி முக்கிய காரணியாக உள்ளது. இந்தநிலையில், விஞ்ஞானி அப்துல் கலாம் மும்மொழி நடைமுறை தொடர்பான திட்டவரைபு ஒன்றை ஆரம்பித்துச் சென்றார். இது எமது மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையலாம்.

ஒரு சமூகத்தின் உயர்ச்சிக்கு கல்வி மிக முக்கிய ஒரு காரணியாக விளங்குகிறது. அந்த அடிப்படையில் ஆசிரியர் பயிற்சி மற்றும் பௌதிக வளப் பங்கீடு போன்ற துறைகளில் இந்தியா உதவி வருகிறது.

கல்வி, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் போன்ற பல துறைகளிலும் இந்தியாவானது இலங்கைக்கு உதவி வருகிறது. அந்த அடிப்படையில் அண்மைக் காலத்தில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிங்கள, பௌத்த மக்களுக்கும் அதிக சேவை புரிந்துள்ளது.

இந்தியாவிலுள்ள சாரனாத் மாதிரியில் அமைந்த புத்தர் சிலை ஒன்றை சர்வதேச பௌத்த அருங்காட்சியகத்தின் முன் இந்தியா அமைத்துக்கொடுத்துள்ளது - என்றார். (ச)

# தெற்கு மக்கள் எதிர்க்கவில்லை

**மாகாணங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பது தொடர்பாக ஒரு தேசிய விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு,ஜன.31

தெற்கிலுள்ள மக்கள் அதிகாரப்பகிர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சில அரசியல் குழுக்கள்தான் இதைப் பிரச்சினையாக்குகின்றன என்று கிழக்கு மாகாண அமைச்சர் விமலவீர திசநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக பிபிசி செய்திச் சேவைக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

19876 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்பாட்டுக்குப் பின்னர் அரசியலமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி,பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளுமே இதனை நிறைவேற்றத் தவறியுள்ளன.

சமவுடமை என்பது நாட்டுக்குத் தீங்கிழைக்கும் என்பது அவர்களின் கருத்தாக உள்ளது. மாகாணங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பது தொடர்பாக ஒரு தேசிய விவாதம் நடத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டப்படி மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்- என்றார். (ச)

# அதிக கட்டணம் அறவீடு

பொகவந்தலாவை, ஜன.31

நாவலப்பிட்டி நகரின் பிரதான பஸ் நிலையப் பகுதியிலுள்ள பொது மலசல கூடத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து அதிகளவு கட்டணம் அறிவிடப்படுவதால் இந்த விடயம் தொடர்பில் நாவலப்பிட்டி நகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்,

இந்த மலசல கூடத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து பத்து ரூபா அறவிடப்படுகின்றது.

எனினும், பணத்துக்கு எவ்விதமான பற்றுச்சீட்டும் வழங்கப்படுவதில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ச)



புத்தளத்தில் அமைக்கப்பட்ட நவீன சந்தைத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நாடாவெட்டித் திறந்துவைக்கப்படுகின்றது.

# தோட்ட முகாமையாளர் இடைநிறுத்தம்

மஸ்கெலியா, ஜன. 31

மஸ்கெலியா, பிளான்டேசனுக்குச் சொந்தமான மஸ்கெலியா மொக்கா தோட்ட முகாமையாளர் கடந்த சனிக்கிழமை முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

நிதிமோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தின் பின்னணியிலேயே இவர் நிர்வாகத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர், பெரன்டினா நிதியம் ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு கால்நடை வளர்ப்புக் கடனாக வழங்கிய பணத்தையும், தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க சேமிப்புக்காக அவர்களிடம் அறவிட்டு வந்த பணத்தில் ஒரு தொகையும் சேர்த்து மொத்தமாக4லட்சம்ரூபாவை கையாடல் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஸ்கெலியா, பிளாண்டேசனுக்கு உரித்தான கணக்குப் பரிசோதகர்கள் திடீர் பயணத்தை மேற்கொண்டு சோதனை மேற்கொண்டபோதே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது. நிதிமோசடி சம்பந்தமான விசாரணை முடக்கிவிடப்பட்டுள்ளது. (ச)

# அரசியல்வாதியால் வைத்தியர் தாக்கு

மாத்தளை, ஜன.31

மாத்தளை வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் மாத்தளை பிரதேச அரசியல்வாதியொருவரால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாத்தளை, பலாப்பத்வெல பகுதியில் உள்ள வைத்தியரின் மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கு கடந்த சனிக்கிழமை மாலை சென்றிருந்த குறித்த அரசியல்வாதி வைத்தியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான வைத்தியர் மாத்தளை வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வருவதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பிரதேசசபைத் தலைவர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ச)

# திருமலையில் தமிழர் தாக்குதல்; இனமுரண்பாட்டை ஏற்படுத்தும்

திருகோணமலை, விநாயகபுரம் பகுதியில் தமிழ் மக்கள் மீது சிங்களவர்கள் திட்டமிட்டு நடத்திய தாக்குதலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

ஆலயத்துக்கு நிதி சேகரிக்கச் சென்ற தமிழ் இளைஞர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளமை கவலையளிக்கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. மாறாக இன முரண்பாடே வலுப்பெறும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் குறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடின் பிரச்சினைகள் மேலும் தொடரக்கூடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து பூரண விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் கோரியுள்ளார்.

# கஞ்சாச்சேனை கண்டுபிடிப்பு

மண்டூர், ஜன. 31

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் முருத்தான பாலக்காடு பகுதியில் சேனைப்பயிர்ச் செய்கையுடன் சேர்த்து செய்கை பண்ணப்பட்ட கஞ்சாச்சேனையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் செய்கை பண்ணப்பட்ட கஞ்சாச் செடிகளைக் கைப்பற்றியதுடன், சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# புறா பிடித்த சிறுவர்களுக்கு வீட்டார் வழங்கிய 'தண்டனை'

**புறாக்களை அனுமதியின்றி பிடித்ததற்குத் தண்டனையாக சிறுவர்களை துன்புறுத்தி, வாகனத்தில் ஊர்வலமாகக் கொண்டு சென்றனர்.**

மட்டக்களப்பு, ஜன.31

மட்டக்களப்பு, மீராவோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை செல்லும் சிறுவர்கள் ஐந்து பேரை வாகனமொன்றில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்று அவமானப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடொன்றில் வளர்த்து வந்த புறாக்களை வீட்டு உரிமையாளரின் அனுமதியின்றி எடுத்துச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறுவர்களை, இந்த உரிமையாளர் அடியாள்களின் உதவியுடன் பொலிஸாரின் அனுமதியின்றி கைது செய்து துன்புறுத்தி, உடலில் காயங்களை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் வாகனத்தில் ஊர்வலமாகவும் கொண்டு சென்றுள்ளனர்.

இதனை அறிந்த பொதுமக்கள் பொலிஸாருக்கு விடுத்த அறிவித்தலையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-21)

# திமிங்கிலம் பரிசோதனைக்கு

மட்டக்களப்பு,ஜன.31


மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கிய திமிங்கிலத்தின் தலையை கொழும்பிலுள்ள தேசிய நீரக ஆராய்ச்சி நிறுவனமான நாரா நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பளார் எஸ்.ரி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

கரையொதுங்கிய இந்தத் திமிங்கிலம் 2,000 கிலோவுக்கும் அதிகமான நிறையை கொண்டுள்ளதால் அதன் தலையை மாத்திரம் நாரா நிறுவனத்திற்கு அனுப்பவுள்ளதாக அவர் தெரி வித்தார். இந்தத் திமிங்கிலத் தின் வெட்டப்பட்ட ஏனைய பாகங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித் தார்.

இந்தத் திமிங்கிலம் காத்தான்குடி கடற்கரையில் கதை யொதுங்கியது கிழக்கு மாகாணத்தில் முதற் தடவையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுனைடட் மோட்டர்ஸ் குழு யாழ் மண்ணிலும்




## இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை கோலாகலத் திறப்பு விழா

புதிய வாகனங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளைக் கொண்டு
இப்பொழுது யாழ் மண்ணிலும் யுனைடட் மோட்டர்ஸ் குழு தடம் பதிக்கிறது.

இல. 29, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். 021 4923680




**United Motors Lanka PLC**

**Unimo Enterprises Limited**
(A fully owned subsidiary of United Motors Lanka PLC)

**Orient Motor Company Limited**
(A fully owned subsidiary of United Motors Lanka PLC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் தொடரும் வன்முறை



டமாஸ்கஸ்,ஜன.31

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் நகருக்கு அருகில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியில் ஜனாதிபதியின் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் போராட்டம் அதிகரித்து வருகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் ஆரம்பித்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தவே படிப்படியாக இராணுத்தினர் பலர் அங்கிருந்து பிரிந்து எதிர்க்கட்சிகளுடன் இணைந்தனர்.

இவர்கள் சிரியா விடுதலை இராணுவம் என்ற எதிர்த்தரப்பு இராணுவத்தை உருவாக்கினர். ஜனாதிபதியின் இராணுவத்துக்கு இந்த புதிய இராணுவம் மிகப் பெரிய சவாலாக விளங்கி வருகிறது.

இந்த நிலையில் சிரியாவின் நிலைமை குறித்து ஆய்வு செய்ய டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல், அரபு லீக் சார்பில் 165 பிரதிநிதிகள் கொண்ட குழு சென்றது.இக்குழு வந்த பின் மக்கள் மீதான இராணுவத்தின் தாக்குதல் குறைவதற்குப் பதிலாக அதிகரித்தது. அதனால் ஜனாதிபதி அசாத் தனது பொறுப்புகளை துணை ஜனாதிபதியிடம் ஒப்படைத்து விட்டு பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.


இதற்கு சிரியா மறுப்புத் தெரிவிக்கவே அரபு லீக்கில் உள்ள சவூதி அரேபியாவும் கத்தாரும், சிரியா குழுவில் இருந்து தமது பிரதிநிதிகளைத் திரும்பப் பெற்றன.

சவூதியின் இந்த முடிவை அடுத்து அரபு லீக் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் கலந்தாலோசித்தனர். இதையடுத்த சிரியாவில் இருந்து அரபு லீக் தனது பிரதிநிதிகள் குழுவை முழுமையாகத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்தது.

மேலும் ஜனாதிபதி அசாத்தை பதவி விலகுமாறும் வலியுறுத்தவும், அவரிடம் இருந்து அந்தநாட்டு மக்களைக் காப்பாற்றவும், நெருக்கடி கொடுக்கும்படி அமெரிக்காவிடம் வலியுறுத்த சிரியாவின் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பான சிரியா தேசிய குழுத்தலைவர் விரைவில் அமெரிக்கா செல்ல இருப்பதாக அந்தக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சிரியாவில் நடக்கும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என வளைகுடா நாடுகள் மற்றும் துருக்கி வலியுறுத்தியுள்ளன. (வ)

# இந்தோனேஷியாவில் சூறாவளி; 14 பேர் சாவு



இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் திடீரென வீசிய சூறாவளியால் 14 பேர் உயிரிழந்தனர். 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், 2000 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதுகுறித்து இந்தோனேஷியா பேரழிவு மேலாண்மை மையத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி விடுத்துள்ள செய்தியில், தெரிவித்ததாவது:

இந்தோனேஷியாவின் கிழக்கு கடலோர மகாணங்களான ஜாவா, பாலி ஆகிய தீவுப்பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் புயல் தோன்றி இருந்தது.

இந்தநிலையில் இன்று திடீரென சூறாவளிக் காற்று வீசியது. இதனால் வீதியில் நடந்து சென்றவர்கள் உட்பட 14 பேர் உயிரிழந்தனர், 60 பேர் காயமடைந்தனர், மேலும் 2000 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இந்த சூறாவளிக்கு 'இக்கி' என்று பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இது வலுவிழந்து மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது - என்றார். (வ)

# தலிபான் தலைவர்களுடன் அமெரிக்கா நேரடிப் பேச்சு

## அதிர்ச்சியில் ஆப்கன் அரசு

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக தலிபான் தலைவர்களுடன் அமெரிக்க அதிகாரிகள் நேரடியாகப் பேச்சு நடத்தி உள்ளது ஆப்கன் அரசுக்கு அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அல்குவைதா இயக்கத்தை ஒழிப்பதற்காக அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டன. அதன் ஒரு நடவடிக்கையாக அங்கிருந்த தலிபான் அரசை மாற்றியமைத்து புதிய அரசை ஏற்படுத்தியது.

இதன் பின்னர் பாகிஸ்தானில் மறைந்திருந்த அல்குவைதா தலைவர் பின்லேடனை அமெரிக்கப் படைகள் சுட்டுக் கொன்றன. இந்தநிலையில் ஆப்கனில் இருந்து படை கள் வெளியேறப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்தநிலையில் ஆப்கானில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களுடன் அமெரிக்க அதிகாரிகள் நேரடியாகப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கத்தாரில் நடைபெற்ற இந்த பேச்சில் தலிபான் தலைவர் முல்லா ஓமரின் செயலாளர் உட்பட 8 பேர் பங்கேற்றதாகக் கூறப்படுகிறது. அப்போது குவான்டனாமோ சிறையில் அடைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகளை விடுவிக்குமாறு தலிபான் இயக்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர். எனினும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. (வ)



ஆஸ்திரேலியா தலைநகர் மெல்போர்னில் நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், அந்நாட்டு பிரதமர் ஜூலியர் கில்லர்ட் மற்றும் நியூசிலாந்து பிரதமர் ஜான் கீ ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

# புகலிடம் நாடி வந்தோரை எதிர்க்கும் மூத்த குடிகள்

ஜெனீவா,ஜன.31

சுவிற்ஸர்லாந்தில் புகலிடம் நாடிவருபவர்களுக்கு குடியிருப்புக்கள் அமைத்து கொடுக்க கூடாது என்று அந்தநாட்டில் வாழும் மூத்த குடிமக்கள் போராடுகின்றனர். இதனால் புகலிடம் நாடிவந்தவர்கள் பல இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

மேலும் மூத்த குடிமக்களால் புகலிடம் நாடிவருபவர்களுக்கு குடியிருப்புகள் அமைத்துதருவதில் சிரமமாக இருக்கிறது என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தவாரத்தில் லாசேனின் கடைக்கோடியில் உள்ள ஒரு சிறிய நகரமான புல்லியில் 400 பேர் புகலிடம் தேடி வந்தனர். அதில் 50 பேர் தமக்கு உடனடியாக பாதுகாப்பான குடியிருப்பு வசதி செய்யவேண்டுமென்று அரசுடன் வாதிட்டனர்.

கடந்த வருட இறுதியில் 2000 பேருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்று ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றிய அரசு அதிகாரிகள் இதனைச் செய்து முடிக்க இயலவில்லை. காரணம் கட்டட விதிகள் மற்றும் ராணுவப் பகுதிகளில் இடமில்லாதது மற்றும் உள்நாட்டுத்தடைகளாகும்.

மேலும் அங்கு வாழும் மூத்த குடிமக்கள் சிலர் இவர்கள்மீது பல குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர். அவை இவர்களில் சிலர் போதை மருந்துகளை விற்கின்றனர், என்றும் மேலும் சுவிஸ் குடியுரிமை பெறுவதற்காக நமது குடி மக்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர் என்று கூறினர்.

ஆனால் இந்தக் கருத்துகளை மறுத்த சிலர் இவர்களுக்கு ஆதரவாகப் பேசினார்கள். (வ)

# ஈரானின் அணு சக்தித் திட்டங்கள் ஆய்வுக்குச் சென்றது ஐ.நா.குழு

ஈரானின் அணு சக்தித் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக, ஐ.நா.,வின் சர்வதேச அணு சக்தி முகவர் (ஐ.ஏ.இ.ஏ.,) குழு,நேற்று முன்தினம் ஈரானுக்குச் சென்றது. ஈரான் தனது அணு சக்தித் திட்டங்களை, அணு ஆயுதங்கள் தயாரிக்கப் பயன்படுத்துவதாக, அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஈரான் மீது, பல்வேறு தடைகளை விதித்துள்ளன. ஈரான் ரகசியமாக, பல்வேறு அணு சக்தித் திட்டங்களைச் செயற்படுத் துவதாக, கடந்தாண்டு நவம்பரில், ஐ.ஏ.இ.ஏ., வெளியிட்ட அறிக்கை குற்றம் சாட்டியது. ஐ.ஏ.இ.ஏ., எப்போது வேண்டுமானாலும் நேரில் ஆய்வு செய்யலாம் என்று ஈரான் தெரிவித்தது. இதைய டுத்து, நேற்று முன்தினம் ஐ.ஏ.இ.ஏ.,யின் தலைமை ஆய்வாளர் ஹெர்மன் நக்கர்ட்ஸ் தலைமையில், ஆறு பேர் கொண்ட குழு, ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்குச் சென்றது.

மொத்தம் மூன்று நாள் ஈரானில் தங்கியிருந்து, பல்வேறு அணு சக்தி நிலையங்களை, இந்தக்குழு நேரில் பார்வையிடும். ஈரான் தொடர்பாக, நிலுவையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான், இந் தப் பயணம். பூமிக்கடியில் ஈரான் அணு சக்தித் திட் டத்தைச் செயற்படுத்திவரும் போர்டோ பகுதிக்குச் நேரில் சென்று ஆய்வு செய்ய உள்ளோம் - என்றார்.

இந்த ஆய்வின் மூலம், ஈரான் தனது அணு சக்தித் திட்டங்களை ஆக்க பூர்வமாகத் தான் பயன்படுத்தி வருகிறது என்பது, உலகிற்குத் தெரிய வரும்' என, ஐ.ஏ.இ.ஏ.,இற்கான ஈரான் தூதர் அலி அஸ்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். எனினும், இப்பயணத்தில், தனது பல்வேறு அணு சக்தி நிலையங்களுக்குச் செல்ல, இந்தக்குழுவை ஈரான் அனுமதிக்காது என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)



# வங்கதேசத்தில் கலவரம் 3 பேர் சாவு: 100 பேர் காயம்



டாக்கா,ஜன.31

வங்கதேச அரசுக்கு எதிராக, எதிர்க்கட்சி நடத்திய ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தின் போது பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் 3 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடக்கவுள்ள வங்கதேச பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அரசு, தேர்தல் கண்காணிப்பு முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. அது நடுநிலையான பொதுத் தேர்தல் கண்காணிப்புக்கு எதிராக உள்ளதாக கூறி முக்கிய எதிர்க்கட்சியான வங்க தேச தேசியவாத கட்சியுடன் (பி என்பி) இணைந்து ஜமாத் இஇஸ்லாமி கட்சியினர் நேற்றுமுன்தினம் கண்டன ஊர்வலம் நடத்தினர்.

தடையை மீறி நடத்தப்பட்ட அந்த ஊர்வலத்தில் கலவரம் வெடித்தது. கலவரத்தை ஒடுக்க பொலிஸார் ரப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். அப்போது குண்டடி பட்டு 2 ஓட்டோக்காரர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். மேலும், சுமார் 100 பேர் காயமடைந்ததாக கூறப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்போன் பாவனை 'போர்க்குற்றம்'

லண்டன், ஜன.31

வடகொரியா தனது நாட்டுக்குள் செல்போன்களைப் பயன்படுத்துவதை 'போர்க் குற்றமாக' அறிவித்துள்ளது. செல்போன்களை யாராவது பயன்படுத்தினால் போர்க் குற்றவாளியாகக் கருதி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாடு எச்சரித்துள்ளதாக ஊடக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எகிப்து, லிபியா, துனிசியா நாடுகளில் நீண்டகாலமாக ஆட்சி நடத்திய அதிபர்களுக்கு எதிராக நிகழ்ந்த கிளர்ச்சி வடகொரியாவில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள வட கொரிய அரசுக்கு எதிரான அதிருப்தியாளர்களுக்கு நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளை எவரும் தகவல் அனுப்பிவிடக் கூடாது என்பதற்காக இத்தகைய தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் நாட்டை விட்டு வெளியேறி தென் கொரியாவில் அடைக்கலம் கோருவோருக்கு வெளியில் இருந்து தகவல்கள் கிடைப்பதையும் தடுக்கும் நோக்கத்தில் வடகொரிய அரசு இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.(வ)

# பெருநாட்டில் தீ விபத்து 32 பேர் கருகிச் சாவு



லிமா, ஜன.31

பெரு நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு மையத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு மையம், தலைநகர் லிமாவில் 2 மாடிக் கட்டடத்தில் உள்ளது. 80 பேர் தங்கியிருந்த அதில் நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. சிகிச்சை பெறுவோர் தப்பிக்க முடியாதவாறு ஜன்னல்கள் அமைக்கப்பட்டு இருந்ததால் விபத்தின் போது வெளியேற முடியாமல் 27 பேர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, உடல் கருகி பரிதாபமாக இறந்தனர்.

சிலர் ஜன்னல் வழியாக குதித்து உயிர் தப்பினர். அங்கு வந்த மீட்புப் படையினர், சுவரை துளை போட்டு சிலரை மீட்டனர். பயங்கரத் தீக் காயங்களுடன் சிகிச்சை பெற்றவர்களில் மேலும் 5 பேர் இறந்தனர்.

கட்டடத்தின் கீழ்த் தளத்தில் காஸ் குக்கர் வெடித்து தீப்பற்றியது என்றும், தங்கியிருந்தவர்கள் சிலர் மெத்தையில் தீ வைத்ததால் விபத்து ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## ஜனாதிபதி தேர்தலில் புடினுக்கு எதிராகப் போட்டியிடத் தடை



ரஷ்யா ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புடினுக்கு எதிராகப் போட்டியிட எதிர்க்கட்சித் தலைவர் கிரிகரி யாவ்லின்ஸ்கிக்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. ரஷ்யாவில் நான்கு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்த விளாடிமிர் புடின், தற்போது பிரதமராக உள்ளார். அவர் மீண்டும் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் போட்டியிடுகிறார். இந்தநிலையில் அவரை எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் கிரிகரி யாவ்லின்ஸ்கி போட்டியிட உள்ளார்.

அதற்காக அவர் தேர்தல் ஆணையத்திடம் அளித்த ஆவணங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர்கள் இருபது லட்சம் வாக்காளர்களது ஆதரவுடன் கூடிய கையெழுத்துப் பெற வேண்டும் என்பது நிபந்தனை.

இந்தநிலையில் யாவ்லின்ஸ்கி தாக்கல் செய்த ஆவணங்களில் நான்கில் ஒரு பங்கு விண்ணப்பங்கள் போலி என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர் தேர்தலில் போட்டியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. (வ)

## தீவிரவாதிகள் 50 பேர் ஆப்கனிடம் சரண்

ஹெஸ்ப்இஇஸ்லாமி என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 50 பேர் ஆப்கானிஸ்தான் அரசிடம் சரணடைந்தனர். இது குறித்து பக்லான் மாகாண பொலிஸ் துறை உயரதிகாரி அசதுல்லா ஷிரா சத் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிராகச் செயற்பட்டுவரும்மிகப்பெரியதீவிரவாத குழுக்களில் ஒன்று ஹெஸ்ப்இஇஸ்லாமி என்ற அமைப்பு. நாட்டின் பாதுகாப்பை நிலை நாட்டும் வகையில் அமைதிப் பேச்சு நடத்த தீவிரவாத அமைப்புகளுக்கு ஆப்கான் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி ஹமித் கர்சாய், ஹெஸ்ப் இஇஸ்லாமி அமைப்பினருடன் பேச்சு நடத்தினர். அதன் பயனாக பக்லான் இமர்கசி மாவட்டத்தில் 50 தீவிரவாதிகள் நேற்று சரணடைந்தனர். -என்றார்.


## வலி. கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - அச்சுவேலி
## பயிலுநர் அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்தல் கிளைமுகாமையாளர்
## மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நிபந்தனைகள்

1. 18 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல். விண்ணப்ப முடிவு திகதியன்று வயது கணிப்பிடப்படும்
2. பயிற்சிக் காலத்தில் நாளாந்த அடிப்படையில் வேதனம் வழங் கப்படும்
3. நிரந்தர பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்யும்போது பயிலு நர்களாக பயிற்சியிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
4. பயிற்சிக்காலத்தில் கிளை முகாமையாளராக கிளை ஒன்றைப் பொறுப்பேற்கும் போது ஏற்புடைய பிணையினைச் செலுத்துமாறு பணிக்கப்படுவீர்
5. ஒழுக்கம், உடல் ஆரோக்கியம், திறமை, தொழில் அனுபவம் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும்.

கல்வித்தகைமை

கிளைமுகாமையாளர் (பயிலுநர்)

க.பொ.த. சாதாரணதரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தாய்மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் என்பவற்றை உள்ளிட்ட 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல்

விண்ணப்பப்படிவங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15.02.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி என்னும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சங்கப்பணியாளர் எனின் சங்கத்தினூடாக விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.

**வலி. கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி**

**பதவி வெற்றிடம்**

**லொறிச் சாரதி**

மேற்படி பதவிக்கு சங்கத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

பதவி குறியீட்டு இல: 312/11 (108/81)
சம்பளக்குறியீட்டு இல: 312/13 (66/2006)
சம்பள அளவுத்திட்டம்: 9950 - 11700 / 85X10-90X10

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

1. 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ்வண்டி/ லொறிச் சாரதி/ உழவு இயந்திரம் இழுவைப் பெட்டியுடனான அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
2. வயதெல்லை: 18 - 45 வரை
   A. சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.
   B. சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
   C. விண்ணப்பப்படிவங்களை சங்க தலைமைக்காரியாலயத்தில் வேலை நாள்களில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15.02.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி என்னும் முகவரியில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

30.01.2012

பொதுமுகாமையாளர்
வலி. கிழக்கு வடபகுதி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

(சி/8292) (45-7-6)



# அந்தியேட்டி வீட்டுக்கிருந்திய அழைப்பு



கடந்த 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவன்

அமரர்

# குகனேஸ்வரன் ஜெயராசன்

பாசத்தின் உறைவிடமேபண்பின்
பண்பின் ஒளி விளக்கே
அறிவின் இருப்பிடமே
ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம் மனம்
நாள்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியம் இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]நாயகி அம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனையில் ஹசாரே

டில்லி, ஜன.31

சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே முதுகுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

74 வயதான ஹசாரே, கடுமையான இருமல் மற்றும் முதுகுவலியால் அவதிப்பட்டார். இதைத் தொடர்ந்து டில்லி மருத்துவமனையில் சிகிச்சைபெறத் தீர்மானித்தார்.

நேற்றுமுன்தினம் புனே நகரில் இருந்து விமானம் மூலம் டில்லிக்குச் சென்றார். டில்லியை அடுத்த குர்கான் நகரில் உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். (வ)



சென்னை அருகே நடுக்கடலில் இந்திய-ஜப்பான் கடலோர காவல் படையினர் கூட்டு ரோந்துப் பயிற்சி

## விரைவில் பிளாஸ்ரிக்கில் 10 ரூபா தாள்கள்

டில்லி, ஜன.31

பிளாஸ்ரிக்கில் 10 ரூபா தாள்களை வெளியிட ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. ரூபா நோட்டுகளை பிளாஸ்ரிக் வடிவில் அச்சிடும் திட்டத்தின் சோதனை முயற்சியாக 10 ரூபாய் பிளாஸ்ரிக் தாள்களை ரிசர்வ் வங்கி விரைவில் வெளியிடவுள்ளது.

நாட்டில் கள்ள நோட்டுகள் பிரச்சினையைத் தவிர்க்கவும், கரன்ஸிகள் கிழியாமல் தடுக்கவும் பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை அச்சிட ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக குறைந்தளவில் 10 ரூபா நோட்டுகளை அச்சிட்டு சோதனை நடத்த ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.

10 ரூபா நோர்ட்டுகளை அச்சிட்ட பின்னர் இந்திய பருவ நிலை மாற்றங்களால் அதற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பரிசோதிக்கப்படும். பின்னர் மத்திய அரசின் அனுமதி பெற்று அதிகளவில் பிளாஸ்ரிக் கரன்ஸி அச்சிட ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. (வ)

# கச்சதீவை மீளப்பெற்றால்தான் மீனவரின் பிரச்சினை தீரும்

### தமிழக சட்ட சபையில் ஆளுநர்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது கவலையளிக்கும் விடயம்.



இந்திய மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலைத் தடுக்க கச்சதீவை மீளப்பெறுவதே ஒரே தீர்வு என்று தமிழக ஆளுநர் ரோசையயா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்கூடிய தமிழக சட்டசபைக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக ஆளுநர் ரோசைய்யா மேலும் தெரிவித்ததாவது:

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது வருத்தமளிக்கும் விடயம். இது குறித்து மத்திய அரசு இலங்கையிடம் தெரிவிக்க வேண்டும். மீனவர்கள் மீது தாக்குதலைத் தடுப்பதற்கு கச்சதீவை திரும்பப் பெறுவது ஒன்று தான் தீர்வாக இருக்கும்.

முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளதாக கேரள அரசு பொய்ப் பிரசாரம் செய்து வருகிறது. தமிழக விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், எந்தவித முடிவும் எடுக்கப்படாது. தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரமான முல்லைப் பெரியாறு விவகாரத்தில் தமிழகம் தனது உரிமையை விட்டுக்கொடுக்காது. உச்ச நீதிமன்ற தீர்ப்பை செயற்படுத்துமாறு கேரளாவை மத்திய அரசுவலியுறுத்த வேண்டும்.

அணை அமைந்துள்ள மாநிலத்திடமே அணையைப் பாதுகாக்கும் பொறுப்பு இருக்க வேண்டும் என்ற சட்டத்தில் திருத்தம் செய்து, அணையின் உரிமை எந்த மாநிலத்துக்கு உள்ளதோ, அந்த மாநிலத்திடமே பாதுகாப்புப் பொறுப்பையும்வழங்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் - என்றார் அவர். (வ)

## இந்திய மீனவர்கள் 22 பேர் கைது

பாகிஸ்தானின் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 22 இந்திய மீனவர்களை அந்த நாட்டு கடலோரக்காவல் படையினர் கைது செய்தனர்.

பாகிஸ்தானின் கராச்சி கடல் எல்லைப் பகுதியில், இந்தியாவைச் சேர்ந்த 22 மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைக் தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்ததாக பாகிஸ் தான் கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 4 படகுகளையும், மீன் பிடி வலைகளையும் பறிமுதல் செய்தனர். பின்னர் மேல் விசாரணைக்காக அவர்கள் கராச்சி கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளன.

# மீனவர் பாதுகாப்புப் படை உருவாக்கப்படவேண்டும்

### மத்திய அரசுக்கு வீரமணி வேண்டுகோள்

கச்சதீவை மீட்கவும், தமிழ்நாட்டு மீனவர்களுக்குரிய தொழில் அடிப்படை உரிமையைக் காப்பாற்ற போதிய ஏற்பாடுகளையும் அசட்டையின்றி செய்ய மத்திய அரசு முன் வர வேண்டும்.



தமிழக மீனவர்களைக் காக்கும் வகையில் மீனவர் பாதுகாப்பு படைப்பிரிவை மத்திய அரசு உருவாக்க வேண்டும் என்று கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டு மீனவ சகோதரர்களின் வாழ்வாதாரம் மீன்பிடி தொழிலிலேதான் உள்ளது. அந்தத் தொழிலைத் தவிர அவர்களுக்கு வேறு தொழில் எதுவும் தெரியவே தெரியாது. தங்கள் வாழ்க்கையை அன்றாடம் ஆபத்துக்குரியதாகவும், இயற்கையின் கொடுமைகளால் பாதிக்கப்படக் கூடியதாகவும் இருந்தாலும் துணிந்து கடல் மேல் வாழ்கின்றனர்.

கச்சதீவை மீட்கவும், தமிழ்நாட்டு மீனவர்களுக்குரிய தொழில் அடிப்படை உரிமையைக் காப்பாற்ற போதிய ஏற்பாடுகளையும் அசட்டையின்றிச் செய்ய மத்திய அரசு முன்வருதல் வேண்டும்.

கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்துத் தந்தது சட்டப்படி செல்லாது என்ற சட்டப்பிரச்சினை அடிப்படையில் திராவிடர் கழகம் போட்ட ரிட் மனு, சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்னமும் நிலுவையில் உள்ளது. தமிழக முதலமைச் சர் ஜெயலலிதா உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய் துள்ள கச்சதீவு வழக்கும் நிலுவையில் முழுமையான விசாரணைக்கு வராமல் உள்ளது.

சட்டப்படி, மீனவர்களுக்கு போதிய பாதுகாப்பு தரவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமர்வு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பும் சில சில நேரங்களில்தான் இந்தியக் கடலோரப் பாதுகாப்பு படையினரால் செயற்படுத்தப் படுகிறது.

இது மேலும் பலப்படுத்தப்பட்டு கடலோரப் காவல் படையில் 'மீனவர் பாதுகாப்புப் படைப்பிரிவு' என்ற ஒன்று தனியே அமைத்து 24 மணி நேரமும் ரோந்திலேயே இருக்கும்படி கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும், அமைப்புகளும், முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் இணைந்து, ஒன்றுபட்டு ஒரு அனைத்துக்கட்சிகூட்டம்கூட்டி, அதில் குறுக்குசால் ஓட்டப் படாத ஒருமித்த தீர்மானம் ஏற்பட வேண்டும்- என்று அதில்குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## புலிகள் கணக்கெடுப்பு பெப்ரவரியில்



தமிழ் நாட்டின் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுப்பு பணி பெப்ரவரி மாதத்தில் நடக்க உள்ளது.

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் புலிகள் கணக்கெடுப்புப் பணி இடம்பெறவுள்ளது.

இது குறித்து மானாம்பள்ளி வனச்சரக அலுவலர் ஆரோக்கியராஜ் சேவியர் தெரிவித்ததாவது:

புலிகள் கணக்கெடுப்புப் பணி எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒரு வாரம் நடைபெறவுள்ளது.

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஒரே நேரத்தில் அனைத்துப் பகுதிகளிலும் இந்த கணக் கெடுப்புப் பணி நடைபெறும் என்று தெரிவித்துள்ளார். (வ)

# மக்கள் பிரதிநிதிகளை திரும்பப் பெறும் நேரம்

### தேர்தல் ஆணையாளர் கருத்து



மக்கள் பிரதிநிதிகளைத் திரும்பப்பெறும் உரிமையை நடைமுறைப்படுத்துவது குறித்து, பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தலைமை தேர்தல் ஆணையாளர் குரேஷி தெரிவித்தார்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் நிலுவையில் உள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, மக்கள் பிரதிநிதிகளைத் திரும்பப் பெறும் உரிமை தொடர்பான விடயத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை, அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தேர்தல் சீர்திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

வாக்களிப்பதை கட்டாயமாக்குவதில் பல சிக்கல்கள் உள்ளன. இது, நடைமுறையில் சாத்தியமற்றது. தவறான செயல்களில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில், தேர்தல் ஆணையத்துக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க வேண்டும். தேர்தல் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன், ஆட்சியில் இருப்பவர்களால் அரசியல் ரீதியான விளம்பரங்கள் கொடுப்பதையும் தடை செய்யவேண்டும். வாக்குப் பதிவுக்கு பிந்திய கருத்துக் கணிப்புகளும் [illegible] கணிப்புகளும் தடைசெய்யப்பட வேண்டும்.- என்றார்

## இராணுவத் தளபதி சர்ச்சையை நீக்க உத்தரவு

டில்லி, ஜன.31

ராணுவத் தலைமைத் தளபதி வயது சர்ச்சை தொடர்பாக ஆவணங்களில் முரண்பாட்டை நீக்குமாறு ராணுவ அலுவலகத்துக்கு ராணுவ அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ராணுவத் தலைமைத் தள பதி வி.கே.சிங்கின் வயது ராணுவப் பதிவேடுகளில் இரண்டு விதமாக உள்ளது. 1950.05.10ஆம் திகதிக்கு பதிலாக 1951.05.10 என்று தனது பிறந்த திகதியாகக் கணக்கிட வேண்டும் என்ற வி.கே.சிங்கின் கோரிக்கையை ராணுவ அமைச்ச கம் ஏற்கவில்லை.



இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வி.கே.சிங் வழக்குத் தொடர்ந்தார். எதிர்வரும் 3 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு வருகிறது. இந்தநிலையில், வி.கே. சிங்கின் பிறந்த திகதி 1950 ஆம் ஆண்டு என்பதை உறுதிப்படுத்தும் வகை யில் ஆவணங்களில் உள்ள முரண்பாட்டை நீக்கி சரி செய்யுமாறு ராணுவத்தினரின் ஆவணங்களைப் பாதுகாக்கும் அலுவலகத்துக்கு ராணுவ அமைச்சகம் உத்தர விட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நட்சத்திரங்களுக்கு ஜனசக்தி நிறுவனத்தின் அனுசரணை



ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் சாப்டர் அனுசரணைக்கான காசோலையை எஸ்.தனுஜாவுக்கு கையளிப்பதைக் காணலாம்.



ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப் பாளர் பிரகாஷ் சாப்டர் அனுசரணைக்கான காசோலையை இஷாரா தயானந்தவுக்கு கையளிப்பதைக் காணலாம்.

**தேசிய மட்ட விளையாட்டு வீரர்களை பாடசாலை மட்டத்திலிருந்தே ஊக்குவிப்பதற்காக ஜனசக்தி நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது**

தேசிய மட்ட விளையாட்டு வீரர்களைப் பாடசாலை மட்டத்திலிருந்தே போஷித்து வளர்ப்பதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் தற்போது மேற்கொண்டுவரும் முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து பேணும் வகையில் ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனமானது, தனது அனுசரணையைப் பெற்று வரும் மெய்வல்லுனர்களுள் இருவர் தமது இரண்டாம் நிலைக் கல்வியினைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அண்மையில் முன்வந்துள்ளது. இரத்தினபுரி, பெர்கியுசன் பெண்கள் உயர்நிலைப் பாடசாலையைச் சேர்ந்த 19 வயதான இஷாரா சந்தீபனீ தயானந்த மற்றும் யாழ்ப்பாணம், அளவெட்டி, அருணோதய கல்லூரியைச் சேர்ந்த 19 வயதான எஸ். தனுஜா ஆகியோரே ஜனசக்தியின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் வீராங்கனைகளாவர். இதற்கென பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இவ்விரு யுவதிகளும் மிகச் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

2011ஆம் ஆண்டில் இஷாரா நிகழ்த்திய சாதனைகளுள், கனிஷ்ட தேசிய விளையாட்டுப் போட்டியின்போது 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டமை மற்றும் தேசிய பாடசாலை விளையாட்டுக்கள் சம்பியன்ஷிப் போட்டியின்போது 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் அஞ்ச லோட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டமை ஆகியனவும் உள்ளடங்குகின்றன. துடிப்புமிக்க விளையாட்டு வீராங்கனையும் உறுதிமிக்க யுவதியுமான இஷாரா, தனக்கு வழிகாட்டியாகவும் பக்கபலமாகவும் இருந்து வருகின்றமைக்காக தனது பெற்றோருக்கு நன்றி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், அளவெட்டி பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த தனுஜாவின் கதையானது கடுமையான பின்னடைவுகளைக் கொண்டதாகவும் அதேநேரம், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து சிறந்த வெற்றியை நிலைநாட்டியதாகவும் அமைந்துள்ளது.


2003ஆம் ஆண்டு மாவட்ட ரீதியாக இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது 13 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கான பிரிவில் 02ஆம் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டமையே இவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. மன உறுதி மற்றும் பயிற்சி என்பவற்றின் காரணமாக, இரு வருடங்களின் பின்னர் 15 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டி நிகழ்ச்சியில் தங்கப் பதக்கத்தை அவர் வெற்றி கொண்டார். அதன் பின்னர் எந்தவொரு பின்னடைவையும் அவர் சந்திக்கவில்லை.

இன்று தனுஜா ஒரு விளையாட்டு நட்சத்திரம் என்ற புகழைப் பெற்றுத் திகழ்வது மட்டு மன்றி, மிக விரைவில் சர்வதேச மட்டத்தில் தனது நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த உள்ளார்ந்த திறமையையும் அவர் கொண்டுள்ளார். உண்மையிலேயே, 2009இல் தனுஜா முதன் முதலாகக் கொழும்பில் பங்கேற்ற போட்டியின் போதே கோலூன்றிப் பாய்தலில் பாடசாலை மட்டத்திலான தேசிய சாதனை ஒன்றினை நிலை நாட்டி இருந்தார்.

சிரேஷ்ட தேசிய சம்பியன்ஷிப் போட்டிகளின் போது உயரம் பாய்தல் மற்றும் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் அவர் 03ஆம் இடத்தினை தட்டிச் சென்றதுடன், 2011 கனிஷ்ட தேசிய சம்பின்ஷிப் போட்டிகளின் போது உயரம் பாய்தலில் 03ஆம் இடத்தினையும் கோலூன்றிப் பாய்தலில் 01ஆம் இடத்தினையும் வெற்றிகொண்டார்.

தனது வெற்றியின் பின்னணியில் பக்கபலமாக இருந்தவர்களை அவர் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறார். (த)

# வலையத்தளத்தின் ஊடாக பங்குதாரர்களுடன் தொடர்பு




**நிறுவனங்கள் தமது புத்தாக்க முயற்சிகளை முன்கொண்டு சமூக வலையத்தளப் பாவனையை விஸ்த்தரித்துள்ளன**

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., தனது நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு இடையில் இடைத் தொடர்பைப் பேணும் வகையிலமைந்த புதிய முன்னெடுப்பின் கீழ் தனது சமூக வலைத்தள இணையவழி பிரிவுகளை இன்று அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

நிறுவனம் சார்பான விடயங்களை வெளிப்படுத்தவுள்ள கூட்டாண்மை வலைப்பூ (Corporate Blog) ஒன்றினை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்த எக்ஸ்போலங்கா ஆனது முழுமையான சமூக வலைத்தள இடைத்தொடர்பினை பேணிக்கொள்ளும் நோக்கில் பேஸ்புக் (Facebook), டிவிட்டர் (Twitter), யூடியூப் (You Tube) போன்றவற்றில் உத்தியோக பூர்வ இணைய வழி பிரிவுகளை திறந்துள்ளது.

KPMG International நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச அளவிலான ('Going Social,-2011') ஆய்வின் பிரகாரம், பெரும்பான்மையான வர்த்தக நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்வதற்காக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றன. அரைவாசிக்கும் அதிகமான நிறுவ்னங்கள் தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளில் புத்தாக்க முயற்சிகளை முன்கொண்டு செல்வதற்காகவும் அத்துடன் ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்வதற்காகவும் தமது சமூக வலைத்தள பாவனையை விஸ்தரித்துள்ளன. அதேநேரம், சமூக வலைத்தளங்களில் பரந்துபட்ட வகைகளிலான வர்த்தகம் சார் பயன்பாடுகளை நிறுவனங்கள் தேடியவண்ணம் இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "அதன் ஒரு பகுதியாக, அபிவிருத்தி அடைந்த சந்தைகளின் போட்டிச் சூழலில் முன்னேறிச் செல்வதற்கான இன்னுமொரு வாய்ப்பினை சமூக வலைத்தளங்கள் வழங்குகின்றன என்பதை, தோற்றம் பெற்று வருகின்ற சந்தைகளில் தொழிற்படுவோர் மிக விரைவாக கண்டறிந்து கொள்வதாக தெரிகின்றது. (த)

# வடக்கு விவசாயிகளுக்கு இலங்கை வங்கி கடனுதவி

யாழ்ப்பாணம், ஜன.31

வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் விவசாயத்திற்கென கடனுதவியை பொறுபவர்களுக்கு இரு அரச உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தல் கையொப்பம் இடவேண்டியது அவசியமில்லை என இலங்கை வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் அதிகள்வானோர் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டுள்ள நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் பிரதேசத்தின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் ஏற்றவகையில் இலங்கை வங்கி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

இதற்கமைய அச்சுவேலி பிரதேசத்தை இலக்குவை[illegible] விவசாயக்கடனுதவி[illegible] இலங்கை வங்கி வழங்கி வருகின்றது. விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட விவசாயிகள் தமது விளைநிலங்களில் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கு அல்லது அதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நிதியுதவிகளை வடமாகாணத்தில் உள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளுடனும் தொடர்பு கொண்டு கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கிகளில் கடனுதவிகள் பெறுவதற்கு கட்டாயம் இரு அரச உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தல் கையொப்பம் வைக்க வேண்டிய நிலையில் விவசாயிகளின் வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இலங்கை வங்கி இந்த நிபந்தனையை விவசாயிகளுக்காக நீக்கியுள்ளது.

இதேவேளை மீனவர்களின் மீன்பிடித்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் குறைந்த வட்டியுடன் 20 லட்சம் ரூபா வரையான கடனுதவிகளையும், 5 லட்சம் ரூபா கடனுதவிகளைப் பெற விரும்புவர்களுக்கு நிரந்தரமாக மின்பிடித்தொழிலைக் கொண்ட மீனவர்கள் இருவரது உறுதிப்படுத்தலுடனும் கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டம் தற்போது காரைநகர், மன்னார், முல்லைத்தீவு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுள. (த-313)

# இலங்கை தேயிலைச் சபை நடத்தும் 20 ஆவது சர்வதேச தேயிலை மாநாடு



இலங்கையின் தேயிலைக் கைத்தொழிற்துறையின் உச்சபட்ச அதிகாரம் கொண்ட நிறுவனமாக விளங்கும் இலங்கை தேயிலைச் சபை, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாயச் சபையின் (United Nation's Food and Agriculture Organization) 20ஆவது சர்வதேச தேயிலை மாநாட்டை (Inter - Governmental Group - IGG) எதிர்வரும் 2012 ஜனவரி 30முதல் பெப்ரவரி முதலாம் திகதிவரை கொழும்பில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆவது மாநாடு புதுடில்லியில் நடந்தவேளையில் 20ஆவது மாநாட்டை நடத்துவதற்கான போட்டியில் இந்தோனேசியா மற்றும் மலாவி ஆகிய நாடுகளுடன் இலங்கை வெற்றி பெற்றிருந்தது. உலகத் தேயிலைச் சந்தையில் இலங் கைக்கு அதியுயர் அங்கீகாரம் வழங்கும் வகையில் அனைவராலும் ஏகமனதாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டது. அதுமட்டுமன்றி இலங்கை வர்த்தக ரீதியாக தேயிலைக் கைத்தொழிலை ஆரம்பித்து 145 ஆண்டுகள் நிறைவடை[illegible] 2012 ஆம் ஆண்டில் இந்த முக்கியமான நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"20வது FAO/IGG மாநாட்டைக் கொழும்பில் நடத்துவதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். கௌரவம் மிக்க இந்த நிகழ்வின் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை ஒரு மைல்கல்லை எட்டு வதுடன் இலங்கையின் தேயிலைப் பாரம்பரியத்திலும் புது அத்தியாயத்தை எழுதுவதாய் இது அமையும். நாட்டில் சமாதானம் மலர்ந்த பின்னர் இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் துறையில் இடம்பெறும் முதலாவது சர்வதேச நிகழ்வு இதுவாகும். இந்த வகையில் எமது நாட்டையும், எமது உற்பத்திகளையும் காட்சிப்படுத்தக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இதுவெனக் கருதுகின்றோம். இன்று, எம்முடைய பிரதான சந்தைவாய்ப்பு நாடுகளில் அரசியல் பதட்ட நிலைமை காணப்படுகின்றது. அது மட்டுமன்றி உலக நிதிநெருக்கடியும் இணைந்து ஏற்றுமதியை பிரதானமாக கொண்ட நாடுகளையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. தேயிலை கைத்தொழில் துறையில் உயர்வானதாக கருதப்படும் இந்த மாநாட்டை நடத்துவதன் மூலம் எம்முடைய துறைசார் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், உலகின் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பிற நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ளவும் முடியும்" என்று இலங்கைத் தேயிலை சபையின் தலைவரான ஜானகி குருப்பு தெரிவித்தார். (த)

# சனச வங்கி மக்களை நாடி

**சனச வங்கி வாழ்வாதாரத் தேவைகளை இலக்காக வைத்து கடனுதவி வழங்குகிறது**

அரச மற்றும் தனியார் வங்கிகள் சேவைகள் வழங்காத இடங்களில் சனச வங்கி தனது சேவையை வழங்குவதற்குத் தயாராக உள்ளது என சனச வங்கி அறிவித்துள்ளது.

வங்கிகள் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை இலக்காக வைத்து கடனுதவிகள் மற்றும் சேமிப்பு நடைமுறைகளை நடமாடும் சேவை மூலம் வழங்கி வரும் நிலையில் வடமாகாணத்தில் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் வங்கிகள் சேவை வழங்காத நிலையே காணப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அத்தகைய இடங்களை உரியவர்கள் தெரியப்படுத்துவ்தன் மூலம் அந்த கிராமத்தை முன்னேற்றுவதற்கான சகல செயற்பாடுகளையும் வழங்குவதற்கு சனச வங்கி தயாராக உள்ளதாகத் தெரிவித்தது.

மீள்குடியமர்வு செய்யப்பட்ட முழங்காவில் கிராமத்தை சனச வங்கி பொறுப்பெடுத்து தற்போது அதற்கான அபிவிருத்திச் சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

### சுறாமீனை விட்டு விட்டு சூடை மீன் பிடிக்கலாமோ?

*கசிப்பு ஒழிப்புப் போராட்டம்,*
*கள்ளக் 'கறண்ட்டு'ப் போராட்டம்,*
*சேரி ஒழிப்புப் போராட்டம்,*
*கள்வரைப் பிடிக்கும் போராட்டம்,*
*ஊர்காவலர் இரவில் கண்விழித்து*
*காவல் செய்யும் போராட்டம்*

இவ்வாறாக, எத்தனையோ போராட்டங்களை இது வரை கண்டுவிட்டோம். ஆனால் இப்போது ஒரு புது விதப் போராட்டம் தொடங்கி உள்ளது.

அது டெங்கு நுளம்பு ஒழிக்கும் போராட்டம். பொலிஸாரும், சுகாதாரப் பிரிவும் இணைந்து இப்படி மிகப் பெரும் போராட்டம் நடத்துவது நல்லதுதான். மிக்கவும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும்.

ஆனால் என்ன? தெருவிலே கொட்டிக் கிடக்கும் கழிவுகளை நாய்கள், காகங்கள் கிளறி உணவு தேடிக் கொண்டிருக்க துர் நாற்றமும், பூச்சி புழுவும் நடை பவனியாக நாற்சந்தியில், பல்கிப் பெருகிக் கொடும் நோய்களைப் பரப்புகின்றன. அந்த இடங்களைத் தாண்டி, நுளம்பு வேட்டை ஆடும் கோஷ்டிகளும் வீடு வீடாக நடை பவனி வருவது பலரது கவனத்தையும் இன்று தொட்டு இழுக்கின்றது.

வீட்டுக் கோடியில் ஒரு சிரட்டையைக் கண்டு திகில் அடைந்து, ஒரு கொடிய பாம்பினைக் கண்டவர் போன்று ஓடித் திரிந்து சிரட்டையை மீட்டு எடுத்து, அதனைக் காட்டிக் கடுமையாக வீட்டில் குடியிருப்பவர்களை எச்சரித்து, ''நாளை நீ, கோட்டுக்கு வா!'' என மிரட்டுவது நல்லதோர் நாட்டுப்பற்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு தென்னங் கோம்பையை, ஒரு வீசப்பட்ட உதவாத சைக்கிள் ரயரைக் கண்டு வீடுவரும் கோஷ்டி ஒன்று, கூடி ஏதோ காணாத ஒன்றைக் கண்டு விட்டதாக துடித்துப்பதைப்பதைக் கண்டதும், இதுவும் இலண்டன் மா நகரமோ? என எண்ணத் தூண்டுகின்றது. சுகாதாரச் சீர்கேட்டை இவர்கள் எத்தனை அக்கறையோடு பேணுகின்றார்கள். நாம் எல்லாம் இவர்களுக்கு ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்.


ஏனெனில் இவர்கள் இந்த வெற்றுக் கோம்பை உடைய வீட்டுக்காரரையும், சைக்கிள்காரரையும் குப்பையைக் கூட்டிய பின்னர் அதனை அள்ளாதவர்களையும் 'கோட்டு'க்கு அனுப்பி ஆயிரம் ரூபா வரை தண்டம் பெற்றுக் கொடுக்கின்றனர். அவர்களது நெஞ்சுரத்தைப் பாராட்டுவோம். இந்த நாட்டு மக்கள் மீது கொண்ட அளப் பெரும் கருணையால் அல்லவா இத்தனையையும் செய்கிறார்கள்.

இது இப்படி இருக்க, இந்தச் செயல் வீரர்கள் ( பொலிசார், பெண் பொலிசார், சுகாதாரப் பரிசோதகர் , மாநகர சபையார், தொண்டர் சபையார்) தகர டப்பாக்கள், சிரட்டைகள், வெற்றுப்பெட்டிகள், உடைந்த சட்டிகள், பல்வகைப் பண்டங்கள், அழுகிய பழங்கள், தின்பண்டங்கள் என்ற வகையறாக்கள் தெருக்களில், சந்திகளில் எறியப்படும் பொட்டலங்கள், தெருவோரம் தம் பியர் வீசும் ''பியர் கான்கள்'' பொக்கற் 'சயிஸ்' சாராயப் புட்டிகள், சிகரெட் பெட்டிகள், நாயின் மலக் கும்பிகள், நடுத் தெருவில் படுத்துறங்கும் சொறி நாய்கள், தெருவோரம் படர்ந்த பற்றைகள் டெங்கு பரப்பும் நுளம்புகள் தங்கிச் செல்லும் இலவச விடுதிகளே.

இவற்றைக் கண்டு தமது மூக்கினைப் பொத்திய வண்ணம் வெற்றுச் சிரட்டைகளைத் தேடி வேட்டையாடும் கோஷ்டியினர் முதலில் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? மா நகரை மாபெரும் நரகமாக்கும் சுகாதாரப் பிரிவு, கழிவு அகற்றும் பிரிவு கனவான்களையும், ஒரு சேரப்பிடித்து வந்து, நீதிமன்றின் முன் நிறுத்தினால் என்ன என்ற கேள்வி பலரிடம் எழுவதைக் கேட்கிறோம். அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தால் காசு வாங்காமலே வழக்காட பிறக்கிராசிமார் பலர் காத்துக் கிடக்கின்றனர். ஒரு பிரக்கிராசியார் எனக்குக் காதோடு காதாகச் சொன்னார் பாருங்கோ. திங்கள் ஒரு வீதி, செவ்வாய், புதன் ஒரு வீதி என்று குப்பை அகற்றினால் வீதிக்கு வீதி நுளம்பு பெருகாமல் விடுமா? சுறா மீனையும் கொடுவாமீனையும் விட்டுவிட்டு, குஞ்சு மீன் வேட்டையாடுவதை யாரிடம் சொல்வோம்?

இந்தியாவில், பொது நலம் பேணும் மனுக்களைத் தாக்கல் செய்யும் மக்களின் மாண்பினைக் காண்கின்றோம். இங்கு யாருக்கு பொதுநலனில் அக்கறை உண்டு? கச்சி ஏகம்பனே!

பிரசண்டன்



# முத்திப் பேற்றுக்கு உகந்த புண்ணிய பூமி கீரிமலை

சுன்னாகம்,ஜன.31

இந்தியாவில் உள் காசி போல் முத்திப் பேற்றுக்குரிய புண்ணிய பூமியாக கீரிமலை விளங்குகிறது. இப்புண்ணிய பூமியில் சிவபூமி மடம் நிறுவப்பட்டிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும்.

இவ்வாறு தெரிவித்தார் ஹவாய் சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள். கீரிமலையில் புதிதாக நிறுவப் பட்ட சிவபூமி மடத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு சிவ பூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புனித நதியாகிய கங்கை பாயும் காசியில் நூற்றுக் கணக்கான மடங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் அங்கு தியானத்தில் ஈடுபட்டிருப்பார்கள். அது முத்திப்பேற்றுக்குரிய சிறப்பான இடமா கும்.

அத்தகைய பெருமையும், புனிதமும், சிறப்பும் உடையது கீரிமலை. இங்கும் பலமகான்களும், அருளாளர்களும் தியானம் செய்து சமாதி அடைந்துள்ளனர். அவர்களுடைய பாதம் பட்ட மண் இன்று மீண்டும் துளிர்த்து எழுகிறது. அந்த எழுச்சிக்கு உதவுவதாக இன்று சிவபூமி மடம் செயற்பட ஆரம்பித்துள்ளது. இது ஒரு ஆரம்பமே. இந்த ஆரம்பத்துக்காக 4 வருடங்கள் காத்திருந்தோம். பஞ்ச ஈச்சரங்களுள் முதன்மை வாய்ந்த கீரிமலையில் இன்று மடத்தை ஆரம்பித்துள்ளோம். இது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேச்சரம், காலிச் சிவன் கோவில் என மறுமலர்ச்சி காணும் நாள் விரைவாக ஏற்படும்.

இது தனியே யாத்திரீகர் தங்கி, உணவருந்திச் செல்லும் இடமாக மட்டும் இருக்க மாட்டாது. சமய ஒளியைப் பரப்பும் இடமாகவும் இது செயற்படும்.

இன்று முன்னெடுக்கப்படும் புனித கைங்கரியங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இளைய பரம்பரையினர் முன்வர வேண் டும்.- என்றார்.

(ம-38)

# வேலையற்றோர் விவரம் திரட்டல்

நவாலி,ஜன.31

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விவரம் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக திரட்டப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விவரங்கள் திரட்டப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த வகையில் இதற்கான பதிவுகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன.

சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு, சாவற்கட்டு, உயரப்புலம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 18 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவர்களை இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும் பதிவுசெய்யுமாறு கூறப்பட்டுள்ளது. (ம-100)

# மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கல்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்று மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிக்கும் கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இரு மாணவிகளுக்கும், கல்வி உதவு தொகையை வழங்கியதாக சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கம் தெரிவித்தார்.

சங்க கல்வி அபிவிருத்தி நிதியில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மற்றும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் சித்திபெறும் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு உதவுதொகை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். (ம-207)

# சிறந்த நிதி நிறுவனங்களாக சிக்கன கூட்டுறவுச் சங்கங்கள்

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.குடாநாட்டில் அதிக வங்கிகள் மக்களோடு மக்களாகப் பிணைந்து நிற்கின்ற வேளையில், கூட்டுறவு சார்ந்த மக்களின் நலன் கருதி குறைந்த வட்டி வீதத்தோடு கடன்களை வழங்கி கிராமிய மட்டத்தில் உயர்ந்து நிற்கும் உங்களின் பணி உயர்வானது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் வருடாந்த ஒன்று கூடலின் போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த நிதி நிறுவனமாக வளர்ந்து நிற்பதற்கு அர்ப்பணிப்பு உள்ள பணியாளர்களின் சேவையே காரணம். நிதி நிறுவனங் கள் எப்போதும் சரியான கணக்காய்வைப் பேண வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் கடந்த ஆண்டு வரவு செலவுத்திட்டம், நடப்பாண்டில் செய்ய இருக்கும் பணிகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் குழுவும், அனைத்துச் சங்கங்களின் கூட்டுறவாளர்களும் கலந்துகொண்டனர்.

(ம-ரி-311)

# நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.31

வடக்கு மாகாண உள்ளூராட்சி, கூட்டுறவு சமூக சேவைகள் அமைச்சுக்குப் புதிய செயலாளராக க.பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராக நீண்டகாலமாகப் பணிபுரிந்த திருமதி ரமேஷ் விஜயலட்சுமி புதிய பதவி பொறுப்பேற்று வடக்கு பிரதம செயலாளராகச் சென்றுள்ள நிலையில் அந்த இடத்துக்கு க.பால சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# நிவாரணத்தில் மட்டும் தங்கியிருத்தல் கூடாது

தென்மராட்சி,ஜன.31

சமுர்த்திப் பயனாளிகள் நிவாரணப் பொருள்களில் மட்டும் தங்கியிருக்காமல், அந்தந்த வலய சமுர்த்தி வங்கிகளின் வாழ்வாதாரத் திட்டங்களில் இணைந்து தமது வாழ்வாதார நிலைகளை உயர்த்திக்கொள்ளலாம்.

வாழ்வாதாரத் திட்டத்தை பெறுபவர்கள் வழங்கப்படும் முயற்சிப் பொருள்களின் பெறுமதியின் அரைவாசியை மட்டும் தவணை முறையில் செலுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. வாழ்வாதாரத் திட்டத்தில் இணைவோர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் பெறும் கடனை தவணை அடிப்படையில் செலுத்தும்போது அவர்கள் பெற்ற கடனில் அரைவாசியையே செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தில் வரணி சமுர்த்தி வலயப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன் இதில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது :

சமுர்த்திக் குழுக்கள் பலவற்றுக்குத் தற்போது ஆர்வம் குறைந்து காணப்படுகிறது. ஒவ்வொரு குழுக்களும் தமது பிரிவில் மேற்கொள்ளும் சிறந்த செயற்பாடுகள் நிச்சயம் இந்த வலயத்தினதும் பயனாளிகளினதும் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும். சமுர்த்தி அதிகார சபையினரால் வாழ்வாதார கடன் தொகை ஒரு லட்சம் ரூபாவிலிருந்து இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரித்த போதிலும் அந்தக் கடனை எடுக்க எவரும் முன்வராதது அந்தந்த சமுர்த்திக் குழுக்களின் செயற்பாடுகள் குறைவாக உள்ளதை சுட்டிகாட்டுகின்றது. கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சமுர்த்திப் பயனாளிகள் அபிவிருத்தியடை வேண்டும். அதன்மூலம் கிடைக்கும் பயன்களால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கப் பாடுபட வேண்டும்.-என்றார். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## தமிழர் தலைமையின் தேவை

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்கு வந்து திரும்பிய பின்னர் அரசு மற்றும் கூட்டமைப்புத் தலைவர்களால் வெளியிடப்பட்ட இரு கருத்துக்கள் கவனிப்புக்குரியன.

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கடுமையாக எதிர்க்கிறார் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அதேவேளை, தமிழர்களின் பிரச்சினை குறித்து ஏனைய சிறுபான்மை இனக் கட்சிகளுடன் கூட்டமைப்பு கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் என்று அதன் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கிறார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி இலங்கை அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குகிறது. அதன்படி மாகாணமட்ட உயர் பொலிஸ் அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் மாகாண முதல்வருக்குக் கிடைக்கிறது. காணி அதிகாரமும் அப்படியே.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாழக்கூடிய மாகாணம் எதிலும் அவர்கள் பெரும்பான்மையினராக இல்லாத காரணத்தால், சிங்கள முதல்வர் ஒருவரால் நியமிக்கப்படும் பொலிஸ், காணி அதிகாரிகள் தமிழர்களை வஞ்சம் தீர்ப்பர் என்ற அச்சமே அமைச்சர் தொண்டமான் அவற்றை நிராகரிப்பதற்கான காரணம்.

தொண்டமானின் இந்த அச்சம் நியாயமானது. ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்பட்ட பின்னரும்கூட சிங்களவர்களால் தமிழர்கள் வஞ்சிக்கப்படுவார்கள் என்ற உண்மையிலிருந்து எழுந்ததே இந்த அச்சம். அதுவும் எந்தவொரு சிங்கள அரசிலும் அமைச்சராகத் தொடரும் ஒருவரால் தெரிவிக்கப்படும்போது அந்த உண்மையின் வீச்சு எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவரது அச்சம் கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே நிராகரித்துவிட முடியாதது.

அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு வரும்போது ஈழத் தமிழர்களை வடக்கு - கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்றும் சிறுபான்மையினரைத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்றும் பிரித்தாளும் சூழ்ச்சியை அரசு நீண்ட காலமாகவே தொடர்கிறது.

அதனாலேயே காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு-கிழக்குத் தமிழர்கள் கேட்கிறார்கள்; மலையகத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த மஹிந்த ராஜபக்ஷ முயல்கிறார்.

தமிழர்கள் வடக்கு-கிழக்கு, மலையகம் என்று பிரிந்து கிடக்கின்றனர் என்பதும் உண்மையானது. இந்த இரு பகுதிகளுக்கும் உரிய அரசியல் தலைமைகள் மற்றவர்களுடைய உரிமைகள் மற்றும் தேவைகளில் இதுவரை அக்கறை காட்டவில்லை. தமக்கான அரசியல் வெளிகள் வெவ்வேறானவை என்று தலைமைகள் எண்ணுகின்றன.

இத்தகைய பின்னணியிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரனின் கூற்று கவனத்துக்குரியது. தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படவேண்டியதன் அவசியத்தைக் கூட்டமைப்பு புரிந்துகொண்டுள்ளமையை அது உணர்த்துகிறது.

தந்தை செல்வா அன்று கூட்டணியை உருவாக்கியமை போன்ற காலத்தேவை இப்போது மீண்டும் எழுந்துள்ளது. அதை நோக்கிய நகர்வாக கூட்டமைப்பின் அறிவிப்பை எடுத்துக்கொள்ள முடியும்.

இலங்கையில் பிறந்திருக்கக்கூடிய எல்லாத் தமிழர்களது நலன்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ளக்கூடிய தீர்வே அவசியமானது. அதுவே நிலைத்து நீடிக்கக்கூடியதுமாகும். அத்தகைய தீர்வு நோக்கி நகர்வதற்கு தமிழ்த் தலைமைகளை ஒன்றிணைக்கக்கூடிய தலைமை அமைப்பொன்று தேவை. கூட்டமைப்பு அதைநோக்கி நகரவேண்டும். அல்லது தன்னையும் உள்ளடக்கிய அத்தகைய அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும்.

பேசப்படுவதுடன் நின்றுவிடாத செயலே சிறந்தது. கலந்துரையாடல்களை உடன் ஆரம்பித்துவிடுங்கள்.

# ஈழ விடுதலைப் போராட்டம் கோரி நிற்கும் மீள்கட்டமைப்பு

■ வடிவேற்கரசன்

ஈழ விடுதலைக்கான புதிய மனப்பாங்கையும் புதிய சிந்தனையையும் மீள் கட்டமைப்பையும் வரலாறு கோரி நிற்கிறது.

எங்களுக்கு நாங்களே எஜமானர்களாய் இருக்க வேண்டும் என்றால் நாங்கள் நடந்து வந்த பாதையை நாங்களே திரும்பிப் பார்ப்பதுடன் எங்கள் தவறுகளை நாங்களே திருத்திக் கொள்ளவும், எங்களை நாங்களே புதுப்பிக்கவும், எங்களை நாங்களே மீள்கட்டமைப்புச் செய்யவும் தயாராக வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோமேயானால் நாங்கள் எதிரிகளின் சேவகர்களாகவே இருக்க நேரும்.

சேவல் கூவி சூரியன் உதிப்பதில்லை. ஆனால் சூரியனின் வரவை சேவலால் முன்னறிவிப்புச் செய்ய முடியும். சூரியன் கிழக்கே உதிக்கும் என்று சொல்ல ஒரு பண்டிதர் தேவையில்லை. ஆனால் சூரியன் ஏன் கிழக்கே உதிக்கின்றது என்பதை விளக்க ஒரு பண்டிதர் தேவை. ஒவ்வொன்றுக்கும் இருக்கக்கூடிய வல்லமையையும், அளவையும் அதனதற்குரிய சரியான அளவில் ஏற்கவும், புரிந்து கொள்ளவும்வேண்டும். ஒன்றைப் பற்றிய மிகை மதிப்பீடும் தவறானது, ஒன்றைப்பற்றிக் குறைத்து மதிப்படுவதும் தவறானது. எப்போதும் சரியானதும், துல்லியமானதுமான மதிப்பீடு நலத்திற்கும், வளர்ச்சிக்கும் அவசியமானது.

முப்பது வருட சாத்வீகப் போராட்டம் தோல்வியில் முடிவடைந்து விட்டது என்றும், அதன் பின்பு தொடங்கி நிகழ்ந்த முப்பது வருட ஆயுதப் போராட்டமும் தோல்வியில் முடிந்து விட்டது என்றும் இப்போது எங்கும் பேசிக்கொள்ளப்படுகிறது.

அகிம்சைப் போராட்டம் ஒரு கட்டமைப்பு. ஆயுதப் போராட்டம் இன்னொரு கட்டமைப்பு. தமிழரின் விடுதலைப் போராட்டம் எனும் பாதையில் இந்த இரு கட்டமைப்புக்களும் இருந்தன. தற்போது விடுதலைப் போராட்டம் மூன்றாவதான இன்னொரு மீள்கட்டமைப்பைக் கோரி நிற்கின்றது.

சோஷலிசத்திற்கான மார்க்ஸியமானது மார்க்ஸ் காலத்துடன் முதலாவது கட்டமைப்பை முடித்துக் கொண்டது. ஆனால் மார்க்ஸிக்கும் லெனினுக்கும் இடைப்பட்ட காலத்தில் அது ஒரு புதிய கட்டமைப்பிற்கான தேவையைக் கோரி ஊசலாடிக் கொண்டிருந்தது.

லெனின் வருகையுடன் மார்க்ஸிசம் இரண்டாவதான மீள் கட்டமைப்பைச் செய்துகொண்டது. ஒக்ரோபர் புரட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மார்க்ஸிசத்தை மேலும் மீள்கட்டமைப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

லெனின் பதவியில் இருந்தபடியே நடைமுறைத் தவறுகளை உணர்ந்து ஏற்று மீண்டும் மீள்கட்டமைப்புச் செய்தார். அதாவது மார்க்ஸில் இருந்து லெனின் காலம் முடியும் வரை மார்க்ஸிசம் மூன்று கட்டமைப்புக்களுக்கு உள்ளாகி இருந்தது.

1920களின் பிற்பகுதியில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தத்தைத் தொடர்ந்து மார்க்ஸியத்தை மீள்கட்டமைப்புச் செய்ய வேண்டியதற்கான பெரும் வரலாற்று நிர்ப்பந்தம் உருவானது.

> “தக்கன பிழைக்கும், தகாதன அழியும். காலகட்ட வளர்ச்சிச் சூழலுக்கும், குறிப்பாகச் சர்வதேச, பூகோளப், பிராந்திய நிலைமைகளுக்கும் பொருத்தமான வகையில் எம்மை நாம் தற்போது மீள்கட்டமைப்புச் செய்தாக வேண்டும்.

ஆனால் இற்றைவரை அது செய்யப்படவில்லை. அவ்வாறு தொடர் மீள்கட்டமைப்புக்களுக்கு மார்க்ஸிய சோஷலிசம் உள்ளாகாததன் விளைவே சோஷலிச அரசுகள் உலகப் பரப்பில் வீழ்ந்து நொருங்குண்டு போனமைக்கான காரணமாகும்.

அதேவேளை முதலாளித்துவம் தன்னை இடையறாது புதுப்பித்தும், மீள்கட்டமைப்புச் செய்தும் வருகிறது. அதனாற்தான் அது தொடர் வளர்ச்சியுடன் பூமியில் நின்று பிடிக்கிறது. எல்லாப் போராட்டங்களையும் காலகட்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அதனதன் அளவிலும், வல்லமையிலும் வைத்து அவற்றைச் சரிவர மதிப்பீடு செய்து காலதேச வர்த்தமானத்துக்குப் பொருத்தமான வகையில் தொடர் மீள்கட்டமைப்புக்களுக்கு உள்ளாக்க வேண்டும்.

ஈழத் தமிழரின் சாத்வீகப் போராட்டம் 1961ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விட்டது. 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் முழுத் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து குறிப்பிடக்கூடிய பெரும் சாத்வீகப் போராட்டம் எதனையும் தமிழரசுக் கட்சி முன்னெடுக்கவில்லை. இதன் பின்பு ஆங்காங்கே உள்ளூர் மட்டங்களில் சிறுசிறு அளவில் உண்ணாவிரதப் போராட்டங்களும், கறுப்புக் கொடி காட்டல்களும் நடந்தன. சில வேளை முழுத் தமிழ் மண்ணிலும் நடந்த அடையாள ஒரு நாள் கடையடைப்பு போன்ற சம்பவங்களைத் தவிர 1961இல் இருந்து 1982 வரை பெரும் சாத்வீகப் போராட்டங்கள் நிகழ்ந்ததில்லை.

ஆதலால் உண்மையான அர்த்தத்தில் 1961ஆம் ஆண்டு பெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்துடன் சாத்வீகப் போராட்டம் முடிவடைந்து விட்டதென்றே கூறவேண்டும்.

ஒன்றில் 1961ஆம் ஆண்டுடன் சாத்வீகப் போராட்டம் புதிய உத்வேகத்துடன் புதுப்பரிமாணம் பெற வேண்டியிருந்தது, அல்லது மீள்கட்டமைப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது. இரண்டும் நிகழவில்லை.

எப்போதும் அரசியலில் புதுப்பித்தல், மாற்றங்களுக்கு உள்ளாகுதல், இறுதியில் மீள்கட்டமைப்புச் செய்தல் தவிர்க்கப்பட முடியாத முக்கிய அம்சங்கள் ஆகும். மூன்று வயதுச் சட்டையை முப்பது வயதில் அணிய முடியாது. இந்த சின்னஞ் சிறிய உண்மை அரசியலுக்கு மிகவும் அவசியமானது. ஈழத் தமிழர்களின் போராட்டம் இப்பொழுது பல வகைகளிலும் மீள்கட்டமைப்பிற்கு உள்ளாக வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தில் உள்ளது.

தக்கன பிழைக்கும், தகாதன அழியும். காலகட்ட வளர்ச்சிச் சூழலுக்கும், குறிப்பாகச் சர்வதேச, பூகோள, பிராந்திய நிலைமைகளுக்கும் பொருத்தமானவகையில் எம்மை நாம் தற்போது மீள்கட்டமைப்புச் செய்தாக வேண்டும்.

இந்த வகையில் சர்வதேச அரசியல் மாற்றங்களும், பூகோள மாற்றங்களும் சமூகவாழ்வை பெரும் மாற்றங்களுக்கு உள்ளாக்கி உள்ளன. இவ்வாறு அனைத்து வகை மாற்றங்களையும் கருத்தில் எடுத்துக் கொண்டு அவற்றுக்கு பொருத்தமான வகையில் எமது அரசியலை நாம் மீள்கட்டமைப்புச் செய்ய வேண்டிய தவிர்க்கப்பட முடியாத அவசியத்தில் உள்ளோம்.

“சாத்வீகப் போராட்டமும் தோல்வி”, “ஆயுதப் போராட்டமும் தோல்வி” என்று கூறி வாழாதிருப்பதல்ல எம் தலைவிதி. ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கம். இங்கு இரண்டு தொடக்கங்களை வரலாறு முன்வைத்திருக்கிறது. ஒன்று ஆயுதப் போராட்டத்தின் தோல்வி என்பது சிங்கள இனத்துடன் கரைந்து அழிந்து போவதற்கான தொடக்கத்தைக் கொண்டிருக்கிறது. சிங்கள ஆட்சியாளருடன் இணக்க அரசியல் நடத்துவது என்ற பதம் இத்தகைய கரைந்தழிவிற்கான தொடக்கத்தையே குறித்து நிற்கிறது.

இரண்டாவது 1,40,000ற்கு மேற்பட்ட தமிழ் மக்களை கொன்றழித்த இனத்துடன் நாம் ஒருபோதும் இணைந்து வாழ முடியாது என்ற செய்தியின் அடிப்படையில் எமக்கான ஒரு புதிய தொடக்கத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

1,40,000ற்கு மேற்பட்ட மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதையும்விட அவர்களின் கிராமங்கள், நகரங்கள், வீடுகள், வழிபாட்டு இடங்கள் என்பன அழிக்கப்பட்டதையும்விட மோசமான தவறு அவற்றை ஒப்புக் கொண்டு மனம் வருந்தக்கூடிய ஒரு மனச்சாட்சியுள்ள சிங்கள மகனும் இல்லை என்பதுதான்.

அதாவது இனப்படுகொலையைவிடவும் மோசமானது அந்த இனப்படுகொலையை நியாயப்படுத்தும் விதமும் அல்லது அதனை மறுக்கின்ற விதமுமாகும்.

சிங்கள ஊடகங்கள், சிங்களவரால் நடத்தப்படும் ஆங்கில ஊடகங்கள் என்பன எதுவும் நடந்து முடிந்த கோர இனப்படுகொலை பற்றி மனம்வருந்தும் ஒரு செய்தியைத்தானும் வெளியிட்டதில்லை. இது இனப்படுகொலையின் அசிங்கத்தை விடவும் மோசமான அசிங்கம்.

இப்படிப்பட்ட மனநிலையிலிருக்கும் சிங்கள இனத்தவர்களுடன் இனியும் எவ்வாறு இணைந்து வாழ முடியும்?

இப்படிப்பட்ட நிலையில் நாம் கரைந்து இணைந்து அழிந்துபோக முடியாது. மாறாக இனப்படுகொலையும், அதன் பின்னான இரண்டு வருடகால ஒட்டுமொத்த சிங்கள இனத்தின் மனப்போக்கும், நடைமுறைகளும் பிரிந்து செல்வதைத் தவிர வேறு மார்க்கம் ஈழத் தமிழருக்கு (27ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை நின்றும் துவானம் ஓயாத நிலையில் வன்னி

சுயன்

“ ஓர் அங்கத்தவரை மாத்திரம் கொண்டுள்ள குடும்பத்திற்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட மாட்டாது என்று கூறப்படுகின்றது. இது பற்றி பாதிக்கப்பட்டவர்கள் கூறுகையில் “ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்திற்கு வீடு இல்லை என்று கூறுகிறார்கள் ஆனால் எமது குடும்பத்தில் 5 அங்கத்தவர்கள் இருந்தார்கள். முள்ளிவாய்க்காலில் நடந்த கொடிய போரின் போது எமது தறப்பாள் கூடாரத்துக்கு மேல் ஷெல் விழுந்து எனது அம்மா, அப்பா, அண்ணா, தங்கை எல்லாருமே இறந்துவிட்டார்கள்.

போர் நடைபெற்று பல் வேறு அழிவுகளை எதிர்நோக்கிய வன்னிப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களில் பலபேர் வாழ்வதற்கு ஒரு நிம்மதியான வீடு இல்லாத நிலையில் தறப்பாள் கூடாரங்களிலும், தகரக் கொட்டகைகளிலும் அவலம் நிறைந்த வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றார்கள்.

மீள்குடியமர்வு இடம்பெற்று இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும், பல தடவைகள் இந்திய வீட்டுத்திட்டம், எனக் கூறப்பட்ட போதிலும், பல மக்கள் வீடுகள் இல்லாமல் மழை, வெள்ளம், வெயில் என அவலப்படுவதைக் காணக் கூடியதாகத்தான் உள்ளது.

தற்போது, இந்திய அரசால் 50 ஆயிரம் வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவை மூன்று கட்டங்களாக மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டு வருகின்றது. இதனைக் கேள்வியுற்ற மக்கள், தமக்கும் ஒரு வீடு கிடைக்கப் போகின்றது அதில் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழலாம் என்ற மனநிலையில் காணப்படுகின்றனர்.

எல்லா வகையிலும் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் இப்படியும் கதைத்துக்கொள்வதனையும் அவதானிக்க முடிகின்றது. அதாவது இந்த இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் யார் யார் எல்லாம் தலையிட்டு தாம் நினைத்தபடி தமது சுயநல நோக்கத்துக்காக, தமக்கு உரியவர்கள் என நினைப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை வழங்கப் போகிறார்களோ அல்லது உரிய நெறி முறைப்படி வழங்கப்போகிறார்களோ என்ற குழப்ப நிலையிலும் காணப்படுகின்றார்கள்.

வன்னிப் பகுதியில் சில கிராமங்களில் வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் பட்டியல் என்ற பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல்கள் கூட ஒட்டப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக கிளிநொச்சி பகுதிகளின் பல கிராமங்களில் பெயர்ப் பட்டியலை நோக்கக் கூடியதாக இருக்கிறது.

ஒட்டப்பட்ட பெயர் பட்டியலில் கூட சிலருக்கு பெயர் விவரம் வரவில்லை எனவும் அடுத்த கட்டப்பட்டியலில் அவர்களின் பெயர் விவரங்கள் இடம்பெறும் என்று உரியவர்களால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள் மக்கள்.

சில கிராமங்களில் உள்ள பெயர்ப் பட்டியல்களில் உறவு முறைகளைக் கொண்ட உறவினர்களது குடும்பங்களின் பெயர்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றைக் கிராம சேவையாளர் உட்பட்ட, உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியதாகவும் அந்தப் பெயர்ப் பட்டியல்களை நீக்கி சரியான முறைப்படியான பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படும் என்றும் அவர்களால் கூறப்பட்டதாகவும் அல்லலப்படும் மக்கள் கூறுகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

வன்னிப் பகுதிகளில் உள்ள பல மக்களுக்கு கடந்த காலங்களில் வெவ்வேறு திட்டங்களின் மூலம் வழங்கப்பட்ட வீடுகள் கூட கிடைக்கவில்லை. இதற்குக் கூறப்பட்ட காரணம் அவர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் இல்லை என்பதாகும். நீண்ட காலமாக காணிகளிலே வசிக்கும் போதிலும், அதற்கான உறுதிப்பத்திரங்களைப் பெறாது இருந்துள்ளார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மருதநகர் இராமநாதன் குடியிருப்பு மக்கள் கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக அப் பகுதிகளில் பரம்பரையாக வசித்து வருகின்ற போதிலும்; தமது காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை அண்மையில்தான் பெற்றிருந்தார்கள். இவர்களுக்கான வீட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகள் கூட காணி உறுதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் வழங்கப்படாமல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியாக வன்னியின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் மக்கள் தமது வாழ்விடங்களுக்கான உறுதிப்பத்திரங்களைக் கொண்டிராதமையால் வீட்டுத்திட்டம் போன்ற அடிப்படை உதவித் திட்டங்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்க்கொண்டிருக்கின்றன.

அரசுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவின் போது, ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டும் உள்ள குடும்பங்களுக்கு அதாவது ஒரு அங்கத்தவரை மாத்திரம் கொண்டுள்ள குடும்பத்திற்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட மாட்டாது என்று கூறப்படுகின்றது. இது பற்றி பாதிக்கப்பட்டவர்கள் கூறுகையில் ‘‘ஓர் அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்திற்கு வீடு இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் எமது குடும்பத்தில் 5 அங்கத்தவர்கள் இருந்தார்கள். முள்ளிவாய்க்காலில் நடந்த கொடிய போரின் போது எமது தறப்பாள் கூடாரத்துக்கு மேல் ஷெல் விழுந்து எனது அம்மா, அப்பா, அண்ணா, தங்கை எல்லாருமே இறந்துவிட்டார்கள். காயப்பட்ட நிலையில் நான் மட்டுந்தான் உயிர் தப்பி யாருமற்ற நிலையில் நடைபிணமாகக் கஸ்டப்படுகின்றேன். எனது அம்மா அப்பாவுடன் வாழ்ந்த வீடும் அழிக்கப்பட்டுள்ள நிலையில் எனக்கு வீடு தர மாட்டோம் என்று சொல்கிறார்கள். உறவினர்கள் எல்லோரும் கொல்லப்பட்ட நிலையில் உள்ள என்னைப் போன்றவர்களுக்கு எதிர்காலமே இல்லையோ? நாங்கள் வாழக்கூடாதோ?'' என்று கூறியதனையும் கேட்க முடிந்தது.

உறவினர்களை போரில் இழந்தவர்களாக தனியே ஓர் அங்கத்தவராக வாழ்பவர்களின் நிலை அவர்களது வயது போன்றவற்றையும் கருத்தில்கொண்டு அவர்களுக்கும் வீட்டுத்திட்டம் கிடைக்கக் கூடிய வழிவகைகளை உரியவர்கள் உணர்ந்து உதவ வேண்டும் என்பது பலரது கோரிக்கையாக உள்ளது.

நடைபெற்ற கொடூரமான போர்களின் மூலம் பல வீடுகள் அழிக்கப்பட்டன, முழுமையான சேதங்களுக்குள்ளாக்கப்பட்டன. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் வசிப்பதற்கு வீடுகள் அற்ற நிலையில் தறப்பாள், தகரக் கொட்டகைகள், கூடாரங்களில் அவலப்பட்டுக் கொண்டிருப்பதை அனைவரும் அறிவார்கள். இப்படியான மக்களுக்கு இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகள் வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிலையில் வீடற்றவர்களாக அவல வாழ்க்கை வாழுகின்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ள வீடுகளில் எமக்கும் 500 வீடுகள் தர வேண்டும், 1000 வீடுகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் விடப்பட்டு பங்கு போடுவதற்கான முயற்சிகளில் பலர் ஈடுபட்டு வருவதனையும் அறியக் கூடியதாக உள்ளது.

இந்த வீடுகள், தமது சொத்து சுகங்கள் எல்லாவற்றையும் இழந்து மழை, வெயில், பனி, காற்று இன்னும் பலவற்றாலும் அல்லும் பகலும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்குரியவை. அவர்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கற்றறிந்தவர்கள் கூடக் கருத்தில் எடுக்கவில்லைப் போலும்.

இந்த மக்கள் கொத்துக் கொத்தாக செத்துக்கொண்டிருந்த காலம் முதல், இந்த அவல வாழ்க்கைவரை இவர்களுக்காக வாய் கூடத் திறக்காமல் இருந்த சிலர், அழிந்துபோய் அல்லற்படும் இந்த மக்களுக்கு வரும் உதவித் திட்டங்களில் பங்கு கேட்கிறார்கள் என்றால்....

போர்களின் மூலம் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் போன்றவற்றால் உடைமைகள் அனைத்தையும் இழந்து உறவுகளையும் இழந்து வாழ்வதற்கு ஒரு வீடு கூட இல்லாத நிலையில் இம் முறையாவது தமக்கும் ஒரு வீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் எல்லாவற்றையும் இழந்துவிட்ட நிலையிலும் நம்பிக்கை ஒன்றை மட்டும் இழக்காமல் தறப்பாள், தகரக் கூடாரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மக்களுக்கும் வீடுகள் கிடைக்க வேண்டும், அவர்களும் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும், அவர்களும் வாழ வேண்டும் என்பது மனிதப் பண்புடையவர்களின் விருப்பமும் கோரிக்கையுமாகும். *

# காணி, பொலிஸ் அதிகாரம் இல்லாவிடின் அது 13 மைனஸ்தான்

இரா. சிகா

“ 13 பிளஸ் என்றால் அதைவிடக் கூடியதாக இருக்க வேண்டுமே தவிர குறைந்ததாக இருக்க முடியாது.

ஊடகத் துறைகள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கும் பிளஸ்-மைனஸ் இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் தெரியவில்லை போலும்.

இதனால் தான் 13- பிளஸ் தொடர்பாக வாய்க்கு வந்தபடி இவர்கள் இருவரும் வியாக்கியானம் செய்கின்றனர்.

தனக்கு சர்வதேச அரங்கில் அரசியல் பிரச்சினைகள் ஏற்படும் போதும், உள்நாட்டில் தேர்தல்கள் நடைபெறும் போதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தாரக மந்திரமாகப் பயன்படுத்தப்படுவது தான் இந்த 13 பிளஸ்.

இது ஏற்கனவே தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள வெறும் சுலோக அட்டை மட்டுமே. தேவை ஏற்படும் போது தூக்கிக் காட்டி விட்டு அது மூலையில் போடப்படும்.

18 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவைக்கு மேல் மூன்றாம் தடவையாகவும் போட்டியிடலாம் என்று தனக்கு ஏற்ப மாற்றிக் கொண்ட போதும், இரண்டாவது ஆட்சிக் காலத்துக்கான தேர்தலின் போதும், ‘விக்கி லீக்ஸ்’ விடயங்களை அம்பலப்படுத்திய போதும், ஐ.நா. நிபுணர்குழு நியமிக்கப்பட்ட போதும் இங்கு நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்ட போதும், ஜனாதிபதியின் அமெரிக்க மற்றும் இந்திய விஜயங்களின் போதும் இந்த 13 பிளஸ் சுலோக அட்டை வெகுவாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் சில காலம் அது மூலையில் போடப்பட்டது.

இப்பொழுது அந்த 13 பிளஸ் சுலோக அட்டைக்கு மீண்டும் மவுசு வந்து விட்டது. மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடர் இலங்கை அரசை ஒருபுறம் அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றது.

இப்படி ஓர் இக்கட்டான நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எப். கிருஷ்ணாவும், தொடர்ந்து இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், சர்வதேசப் புகழ்மிக்க விஞ்ஞானியுமான அப்துல் கலாமும், இலங்கைக்கு வந்தமை போன்ற நிகழ்வுகள், ஜனாதிபதிக்கு 13பிளஸ் சுலோக அட்டையை ஞாபகப்படுத்தி விட்டது. உடனே மூலையில் கிடந்த அட்டையை தூசி தட்டி தூக்கிக் காட்டி விட்டார்.

வந்தவர்களும் ‘‘ஆஹா’’ இதுவன்றோ தீர்வு, எவ்வளவு அழகாக இருக்கின்றது என்று வாயாரப் புகழ்ந்து விட்டுப் பறந்து விட்டனர். மனதாரத்தான் பாராட்டினார்களா என்பது அவர்களுக்கும் ஆண்டவனுக்குமே வெளிச்சம்.

இங்கு இருப்பவர்களுக்கும் இடுக்கண்களை அனுபவித்தவர்களுக்கும்தானே புரியும் ஜனாதிபதியின் இந்த மாயாஜாலம்.

உண்மைநிலை இப்படி இருக்க, அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவரும், அரசின் ஊடகப் பேச்சாளரும், ஊடகத்துறைக்குப் பெறுப்பானவருமான அமைச்சர் கெஹலியரம்புக்வெல கூறுபவை விநோதமானவை.

அதேபோன்று ஜனாதிபதியின் வாயில் இன்று உதிரும் ஒவ்வொரு வார்த்தைகளையும் அச்சொட்டாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பில் இருப்பவரான ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் அப்படித்தான்.

13 பிளஸ் என்பது ‘செனட் சபை’ என்று இவர்கள் இருவரும் வியாக்கியானம் செய்கின்றனர். செனட் சபையும், நாடாளுமன்ற தெரிவுக் குழுவும்தான் பிரச்சினைக்குத் தீர்வு என்றால் அரசு அதனை வெளிப்படையாகக் கூறிவிடலாம்தானே.

அதைவிட்டு யாரைத் திருப்திப்படுத்த இவர்கள் இந்த 13 பிளஸ் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

இவர்கள் என்ன மைனஸ், பிளஸ் வித்தியாசம் புரியாதவர்களா? என்றே சிந்திக்கத் தோன்றுகிறது. 13 பிளஸ் என்றால் அதைவிடக் கூடியதாக இருக்க வேண்டுமே தவிர குறைந்ததாக இருக்க முடியாது.

13ஆம் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளகாணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கமுடியாது என்றால் அது நிச்சயம் 13 மைனஸ் ஆகத்தான் இருக்கும்.

இதுதான் அரசின் உண்மையான நிலைப்பாடு என்றால் ஏன் அதை 13 பிளஸ் பம்மாத்துக்காட்ட வேண்டும். 13 மைனஸ் என்று கூறிவிட வேண்டியது தானே.

இங்கே இன்னும் ஒரு விடயத்தையும் அவதானிக்க வேண்டும். ஜனாதிபதியின் பெரும் நம்பிக்கைக்கு உரியவர் வீடமைப்பு நிர்மாணத்துறை கள் அமைச்சர் விமல் வீரவன்ஸ. இவர் ஏற்கனவே ஐ.நா.நிபுணர் குழு நியமனத்துக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதம் என்று கூறி கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகத்தின் முன்னால் மெத்தையில் படுத்திருந்து ஆரவாரம் செய்து அடங்கிப் போனவர். மற்றும் ஒருவர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இவர்கள் இருவருமே ஜனாதிபதியின் ஊதுகுழல்கள். ஆனால் இவர்கள்தான் ஜனாதிபதியின் 13 பிளஸ் அறிவிப்புக்கு எதிராகப் போர் கொடி தூக்கிக் கொண்டு பிரசாரம் செய்வார்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால் நான் அப்படித்தான் சொல்லுவேன். நீங்கள் சத்தம் போடுங்கள். பிறகு உங்களைக்காட்டி நான் சமாளித்து விடுகிறேன் என்று ஜனாதிபதி ஆடும் நாடகமாகத் தானே இருக்கிறது.

அப்படியானால் ஜனாதிபதி பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார். அதற்குச் சரியாக வாய்த்து விட்டது இந்தப் 13 பிளஸ். இந்தப் 13 பிளஸை வைத்து தமிழ் கூட்டமைப்பையும், ஏனைய அரசியல் கட்சிகளையும், சர்வதேசத்தையும் நன்றாகப் போக்குக் காட்டுகிறார் ஜனாதிபதி. இது எவ்வளவு காலத்துக்குப் பலிக்கப் போகிறது என்பது தான் தெரியாது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவத்தில் பங்கு

நீண்ட காலத்துக்கு முன்னாள் ரத்னாகர் என்று ஒருவன் இருந்தான். அவன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன்தான். இருந்தாலும் அவனது சில நடவடிக்கைகள் சரியில்லை. வேடர்கள் சிலபேருடன் சேர்ந்துகொண்டு அடிக்கடி எங்கேயாவது போய் கொள்ளை அடிப்பான். அதுவே அவனுக்குத் தொழிலாகிவிட்டது.

ஒரு சமயம் சப்தரிஷிகள் அவன் இருந்த இடத்துக்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் இவனுக்கு உள்ளங்கை அரிக்க ஆரம்பித்துவிட்டது. சும்மா இருக்க முடியவில்லை. அவர்கள் எதிர்பாராமல் இருந்த சமயம் பார்த்து ஏதாவது இருந்தால் எடுத்துக்கொண்டு வரலாம் என நினைத்து அவர்களைப் பார்க்கப் போனான். ஆனால் அவர்கள் இதைப் புரிந்து கொண்டு விட்டார்கள். உடனே "எங்களிடம் எந்தப் பொருளும் கிடையாதே; எதைக் கொள்ளையடிக்கப் போகிறாய்?" என்று கேட்டார்கள். இவன் முழிக்க ஆரம்பித்தான். "அதுசரி ஏன் இந்தப் பாவத்தைச் செய்கிறாய்?" என்று சப்தரிஷிகள் கேட்டார்கள். அதற்கு அவன் "என் குடும்பத்தில் என்னையும் சேர்த்து மொத்தம் ஐந்துபேர். அவர்கள் எல்லோருக்காகவும்தான் நான் திருடுகிறேன். அதனால் அந்த ஐந்தில் ஒரு பாவம்தானே எனக்குச்சேரும்" என்றான் அந்த ரத்னாகர்.


"அப்படியா நாங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கிறோம். நீ இப்போது நேராக உனது வீட்டுக்குப் போய் உனது குடும்பத்தில் உள்ளவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு வா" என்றார்கள் சப்தரிஷிகள். "என்ன கேட்க வேண்டும்? சொல்லுங்கள்" என்றான். " நீ செய்யும் பாவத்தையும் அவர்கள் பங்குபோட்டு எடுத்துக் கொள்கிறார்களா என்று கேட்டுவிட்டு வா" என்றார்கள். ரத்னாகர் நேராக வீட்டுக்குப் போய் தனது தந்தையிடம் " நான் கொள்ளையடித்துக் கொண்டு வரும் பொருள்களில் பங்கு எடுத்துக் கொள்கிறீர்களே; நான் செய்யும் பாவத்தில் உங்களுக்கும் பங்கு உண்டா?" என்று கேட்டான். "அது எப்படி முடியும் என்னைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய கடமை அதனால் நீ கொண்டு வரும் பொருள்களில்தான் எனக்குப் பங்கு உண்டு; பாவத்தில் பங்கு கிடையாது" என்று சொல்லிவிட்டார்.

அவன் அடுத்ததாதே தனது தாயிடம் போய் இதே கேள்வியைக் கேட்டான். அவரும் அதே பதிலையே சொல்லிவிட்டார். பின்னர் இவன் தன்னுடைய மனைவியிடம் போய்க் கேட்டான். மனைவியும் அதே பதிலைத்தான் சொன்னாள். கடைசியாக மகனிடம் கேட்டான். அவன் மட்டும் என்ன எதிர்மாறா? அதே பதிலைத்தான் கூறினான். அவர்கள் எல்லோரும் பொதுவாகக் கூறியது என்னவென்றால், "எங்களைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு உண்டு. அதனால் நீ கொண்டு வரும் பொருள்களில் பங்கு எடுத்துக் கொள்வது தப்பு இல்லை. ஆனால் நீ செய்யும் பாவத்தில் எங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பது தான்."

இவன் யோசித்துப் பார்த்தான். அவனுக்கு மிகுந்த பயம் ஏற்பட்டுவிட்டது. 'இதுவரைக்கும் அதிகமான பாவத்தைச் சேர்த்துவிட்டேனே! இனிமேல் எப்படி அந்தப் பாவத்தில் இருந்து விடுதலைபெறப் போகிறேன் என்று நினைத்துப் பார்த்தான்.' ஒன்றும் புரியவில்லை. ஓடிப்போய் அந்த ரிஷிகளின் கால்களில் வீழ்ந்தான். அவர்கள் அவனுக்கு ராமநாமத்தை உபதேசம் செய்தார்கள். தொடர்ந்து அந்த நாமத்தை உச்சரிக்கும்படியும் கூறினார்கள்.

ரத்னாகர் உடனே அதைச் செய்ய ஆரம்பித்தான். வேறு எந்த ஞாபகமும் இன்றி ராமநாமத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றி கரையான் புற்று உண்டானதைக் கூடக் கவனிக்கவில்லை. அந்த ரத்னாகர் யார் என்று தெரியுமா? அவர்தான் வான்மீகி. இராமாயணம் என்கின்ற அற்புதக் காவியத்தை எமக்கு வழங்கிய வான்மீகிதான் அந்த ரத்னாகர். இந்தக் கதையைப் படித்துவிட்டு வான்மீகி போன்று ஆக வேண்டும் என்று கூறிக்கொண்டு யாரும் கரையான் புற்றுக்குள் போய் உட்கார்ந்து விடாதீர்கள்! பாவத்தை எப்படிப் பங்கு போடலாம் என்று யோசித்துக்கொண்டு இருக்காதீர்கள். இந்தக் காலத்திலும் ரத்னாகர் போன்று ஒருவன் இருந்தான். அவனுக்கு இன்னொரு நண்பன் அவனைப் போன்றே இருந்தான்.

இரண்டு பேரும் வெவ்வேறு இடத்துக்கு திருடப் போவார்கள். எது கிடைத்தாலும் ஆளுக்குப்பாதி பங்கு பிரித்து எடுத்துக்கொள்வார்கள். இதுதான் அவர்கள் வழக்கம். ஓர் அமாவாசை அன்று இரண்டுபேரும் இரண்டு பக்கமாகப் போனார்கள் அவர்கள் தொழிலைக் கவனிக்க. மறுநாள் காலையில் திரும்பி வந்த அவர்கள் ஒரு தனியான இடத்தில் சந்தித்தார்கள். பின்னர் கிடைத்ததை ஆளுக்குப்பாதி பங்குபோட்டுக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஒருத்தன் தனக்கு எண்ணூறு ரூபா கிடைத்ததாகக் கூறி அதில் சரி பாதி நானூறு ரூபாவை நண்பனுக்கு கொடுத்துவிட்டான்.



அவன் எழுந்து காசு கொடுத்தவனை ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டி சாட்டையால் பதினைந்து சவுக்கடி கொடுத்தான். அவன் துடித்துப் போய் "ஏன் இப்படிச் செய்கிறாய்? என்றான். இதற்கு அவன் "நேற்று நான் போன இடத்தில் பிடிபட்டு விட்டேன். அங்கு எனக்கு முப்பது சவுக்கடிகள் கிடைத்தன. அதுதான் பாதிப் பங்கை உனக்குக் கொடுத்தேன்" என்றான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# கால் நூற்றாண்டாகச் சேவையாற்றும் சதாவதானி சி. க. கூட்டுறவுச் சங்கம்




தமிழ் மொழியையும், சைவத்தையும் வரலாற்று வழியாக விவசாயத்தையும் பிரதானதொழிலாகக் கொண்ட மேலைப் புலோலி தம்பசிட்டியில் கடந்த கால் நூற்றாண்டாக நிலைகொண்டு தொடர்ந்து வளர்ந்து உயர்ந்து வரும் மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம், அதன் செயற்பாடாலும் வளர்ச்சியாலும் கடந்தஆண்டு சிறந்த சிக்கனக் கடனுதவிச் சங்கமாக யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டு தனது பணியில் வீறு நடை போட்டுவருவதுடன் யாழ். மாவட்டத்தில் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன் மாதிரியாகவும் திகழ்கின்றது.

இந்தியாவிலும், இலங்கையிலும் தமிழையும், சைவத்தையும் வளர்த்துப் போதித்த சாதவதானி நா.கதிரவேற்பிள்ளை தம்பசிட்டியில் பிறந்தமையால், அந்தக் கிராமத்தில் தோன்றும் நிறுவனங்கள் அனைத்துக்கும் அவருடைய பெயரைச் சூட்டி வருவது மரவு வழியாகும். அந்த வகையில் சனசமூக நிலையம், முன்பள்ளி, சிக்கனகடனுதவி கூட்டுறவுச் சங்கம் போன்றவை அவருடைய பெயரால் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று தனித்தனியாக இயங்கினாலும் புரிந்துணர்வுடன் இணைந்த பணிகளை மேற்கொண்டு வருவதை நாளும் பொழுதும் அவதானிக்கக் கூடிதாக இருக்கின்றது.

இந்த நிறுவனங்களில் சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமானது கடந்த 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி சதாவதானியான கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பிரபல தொழில் அதிபரும், பருத்தித்துறை நகர சபை உறுப்பினரும், அப்போதைய கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவருமான அமரர் மு.பொ.வீரவாகு தலைமையில் "புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கனச் சேமிப்பு சங்கம்" என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தச் சங்கத்துக்கு சங்க உப விதிகளின்படி "புலோலிமேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கம் (மட்டுப்படுத்தப்படாதது), என ஏகமனதாகப் பெயர் சூட்டப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வுக்கு கழகத்தை அப்போதைய யாழ்.மாவட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களின் சமாசத் தலைவர் அமரர் வி.கே.சுப்பிரமணியம், யாழ். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அமரர் எஸ்.தணிகாசலம் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். இந்த நிகழ்வில் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச்சங்கத்தை அமைப்பதன் அவசியத்தையும், அந்தச் சங்கத்தின் மூலம் மேலைப்புலோலி கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் எனத் தலைவர் மு.பொ. வீரவாகு வலியுறுத்தினார். சமாசத் தலைவர் வி.கே.சுப்பிரமணியம் சங்கத்தின் நோக்கங்கள், சங்கத்தைப் பதிவு செய்யும் முறை, வழங்கப்படக்கூடிய கடன்களின் தன்மைகள் என்பன பற்றி அங்கத்தவர்களுக்கு விளக்கினார். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் இந்தச் சங்கத்தை வளர்ப்பதை புனித கைங்கரியமாக மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்ததோடு, சங்கத்தின் உப விதிகளையும் விளக்கினார்.

ஆரம்பக் கூட்டத்தில் ஆண்கள் பெண்கள் உட்பட 20 பேர் கலந்து கொண்டு சங்கத்தில் அங்கத்துவம் பெற்றனர். சங்கத்தின் தலைவராக அமரர் மு.பொ.வீராவாகுவே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் தலைமை நிர்வாகக் குழு, செயற்குழுக்களும் ஏகமனதாகத் தெரிவாகின.

இந்தச் சங்கத்துக்கு சங்க உப விதிகளின்படி "புலோலிமேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கம் (மட்டுப்படுத்தப்படாதது), என ஏகமனதாகப் பெயர் சூட்டப்பட்டது. சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான அங்கத்துவப் பணம் பெறுமதி 50 ரூபா எனவும் 5 ரூபா வீதம் பத்து மாதங்களில் அங்கத்தவர்கள் இந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் எனவும், மாதாந்த சேமமாக பத்து ரூபாவும், மரணச் சகாயநிதியாக இரண்டு ரூபாவும், பிரவேசப் பணமாக 5 ரூபாவும் அறவிடுவதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்துக்கான வங்கிக் கணக்கை புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தையடுத்து அடுத்த கூட்டம் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றபோது சங்கத்தைப்பதிவு செய்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன் புலோலி மேற்குப் பகுதியில் உள்ள நெரிஞ்சியம்மன் கோயில் வீதி, தம்பசிட்டி வீதி, கல்லூரி வீதி அடங்கலாக சாளம்பைக் கிராமத்தையும் சேர்ந்து வீதியின் இரு மருங்கிலும் வசிப்பவர்கள் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய அடுத்தடுத்த கூட்டங்களில் அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டனர்.

இதே ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் திகதி உப தலைவர் மார்கண்டேயபிள்ளை தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் எந்தவொரு விசேட திட்டத்தின்கீழும் பிற நிறுவனங்களின் நிதிகளைப் பெற்று வழங்கப்படும் கடனுதவி தெரிவு செய்யப்படும் அங்கத்தவரின் 'தனியார் எல்லைக் கடன் 'என்ற விசேட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆனால் அந்தக் கடன் உச்சத் தொகைக்கு மேற்படாமல் இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சங்கத்துக்கென தயாரிக்கப்பட்ட 51 உப விதிகளும் இந்தக் கூட்டத்தில் ஏற்றுகொள்ளப்பட்டதுடன் ஆரம்பத்தில் அங்கத்தவர்தொகை 20 ஆக இருந்து ஒரு சில மாதங்களில் 37 ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்களில் சங்கத்தில் 4 ஆயிரத்து 400 ரூபா வைப்பில் உள்ளதால், இந்தத்தொகைக்கு எதிரான கடனாக 4 ஆயிரம் ரூபாவை சமாசத்திடமிருந்து பெற்று, தகுதியான அங்கத்தவர்கள் நால்வருக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் சுய தொழிலுக்கு கடனாக வழங்க தீர்மானிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டன இதன்படி நான்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு தலா ஆயிரம் ரூபா வீதம் 18 வீத வட்டியில் முதன் முதலாக சங்கம் கடனை வழங்கத் தொடங்கியது.

சங்கத்தின் செயலாளர் வெளிநாடு செல்வதற்காக பதவி விலகிச் செல்ல இருந்ததால் புதிய செயலாளராக திருமதி பொ.இரத்தினசோதி என்ற பெண்மணி முதன்முதலாகத்தெரிவு செய்யப்பட்டு, சங்த்துக்கு பெண்கள் மத்தியில் பலம் சேர்த்தார். 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இவர் செயலாளர் பதவிஏற்றதும், மேலும் 5பெண்கள் சங்கத்தில் புதிய அங்கத்தவர்களாக இணைந்துகொண்டனர். மேலும் 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆண்கள், பெண்கள் உட்பட வேறு 5 பேர் அங்கத்தவர்களாக இணைந்துக்கொண்டனர். மேலும் இரு பெண்களுக்கும் ஒரு ஆணுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் சேமத்துக்கு எதிரான கடனாக சமாசத்தில் பெறப்பட்டுக் கடன் வழங்கப்பட்டது. (தொடரும்)

**கர்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசை வீழ்த்த சிறந்த 'ராணுவம்' தேவை

கொழும்பு,ஜன.31

தற்போதைய அரசை வீழ்த்த வேண்டுமாயின் சிறந்த இராணுவம் ஒன்று தனக்குத் தேவைப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறந்த இராணுவம் ஒன்று இல்லாமல் இந்த அரசை


**மக்கள் சக்தி என்ற இராணுவம் தன்வசம் இருந்தால் ஊழல் நிறைந்த இந்த அரசுக்கு எதிராக போராட இலகுவாக இருக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

வீழ்த்துவது கடினம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் சக்தி என்ற இராணுவம் தன்வசம் இருந்தால் ஊழல் நிறைந்த இந்த அரசுக்கு எதிராக போராட இலகுவாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஊடக சக்தியின் மூலம் அரச அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்று தமது கட்சியின் உறுப்பினர்கள் சிலர் நினைத்திருக்கின்றனர். அவ்வாறு அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் சென்று



விழிப்புணர்வை ஏற்படுத்தினால் அரசை வீழ்த்த முடியும்.

இதற்கான திட்டங்கள் தன்னிடம் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மருந்துகளைப் பரிசோதிக்க 4 அதிகாரிகள் நியமனம்

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,ஜன.31

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் மருந்துப் பொருள்கள், ஒப்பனை பொருள்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதற்காக நான்கு அதிகாரிகளை நியமித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் நாட்டில் உள்ள சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர்கள் தமது பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் மட்டுமே சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் இந்த நான்கு அதிகாரிகளுக்கும் நாட்டின் எந்தவொரு பாகத்திலும் உள்ள மருந்தகங்கள், உணவகங்கள், ஒப்பனை நிலையங்கள் மற்றும் இவற்றோடு இணைந்த சாதன நிலையங்களிலும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொலிஸாருக்கு அதிகாரம்

கொழும்பு,ஜன.25

அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் சட்டத்தை மீறி, பேரணி அல்லது ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதனை தடுத்து நிறுத்த பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு ஒன்றை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று திங்கட்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கூடி அதன் பின்னர் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கு பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றால் பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அது பெரிதும் பாதிப்பாக அமையும் என்று பொலிஸார் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கருத்தை பரிசீலித்த நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி, பொலிஸ் கட்டளைச் சட்டம் 95(01) அத்தியாயத்தின்படி சட்டவிரோத பேரணி, ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றால் அதனைத் தடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என்று அவர் தெரிவித்தார். (ச)



கொழும்பு மாநகர சபையின் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கொழும்பு மாநகர முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கொழும்பின் பல பாகங்களுக்கும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# மனுவை விசாரிக்க நீதிமன்றம் தயார்

கொழும்பு,ஜன.31

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை தெரிவு செய்ய அண்மையில் இடம்பெற்ற தேர்தல் முறையற்றது என்று அறிவிக்கும்படி கோரி கட்சியின் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன நீதிமன்றில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவென குறித்த தரப்பினருக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. (ச)

# பிரதேச சபை கட்டடத்தில் தீ

கொழும்பு,ஜன.31

மத்துகம பிரதேச சபை கட்டடத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. களுத்துறை நகரசபை தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக மத்துகம பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. எனினும் பிரசே சபை கட்டடத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இரு நாட்டு கொள்கையை கூட்டமைப்பு பின்பற்றுகிறது

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு,ஜன.31

இரு நாட்டு கொள்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றிவருவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் சகல இன மக்களையும் ஐக்கியப்படுத்தும் முனைப்புக்களில் அரசு தீவிரம் காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்தாண்டு காலமும் மொழிக் கொள்கையின் ஊடாக அதிகம் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சிங்கள கடும்போக்குடைய கட்சிகள் சிறுபான்மை மக்கள் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

என்ன தீர்வை வழங்கினாலும் சிறுபான்மை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கடும் போக்குடைய சிங்கள கட்சிகள் இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலைப்பாடு அரசின் நல்லிணக்க நடவடிக்கைகளை பாதிக்கக் கூடும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# 1000 பாடசாலைகள் திட்டத்தால் 4000 பாடசாலைகளுக்கு மூடுவிழா

## அநுரகுமார எம்.பி தகவல்

கொழும்பு,ஜன.31

அரசின் 1000 பாடசாலை வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், 4000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் கல்வித் துறையில் இன்று அதிக பிரச்சினைகள் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் இருந்தே பிரச்சினைகள் ஆரம்பிப்பதாக தெரிவித்தார்.

கல்வியை தனியார்மயப்படுத்தும் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பாடசாலை கட்டமைப்பில் ஏழை மக்களின் பிள்ளைகளே உள்வாங்கப்பட்டிருப்பதாகவும், ஜனாதிபதியின் பிள்ளைகளோ, உயர்கல்வி அமைச்சின் பிள்ளைகளோ அதில் உள்வாங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு அதிகளவு தனியார்மயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் பல துறைகளிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அனல்மின் நிலைய நிர்வாகம் சீனாவிடம்

## பஸில் கூறுகிறார்

கொழும்பு,ஜன.31

புத்தளம் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை சீனாவுக்கு விற்பனை செய்யும் திட்டம் எதுவும் இல்லை.

ஆனால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை சீனாவிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை அலரி மாளிகையில் தெரிவித்தார்.

இது தொடரபில் தற்போது பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறோம். எனவே விரைவில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழிநுட்பக் கோளாறு காரணமாக அதன் மின் உற்பத்தி நடவடிக்கைகள் அண்மைக் காலங்களாக ஒழுங்காக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



(ச)

# விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு,ஜன.31

வெலிக்கடை புதிய மகஸின் சிறையில் அண்மையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான விசாரணை அறிக்கை இன்று செவ்வாய்க்கிழமை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்கப்படும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யு. கொடிப்பிலி தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றன என்று அவர் தெரிவித்தார்.

மகஸின் சிறையில் இடம்பெற்ற கலவரம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைக் கைதிகளிடம் குறித்த குழு சாட்சியங்களைப் பெற்று அறிக்கை தயாரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில்கொண்டு ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பும்

# நன்றி நவிலலும்

**மண் மகிழ** **கண் நெகிழ**

**21-05-1929** **31-12-2011**

## திருமதி கந்தையா சிவபாக்கியம்



**பிள்ளைகளே உயிர் என்றிருந்த எம் அம்மாவுக்கு,**
**உயிர் கொடுக்க முடியவில்லையே எம்மால்**
**மீள முடியவில்லை உங்கள் இழப்பின் சோகம்**
**தாள முடியவில்லை எங்கள் அன்னையின் பிரிவு**
**உறவுகளோ எமக்கருகில், நாங்களோ உங்களைத்தேடி.....**

கடந்த *31.12.2011* சிவபதமடைந்த எம் அன்னை, நோயுற்றிருந்தவேளை அவரை அன்புடன் பராமரித்த Holy cross வைத்தியசாலையைச் சேர்ந்த அருட்சகோதரிகள், வைத்தியர்கள், தாதியர்கள், உற்ற தருணங்களில் அவர்களுக்கு உறுதுணை புரிந்த அயலவர்கள், நடுநிசியில் தேடிச் சென்ற போது ஓடிவந்து உதவி செய்த ஆருயிர் நண்பனுக்கும், மரணச் செய்தி கேட்டு எம் துயரறிந்து அதில் பங்கேற்று ஆறுதல் வழங்கிய பலதுறைசார் அன்பு உள்ளங்கள், நண்பர்கள், மலர் மாலை சாத்தி அஞ்சலி செலுத்திய நண்பர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்த உறவினர்கள், இறுதிக்கிரியையில்கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சிரந்தாழ்த்தி எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று *(31.01.2012)* செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் இருபாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை, மதியபோசன நிகழ்வு ஆகியவற்றிலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**உப்புமடம் சந்தி,**
**இருபாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு**

**பிரிவால் துயருறும்:**
K. **வரதன்,**
K. **ரவி.**

(C8239) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# கடனட்டை மோசடியில் ஈடுபட்ட ஈழ அகதி உட்பட இருவர் கைது

இந்தியா - திருச்சியில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கை அகதி ஒருவர் உட்பட இருவர் திருச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:

திருச்சி மத்திய பஸ் நிலையம் அருகே ஒரு வங்கியின் ஏ.டி.எம். மையம் உள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு இந்த மையத்துக்குள் மர்ம மனிதர்கள் 2 பேர் புகுந்தனர். அவர்கள் நீண்ட நேரமாக வெளியே வராமல் பணம் எடுத்தனர். அதன் பிறகு சிறிது நேரத்தில் மீண்டும், மீண்டும் பணம் எடுத்துக் கொண்டே இருந்தனர்.

இதனால் சந்தேகம் அடைந்த ஏ.ரி.எம். காவலாளி இது பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். உடனே சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து சென்று, அந்த மர்ம மனிதர்களை மடக்கிப் பிடித்தனர். பின்னர் அவர்களை பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்று விசாரித்தனர்.

விசாரணையில் அவர்கள், கரு மண்டபம் ஐ.ஓ.பி.நகரைச் சேர்ந்த கணேசன் (வயது 18), கருமண்டபம் வசந்தநகரை சேர்ந்த ராகவன் (வயது 30) என்பது தெரியவந்தது.

அவர்களிடம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரொக்கப் பணம், 1 தங்க சங்கிலி, 1 பிரேஸ்லெட், 4 மோதிரங்கள் மற்றும் 14 வெளிநாட்டு போலி ஏ.ரி.எம்.அட்டைகளும் இருந்தன. அவற்றைப் பொலிஸார் கைப்பற்றினார்கள்.

இது தவிர அவர்கள் பயன்படுத்திய ஒரு காரும் பறிமுதல் செய்யப்பட்டது. பிடிபட்ட 2 பேரில் ராகவன் இலங்கை அகதி ஆவார். இவருடைய உறவினர்கள் லண்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் வசிப்பதாகவும் தெரிகிறது.

பிடிப்பட்டவர்கள் கூறுகையில், எங்களுடைய உறவினர்கள் வெளிநாட்டில் இருக்கின்றனர், அவர்களுடைய வங்கி கணக்கில் இருந்து எங்கள் வீட்டு செலவுக்கு பணம் எடுத்தோம் என்றனர்.

இருப்பினும் அவர்களிடம் 14 ஏ.ரி.எம். கார்டுகள் எப்படி வந்தன என்று பொலிஸார் துருவித் துருவி விசாரித்தனர். அப்போது கே.கே.நகரில் உறவினர் ஒருவர் தங்கி இருப்பதாகத் தெரிவித்தனர்.

இதையடுத்து பொலிஸார் அந்த நபரைத் தேடி கே.கே.நகர் சென்றனர். ஆனால் அந்த நபர் அதற்குள் வீட்டை பூட்டி விட்டு தலைமறைவாகி விட்டதாக தெரிகிறது. (வ)

## நூலகக் கடமை நேரத்தை மாற்றியமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகக் கடமை நேரத்தை மாற்றியமைக்குமாறு மீசாலைப் பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபை தலைவரைக் கோரியுள்ளனர்.

இங்குவசிப்போரில்பெரும்பாலானோர் அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட பல்வேறு கடமைகளுக்குச்செல்பவர்களாகவும் உள்ளனர். இந்த நூலகம் தினமும் பி.ப. 4 மணியுடன் மூடப்படுவ தால் இவர்கள்நூலகத்தைப் பயன்படுத்த முடிவதில்லை. நூலகத்தின் இரவல் வழங்கும் சேவையை மாலை 5 மணி வரையும், பத்திரிகை வாசிப்புப் பிரிவை மாலை 6 மணிவரையும் நீடிக்குமாறும்கோரியுள்ளனர்.(வ-207)

## வைத்தியசாலை ஆய்வு கூடம் விஸ்தரிப்பு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வரும் நோயாளர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு ஆய்வு கூடம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் வழிகாட்டலில் இரு இடங்களில் ஆய்வு கூடப் பணிகள் நடத்தப்படவுள்ளன. (வ-207)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்திய அதிகாரி

நவாலி, ஜன. 31

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் கடந்த வருடம் ஜனவரிமுதல் இந்த வருடம் ஜனவரி வரை உடுவில் வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்ற வைத்திய அதிகாரியே பகுதிநேர சேவையை வழங்கி வந்தார்.

தற்போது தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற வைத்திய அதிகாரி எஸ்.கே.நடராசா மீள் நியமனம் பெற்று இந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பதவியேற்றுள்ளார்.

( ம-100 )

## மலவாயிலில் தங்கக் கட்டிகள் மறைப்பு விமான நிலையத்தில் சிக்கினார் ஆசாமி

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் காலை கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது ராமநாதபுரம் கீழக்கரையைச் சேர்ந்த காதர்மொகிதீன் (வயது 35) என்பவரைச் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தனர்.

அப்போது காதர்மொகிதீன், சுங்கவரி செலுத்தும் வகையில் எந்தவித பொருள்களையும் கொண்டு வரவில்லை என்றார். ஆனால் காதர்மொகிதீனின் நடை சற்று வித்தியாசமாக இருந்ததால் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் அவரை தனி அறைக்கு அழைத்து சென்று சோதனை செய்தனர்.

அப்போது காதர் மொகிதீன் ஆசன வாயிலில் கறுப்பு நிறத்தில் பொட்டலங்கள் இருந்தமை தெரியவந்தது. உடனே விமான நிலைய வைத்தியர்கள் சென்று 6 பொட்டலங்களையும் வெளியே எடுத்தனர். அதில் 600 கிராம் எடை கொண்ட 6 தங்கக் கட்டிகள் இருந்தன. இதனையடுத்து அந்த நபரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

### தவறிவிட்டது

புன்னாலைக் கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சிற்றூர்தியில் (மினிபஸ்) புத்தகங்கள் அடங்கிய பிளாஸ்ரிக் கவர் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 8430770 (13689) (45-6-7)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி, வடக்கு சரஸ்வதி வீதியில் 2 ¾ பரப்பு அளவிலான ( வருமானத்துடன் கூடிய ) காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு. 077 7637692, 077 4002286

### களஞ்சிய நிலப்பகுதி திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரல்

எமது சங்கக் களஞ்சியத்தின் நிலப்பகுதி (நீளம் 66', அகலம் 32') திருத்தம் செய்வதற்கு கூலிக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே வேலை தொடர்பான விவரங்களை அலுவலகத்தில் (காலை 9.மணி - பிற்பகல் 4 மணிவரை) பார்வையிட்டு கூறுவிலையை 08.02.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சமர்ப் பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/8293)(45-6-7)

### கிளிநொச்சியில்

Germany, Swiss, Deutsch மொழிகள் புதிதாக Kilinochchi இல் ஆரம்பமாகி உள்ளன.

கிளிநொச்சிக் கிளை:
Sun British College
இல .40, கனகராயபுரம்,
பிரதான வீதி, கிளிநொச்சி.
(றோயல் ரீயூசன் முன்பாக)

வவுனியாக் கிளை:
OxFord கல்வி நிலையம்.
ஸ்ரேசன்வீதி
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
T . P .077 9629296
( கோணேஸ் )

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வவுனியா புளியங்குளம் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட

திருமதி

### சிறிஸ்கந்தராசா புவனேஸ்வரி

(ஆசிரியை)

திதி: அட்டமி 31.01.2012

தோற்றம் 24★11★1970 — மறைவு 03★02★2009

என்றும் எம்மை அன்பாலும்,
பண்பாலும் அரவணைத்து
இனிய வாழ்வு தந்த தெய்வமே
வருடம் மூன்று சென்றதம்மா
உங்கள் மதிமுகம் மாறவில்லை
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக
அமைந்த உங்கள் சிரித்த முகம்
காண்பதற்கு ஏங்கித்
தவிர்க்கின்றோம். எம்முடன் சேர்ந்து வாழ்ந்த
ஒவ்வொரு கணமும் எமக்குச் சொர்க்கமாய்
இருக்குதம்மா உங்களை என்றும் எங்கள்
இதயக் கோயிலிலிருந்து பூசிப்போம் அம்மா

என்றும் நினைவில்
கு. சிறிஸ்கந்தராசா (கணவர்),
சி. ச[illegible] (பிள்ளை),
சி. ஜதுர்சியா (பிள்ளை).

பழைய பொலிஸ் நிலையம்,
முன் றோட், ஆனைக்கோட்டை.

## மரண அறிவித்தல்

### யேக்கப் சூசைதாசன்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யேக்கப் சூசைதாசன் (28.01.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பதுளை ச.ம.வி, ஓமந்தை ப.த.க.பா, பளை மா.வி, ஏழாலை வடக்கு அமெரிக்கன் மி.த.க.பா, குப்பிளான் விக்னேஸ்வரா வி., சுன்னாகம் றோ.க.வி. புனித இசிதோ றோ.க.வி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற யேக்கப்-மதலேனா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற அருளானந்தம் - அருளம்மா தம்பதியரின் மருமகனும் அஞ்சலீனா அரியமலரின் அன்பு மிகு கணவரும் றெஜினோல்ட் நிமலன், றெஜீனா, சுகந்தினி, றிச்சேட் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவப்பிரகாசம் மரியதாஸ் (ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்), யேக்கப் யேசுதாசன் (ஓய்வுபெற்ற அதிபர்), யேக்கப் இம்மானுவேல் இராசதுரை (ஓய்வுபெற்ற இ.போ.ச) ஆகியோரின் அன்பு மிகு சகோதரரும் ஆனந்தராணி, குணராணி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), இம்மானுவேல் ஆனந்தராசா, ஆனந்தரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - இந்தியா), கருணாதேவி (கனடா), பற்றீசியா, மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பேபி சபாநாதன், பரமேஸ்வரி, தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ் சென்ற உமாமகேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதி) ஆகியோரின் மைத்துனரும் அலோசியஸ் சௌந்தரநாயகம் (ஓய்வுபெற்ற புகையிரத தலைமைப் பாதுகாவலர்), இரத்தினதேவி, திருஞான சம்பந்தர் (ஓய்வுபெற்ற கட்டட வரைஞர்), நந்தலால் நேரு (ஓய்வுபெற்ற தொ.நு.க. விரிவுரையாளர்), இராஜரட்ணம் (கனடா) ஆகியோரின் சகலனும் ரஜனி (இத்தாலி), மதியழகன் (கனடா), கிறிசில்டா (இத்தாலி) ஆகியோரின் மாமனும், சமிகா, கிறிசாந், அருள், ஜெனிசிக்கா, சுபா, நிரு, சிலோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (01.02.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

(13922) (45-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆத்திரம், அவசரம் இல்லாமல் பொறுமையாகச் செயற்பட வேண்டிய நாள். நினைத்த காரியம் மட்டுமின்றி, நினைக்காத சில காரியங்களும் நடப்பதால் மனதில் சந்தோஷம் குடிகொள்ளும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஆபத்தான பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். வேலவன் வழிபாடு வெற்றி தரும்.

**இடபம்:** மறைமுக எதிர்ப்புகளை, போட்டிகளை சந்திக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். உங்களுக்காக அல்லாமல் பிறருக்காக நண்பர்களிடம் உதவி கேட்பீர்கள். உங்களுக்கு வேண்டியதை சாதிப்பதற்காக சிலருக்கு பணம் கொடுக்கலாம். மறதியால் அலைச்சல், அவதியுண்டு.

**மிதுனம்:** உறவினர்களின் பாசமழையில் நனைவீர்கள். உடன்பிறப்புகள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை சிலர் பாராட்டலாம். சிலருடன் ஆரோக்கியமான வாக்குவாதங்களில் ஈடுபடலாம்.

**கடகம்:** எடுத்த காரியங்கலில் இடையூறு இல்லாத வெற்றி கிட்டும். பெண்கள் சிலரால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். உடல் உபாதைகளால் ஏற்பட்ட தொந்தரவுகள் குறைந்து உற்சாகம் பெறுவீர்கள். கூட்டுத்தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும் நாள்.

**சிங்கம்:** தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பலர் முன்னிலையில் உங்களின் பெருமையை வெளிப்படுத்துவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி:** சிலரிடம் கோபமாகப்பேச நேரிடலாம். எங்காவது ஒரு பொருளை மறதியாக வைத்துவிட்டு, வெளியில் செல்லும் போது, அவசரமாகத் தேடலாம். அரசியல்வாதிகளை நம்பி எந்த வேலையிலும் ஈடுபட வேண்டாம். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும்.

**துலாம்:** சபலங்களைத் தவிர்த்து எதிலும் மிடுக்குடன் நடந்து கொள்ள வேண்டிய நாள். உறவினர் ஒருவரை எதிர்பாராமல் வெளியிடங்களில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். நண்பர்கள் சிலருடன் சொந்த விடயங்களைப் பேசி மகிழ்வீர்கள். சில வேலைகளைச் செய்ய ஆரம்பத்தில் தயக்கம் காட்டினாலும், பின்னர் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். பெற்றோர் வழியில் சிறு சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சொத்து விவகாரங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**தனுசு:** மற்றவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அதிருப்திக்கு ஆளாகலாம். சகோதரிகள், பெண்கள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். பிறரை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத்தையும் நீங்களே செய்வது நல்லது. சுயதேவைக்கான அல்லது வீட்டுக்குத் தேவைக்கான பொருள்களை வாங்குவீர்கள்.

**மகரம்:** தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்களின் நலனில் அக்கறை கொண்டவர்களைச் சந்திப்பீர்கள். உடல் நலமில்லாத உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். சிலரிடம் அவசர செலவுக்காக கடன் வாங்கலாம்.

**கும்பம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்கும் நாள். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் கொடுத்த பொறுப்புகளை சிரமத்துடன் நிறைவேற்றி பாராட்டைப் பெறுவர். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் சுமுகமாக முடிவுக்கு வரும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கமான பணிகளில் தடை ஏற்படலாம். நேரம், காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**நாளை**

தை 18 புதன்கிழமை 01.02.2012
திதி: நவமி பி.இ. 12.58 வரை
நட்சத்திரம்: கார்த்திகை முழுவதும்
சுபநேரம்: 05.06 - 06.36 வரை,
ராகு காலம்: 12.36- 02.06 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 2 | 4 | | |
| | | | | | | | 9 | 7 |
| | 7 | 2 | 8 | | | 6 | | 3 |
| 5 | | 9 | | | | | 6 | 4 |
| 7 | 8 | | 1 | 5 | 4 | | 2 | 9 |
| 3 | 1 | | | | | 7 | | 5 |
| 9 | | 1 | | | 6 | 8 | 3 | |
| 6 | 5 | | | | | | | |
| | | 8 | 9 | | 1 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உ



நெடுந்தீவு மேற்கு கரமத்தை
அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்
புனராவர்த்தன
மஹா கும்பாபிஷேக பெருவிழா

கர வருஷம் தைத்திங்கள் 22 ஆம் நாள் (05.02.2012)
ஞாயிற்றுக்கிழமை 07.14 - 8.23

கிரியாரம்பம்
கர வருஷம் தைத்திங்கள் 20 ஆம் நாள் (03.02.2012) வெள்ளிக்கிழமை
காலை 6.36 நிமிடத்துக்கு மேல் கிரியாரம்பம்.

எண்ணெய்க்காப்பு
04.02.2012 சனிக்கிழமை மாலை 4 மணிமுதல்

மஹா கும்பாபிஷேகம் கரவருஷம் தைத்திங்கள் (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 07 மணி 14 நிமிடம் முதல் 8 மணி 23 நிமிடத்துக்குள் நடைபெற கரமத்தை கந்தசுவாமி திருவருள் பாலித்துள்ளார்

பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்
சிவஞானபாஸ்கரன், 'குருவம்ச சிகாமணி', சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள்-ஊரெழு

பரிபாலன சபை
நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி திருக்கோயில்.

(C\7609) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் அரச காணி பெற்றுத்தரக் கோரிக்கை

அச்சுவேலி, ஜன.31

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அரச காணிகளை பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

கோரிக்கையை நியாயமானது என ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் கவனத்துக்கு கொண்டு வந்து உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பணி முன்னெடுப்புக்களும் அதற்கு உலக உணவு விவசாய நிறுவனத்தின் பங்களிப்பும் என்பது தொடர்பான கருத்துப் பரிமாறல் திருநெல்வேலியில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசப் பணிமனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் உலக உணவு விவசாய நிறுவனத்தின் தலைமை அலுவலகப் பிரதிநிதி மற்றும் யாழ். மாவட்ட இணைப்பாளர், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர், சமாசத்தின் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பணி முன்னெடுப்புக்கு நிரந்தரமான கட்டட வசதி இன்மை, கட்டடங்களை கட்டுவதற்கு யூ.எஸ். எயிட் நிறுவனம் நிதி உதவி வழங்கிய போதிலும் காணிகள் இல்லாமையால் கட்டடங்களைக் கட்ட முடியாத இக்கட்டான நிலை தோன்றி இருப்பது தொடர்பாகக் கூறப்பட்டது.

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாண உதவிப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் இதற்கு உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அரச காணியை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

காணி விடயம் தொடர்பான கோரிக்கை கடிதங்கள் மற்றும் ஆவணங்களின் பிரதிகளை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

(ம-11)

# செய்மதித் தொடர்பாடல் மூலம் கண் சிகிச்சைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இயங்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை ஆகியவற்றில் செய்மதித் தொடர்பாடல் முறையிலான கண்சிகிச்சை நடைபெறவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மாதத்தின் முதலாவது புதன்கிழமையும், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் மாதத்தின் இரண்டாவது புதன் கிழமையும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையும், ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையில் மாதத்தின் நான்காவது புதன்கிழமையும் இக்கண் சிகிச்சை நடைபெறவுள்ளதாகவும் கூறப் பட்டது.

(ம-300)

# 'தரிசனம்' சிறுகதை நூல் வெளியீடு

வடமராட்சி, ஜன.31

பருத்தித்துறை, வடமராட்சி பிரதேச கலாச்சாரப் பேரவையால் 'தரிசனம்' சிறுகதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிர்வாக கிராம அலுவலர் த.சுந்தரபாரதி வரவேற்புரையையும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் வாழ்த்துரையையும், இலக்கிய ஆர்வலர் இ.து. குலசிங்கம் அறிமுகவுரையையும் நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

எழுத்தாளர் தாட்சாயினி வெளியீட்டுரையையும், வடமாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் நூல் நயப்புரையையும் வழங்கினார்.

சிறுகதைத் தொகுதியை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க தணியாத தாகம் புகழ் ஜோசப் இருதயராஜா முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஏற்புரையையும் நன்றியுரையையும் கலாசார உத்தியோகத்தர் செல்வி சே. செல்வசுகுணா நிகழ்த்தினார்.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும், புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்களுமாகப் 17 எழுத்தாளர்களின் சிறுகதைகள் இத் தொகுதியில் அடங்கியுள்ளன.

(ம-236)

# புற்றுநோய் வைத்தியசாலைக்கு கட்டடம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.31

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் புற்றுநோய் வைத்திய சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் புற்று நோய் வைத்தியசாலையைக் கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிக்குமாறு வடக்கு மாகாண சுகாதார அமைச் சின் செயலாளர் ஆர். இரவீந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்மலானையில் உள்ள கலர்கள் அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் நாதன் சிவகணநாதனிடம்இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த வைத்தியசாலைக் காணியில் புற்றுநோய் வைத்தியசாலையை அமைப்பதற்காக 1.3114 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(ம-300)

# கடந்த வருடம் பொதுசன உதவி 3186 பேருக்கு கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன.31

வடமாகாண சமூக சேவைகள் திணைக் களத்தால் கடந்த வருடம் 3186 பேருக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 156 பயனாளிகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதுடன் நோய் உதவிக் கொடுப்பனவுகளில் புற்றுநோயால் பாதிக் கப்பட்ட 128 பேரும், காசநோயால் பாதிக்கப்பட்ட 13 பேரும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6 பேரும் உதவிப் பணத்தைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் சுயதொழில் கொடுப் பனவான 1500 ரூபாவை 38 பேரும், வீடு புனரமைப்பு தற்செயல் நிவாரணக் கொடையாக 20 ஆயிரம் ரூபாவை 30 பேரும் பெற்றுள்ளனர். ( ம-121)

# இலங்கையின் பாதாளக் குழு தலைவர்கள் இத்தாலியில்

இலங்கைப் பாதாளக் குழுக்கள் இத்தாலியில் கப் பம் கோரல்களில் ஈடுபட்டு வருவ கத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலிருந்து தப்பிச் சென்ற பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இத்தாலி வாழ் இலங்கையர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின் றனர்.

இத்தாலியில் வாழும் இலங்கையர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து மாதாந்தம் பணம் அறவீடு செய்யப் படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. பாதாள உலகக் குழுவினரின் செயற்பாட்டைக் கண்டிக்கும் நோக்கில் இத்தாலி வாழ் இலங்கையர்கள் விரைவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினரை ஒடுக்கும் நோக்கில் இலங்கையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதனைத் தொடர்ந்து, பலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

தெற்கின் முக்கிய பாதாள உலகக் குழுத் தலைவர் களில் ஒருவரான ரத்கம நதுன கெசல்வத்தே கொட குமார மெகா அஜித் போன்ற வர்களும் தற்போது இத் தாலியில் வாழ்ந்து வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதாள உலகக் குழு உறுப்பினர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் இத்தாலி வாழ் இலங்கையர்கள் இது வரையில் அந்த நாட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய வில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

(வ)

# பகவான் பாபாவின் அற்புதங்கள்



கோப்பாயில் சாயி அன்பர் வீட்டில் 10.11.2011 திகதி முதல் ( விபூதி, தேன் ).

பகவான் சாத்தியசாயி பாபாவின் தீவிர பக்தர்கள் தாம் உருவாக்கிய சாயி நிலையங்களில் ஒன்று கூடி பாபாவின் திருவுருவ வழிபாடிலும் பஜனையிலும் மனதொன்றி ஈடுபடுவது யாழ்ப்பாணத்தில் மட்டுமென்றல்லாது இலங்கையின் சகல பாகங்களிலும் இடம்பெறு கின்றன.

அந்த வகையில் அண்மைக்காலங்களாக தமிழர் பகுதிகளில் சாயி பாபாவின் திருவுருவப் படங்களிலிருந்து வீபூதி சொரிபடும் சம்பவங்கள் பல பரவலாக இடம்பெற்று வருகின் றன. கடந்த 26 திகதியன்று திருநெல்வேலியில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் வழிபாட்டுக்காக வைக்கப் பட்டுள்ள பகவான் சத்திய சாயிபா பாவின் திருவுருவப் படத்திலிருந்து விபூதி சொரிந்தே அதிசயம் இடம் பெற்றுள்ளது.

இதேபோன்று கடந்த சில மாதங்களாக சாயிபாபாவின் தீவிர பக்தர்களில் சிலரான திருகோணமலையில் புவனேந்திரன், கோப்பாயில் செல்வி, கொக்குவிலில் டாக்டர் சிவகோணேசன் ஆகியோரின் வீடுகளில் வழிபாட்டுக்கென வைக்கப்பட் டுள்ள சத்திய சாயி பாபாவின் திருவுருவப் படங்களிலிருந்து, வீபூதியும் தேனும் சொரிதல், படத்துக்கு அணிவிக்கப்பட் டிருக்கும் மலர்மாலை நாளுக்கு நாள் வளர்தல் போன்ற அற்பு தங்கள் இடம்பெற்று வருகின் றன.

ஏராளமான பக்தர்கள் இதனை நேரில் பார்த்து அதிசயித்து வருகின்றனர்.




யாழ்ப்பாணம், ஜன.31

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 மணி தொடக்கம் காலை 8.23 மணி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும். பிரதிஷ்டாகுரு சிவஞானபாஸ்கரன் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் இடம் பெறும்.

(வ-3)

***

யாழ்ப்பாணம், ஜன.31

கீரிமலை நகுலாம்பாள் சமேத நகுலேவரன் சுவாமி கோயில் ஜீர்ணோர்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 தொடக்கம் காலை 10.30 மணிவரை இடம்பெறும்.

கிரியைகள் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகின. எண்ணெய்க் காப்பு சாத்துதல் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை நடைபெறும் .(வ-7)

# திருத்த வேலைக்காக வீதியை மூடல்

யாழ்ப்பாணம், ஜன.31

வீதி அகலிப்பு பணி காரணமாக மின்மாற்றியை இடமாற்ற வேண்டியிருப்பதால் யாழ். பருத் தித்துறை வீதியின் முத்திரைச் சந்தியில் இருந்து சட்டநாதர் கோயில் வரையான வீதி நாளை புதன்கிழமை காலை 7.30 மணிமுதல் மாலை 5 மணிவரை தற்காலிகமாக மூடப்படும் என்று யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் கோயில் வீதியூடாகச் சென்று சட்டநாதர் வீதியூடாக தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

(ம-313)

# 196 பேருக்கு அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன.31

60 வயதை அடைந்த 196 பேர் கடந்தவருடம் வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்திடம் அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை வாய் பேசாத, காது கேட்காத 4 பேர் கொழும்பு சமூக சேவை திணைக்களத்திடம்இருந்துவிசேட அடையாள அட்டையை சமூக சேவைகள் திணைக்களத்திடம் பெற்றுக்கொண்டனர்.

(வ-121)

# வடக்கில்16வங்கிகள் சேவையில்

வடமாகாணத்தில் 16 வங்கியின்தற்போது சேவையை வழங்கி வருவதாக மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் யாழ்.மாவட் டத்தில் 114 வங்கிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 21 வங்கிகளும், மன்னார் மாவட்டத்தில் 22 வங்கிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 14 வங்கிகளும் வவுனியா மாவட்டத்தில் 25 வங்கிகளும் சேவையில் உள்ளன. அத்துடன் 36 நிதிக்கம் பனிகளும் 9 லீசிங் கம்பனிகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-313)

# வெள்ளைப் பூடு விலை உயர்வு

குருநகர், ஜன.31

யாழ்ப்பாணத்தில் வெள்ளைப் பூடு (உள்ளி) விலை உயர்வடைந்துள்ளது.

இது வரை காலமும் கிலோ ரூபா 100 ஆக இருந்த இதன் விலை தற்போது கிலோ ரூபா 140 ஆக அதிகரித்துள்ளது.

யாழ். நகரில் உள்ள தனியார் வியாபார நிறு வனங்கள் பொதுமக்களுக்கு சில்லறைக்கு விற்பனை செய்யும் விலையே இது வாகும்.

(வ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
1964 - 08 - 31



அநியாய அழிப்பில்
1997 - 01 - 31

# அமரர் சீவரத்தினம் உதயகுமார்

## (கலட்டிக் கண்ணன்)

**திதி– அட்டமி**

நேர்மை தவறவில்லை கண்ணா நீ
நேர் வழி சென்றிருந்தாய்
பாசப்பிணைப்புடனே எங்களை
பக்குவமாய் காத்து வந்தாய்
எமைவிட்டு பிரியமனம் உனக்கு
எப்படி வந்ததையா.....

இத்தனை வருடங்கள் மறைந்து விடினும்-எம்
இதயத்தின் வடுக்கள் மட்டும் ஆறவில்லை
கண்டங்கள் பல கடந்தாலும்
காயம் விட்டு உயிரே நீங்கினாலும்
உறவே உமை என்றும் நாம் மறக்கமாட்டோம்
அழியாத புகழ் கொண்ட எம் கண்ணனே
உன்னை சதிசெய்து சாய்த்தனரே பாரினிலே

உம்மோடு நான் வாழ்ந்த எட்டே வருடங்களில்
ஈருடலும் ஒருயிராய் கலந்திருந்தேன்
எனைவிட்டு நீர்பிரிந்த பின்பு இங்கே
உடல் மட்டும் தனியாக தவிக்கின்றது
நினைவுகளின் வடிவாய் ஐந்து மக்காள்
கனவுகளுடனே வாழ்கின்றனர்
அவர்தம் கனவுகளை நனவாக்க-உம்
ஆசியை அவர்கட்கு அளித்திடுவீர்
என்றுமே ஓயாது கடலலைகள்
என் நெஞ்சோடு உங்கள் நினைவலைகள்.

ஐவர் நாம் இவ்வுலகில் பிறந்துவிட்டோம்
அன்புத் தந்தையே உங்களின் வழியாக
எங்கே சென்றீர்கள் எமை மறந்து
எம் விழிநீர் சொரிகின்றோம் உமைநினைத்து
கதிரவன் ஒளிபோல் பரந்து நின்றீர்
கருமேகங்கள் வந்து உமை மறைத்ததுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லை.
பூக்கள் மலரும் முன்னே இந்த பூமாலை உதிர்ந்ததுவோ
எங்கள் வளர்ச்சி காண எம்மோடு நீங்கள் இல்லை.
நித்தமும் உம் நிழல் படம் காணும் போது
வேதனை தான் எங்கள் மனதில்
திசை தோறும் உங்கள் விம்பங்கள்
காணத் தவிக்கிறது எங்கள் நெஞ்சம்
உம் போல் தந்தை உலகிலில்லை
நீர் கொண்ட பாசத்திற்கு அளவே இல்லை
தந்தையே உம் வழியில் நாமும் நிற்போம்
தரணியில் உம் பெயர் நிலைக்கச் செய்வோம்.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(13919) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகிள், மருதநிலா அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

வவுனியா, ஜன.31
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் மோதுவதற்கு ஈகிள், மருதநிலா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

11 பேர் பங்கு கொள்ளும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றது.

கடந்த சனி, ஞாயிறுக் கிழமைகளில் இடம்பெற்ற அரை இறுதியாட்டங்களில் ஈகிள் விளையாட்டுக் கழகம், மருதநிலா விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

சனிக்கிழமை இடம் பெற்ற முதலாவது அரை இறுதியாட்டத்தில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

இதில் ஈகிள் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

இதில் மருதநிலா விளையாட்டுக்கழக அணி ஒரு கோலைப் பெற்றது.

ஆட்டமுடிவில் மருதநிலா விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23-400)

## பாடும் மீனுக்கு வெற்றி



யாழ்ப்பாணம், ஜன.31
யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர் ஜே.பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் அணி வெற்றி பெற்றது.

11 பேர் பங்கு கொள்ளும் இந்த விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)

## தேசிய மட்டக் கரப்பந்தாட்டம் யாழில் இருந்து 4 அணிகள்



யாழ்.மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி.

இலங்கை கரப்பந்தாட்டச் சம் மேளம் நடத்தும் ' தேசத்தின் மகுடம்' 'தேசிய மட்ட கரப் பந்தாட்டச்சுற் றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் வவ்வெலயில்இடம் பெறவுள்ளது. வட மாகாணத்திலிருந்து பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்களுக்குஇடையே இடம்பெற்ற போட்டி யில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணி கள் இதில் பங்கு பற்றுகின்றன.

பாடசாலைகளுக்கு இடையேயான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலமும், இரண் டாம் இடத்தைப் பெற்ற புத் தூர் சோமஸ்கந்த கல்லூரி யும்,

விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம் பெற்ற போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தைப் பெற்ற ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் பங்கு பற்றுகின்றனர். (த-23)

## றொக்கெட் வீழ்ந்தது வென்றது கலைமகள்

வவுனியா, ஜன.31
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றொக்கெட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்றுசெற்களைக்கொண்ட ஆட்டத்தில் கலை மகள் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23-400)

## வெற்றி பெற்ற அணிகள்

வவுனியா, ஜன.31
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கிரிக்கெட் போட்டியில் வெற்றி யீட்டிய விளையாட்டுக் கழங்களின் பெயர் விவரம் வருமாறு;

பெண்கள் பிரிவு
யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் - (முதலா மிடம்), விநாயகர் விளையாட்டுக் கழகம் (இரண்டாமிடம்)

ஆண்கள் பிரிவு
பரலோகமாதா விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்), கசறலிஜ விளையாட்டுக் கழகம் (இரண்டாமிடம்). (த-23)

## 600



ரியல்மாட்ரிட் அணிக்காக 600 போட்டிகளில் விளையாடி அந்த அணியின் தலைவர் இகெர் கேசிலாஸ் சாதனை படைத்துள்ளார். 1999ம் ஆண்டு ரியல் மாட்ரிட் அணிக்காக முதல் முறையாக இகெர் களம் இறங்கினார். அபாரமான ஆட்டத்தால் அந்த அணியின் தலைவராக உயர்ந்தார். மிகச் சிறந்த கோல் கீப்பர்களில் தனது பெயரையும் இகர் இணைத்துக் கொண்டார்.

இதற்குமுன்ரியல் மாட்ரிட் அணிக்காக ரால் 741 போட்டிகளும் மனுவேல் சான்சிஸ் 701 போட்டிகளும்சான்டில்லானா 645 போட்டிகளும் பிரான்சிஸ்கோ ஜென்டோ 602 போட்டிகளும்பெர்னான்டோ ஹியாரோ 601 போட்டிகளும் விளையாடியுள்ளனர். ஆனால் ரியல் மாட்ரிட்டுக்காக 600 போட்டிகள் விளையாடியுள்ள ஒரே கோல் கீப்பர் என்ற சாதனையை இகெர் கேசிலாஸ் இப்போது படைத்துள்ளார்.

## உடனடி வேலைவாய்ப்பு

**1. அச்சு இயந்திர இயக்குநர்**

: A/L - O/L.
- பகல்-இரவு வேலை செய்யக்கூடியவர்
- குறைந்தது ஏதாவது இரண்டு இயந்திரத்தில் (KOMARI, CRABTREE, DAVIDSON) 3 வருட அனுபவம்.
- அனுபவம், திறமை அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**2. பாதுகாப்பு அலுவலர்**

: O/L,
- வயது: 35-60
- முன் அனுபவம்
- இரவு-பகல் வேலை செய்யக் கூடியவர் நேரில் வரவும்

**3. பக்க வடிவமைப்பாளர்**

: A/L
- கணினிக்கல்வி- Photoshop, Graphic Designing குறைந்தது 2 வருட முன் அனுபவம்
- பிற்பகலில் வேலை செய்யக்கூடியவர் (ஆண்)
- அனுபவம், திறமையின் அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை கீழ் உள்ள விலாசத்திற்கு உடன் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீதி மூடுதல் பற்றிய அறிவித்தல்

யாழ்.-பருத்தித்துறை வீதியின் முத்திரைச் சந்தியில் இருந்து சட்டநாதர் கோயில் வரை உள்ள பகுதி 01.02.2012 அன்று காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.

சட்டநாதர் வீதியையும் கோயில் வீதியையும் மாற்றுப்பாதையாக பயன்படுத்த வேண்டும்.

யாழ்- பருத்தித்துறை வீதி அகலிப்பு வேலைகளுக்காக பிரதான மின்மாற்றியை மாற்றியமைப்பதற்காக 01.02.2012 அன்று
யாழ் - பருத்தித்துறை வீதியில் முத்திரைச் சந்தியில் இருந்து சட்டநாதர் கோயில் வரை உள்ள வீதி தற்காலிமாக மூடப்பட்டிருக்கும்.

அன்று மட்டும் மக்கள் கோயில் வீதியால் சென்று சட்டநாதர் வீதிக்கூடாக தமது பிரயாணத்தை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். இதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதம [illegible]
வீ.அ.[illegible] யாழ்ப்பாணம்.

(C\8299)(6,10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேசத்தில் பிரதேச செயலராக இருந்து பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் எமது கிராமத்தின் உயர்ச்சிக்கும் அரும் பாடுபட்ட பிரதேச செயலர்கள் நா.வேதநாயகன், திருமதி றூபினி வரதலிங்கம் அவர்களின் பாதையில் நிறைந்த சிறந்த சேவையாற்றி இடம் மாற்றம் பெற்றுச் சென்ற சிறந்த நிர்வாகி

திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்

அவர்களை பல உயர்ந்த பதவிகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

பிரான்பற்று மக்கள் நலன்புரி சங்கம்,
பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகமும், கிராம மக்களும்.

(13699) (6,10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.01.2012 (ஞாயிறு) அன்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (BA) பட்டம் பெற்ற

தேவராசா சத்தியானந்தன்

(மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க பாடசாலை)

அவர்களை மனமார வாழத்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

மருதடி,
காரைநகர்.

அம்மா, அப்பா, தம்பிமார், தங்கச்சிமார்.

## யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2011

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க, அபிவிருத்திக்குழு என்பனவற்றின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே இப்பொதுக் கூட்டத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் தவறாது கலந்து கல்லூரி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்:

1. தேவாரம்
2. தலைமையுரை - திருமதி வே.பேரின்பநாதன் (அதிபர்)
3. செயலாளர் - செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
4. பொருளாளர் - நிதி அறிக்கை சமர்ப்பித்தல்
5. புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு
6. கலந்துரையாடல்
7. கல்லூரிக்கீதம் - கல்லூரி மாணவிகள்


திருமதி வே.பேரின்பநாதன்
(தலைவர், அதிபர்)

மு.சபாம்பிள்ளை
செயலாளர்

(C\8298) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் வாங்கிய அடி ஐ.சி.சியில் வலிக்கிறது


டிராவிட்


சச்சின்

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளதால் சச்சின், டிராவிட் உட்பட இந்திய வீரர்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளனர். டெஸ்ட் அரங்கில் சிறந்த வீரர்களுக்கான தர வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) டுபாயில் வெளியிட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அடிலெய்ட் டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்த ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 3ஆவது இடத்திற்கும், ரிக்கி பொண்டிங் 14ஆவது இடத்துக்கும் முன்னேறினர். இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் 9ஆவது இடத்தில் இருந்து 13வது இடத்துக்குத் தள்ளப்பட்டார். ஏனைய இந்திய வீரர்களான டிராவிட்(18வது இடம்), லக்ஷ்மன்(23வது), சேவாக் (24வது), கம்பீர்(34வது) ஆகியோரும் பின்னடைவைச் சந்தித்தனர்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடிலெய்ட் டெஸ்டில் இவர்கள் ஏமாற்றியதே சரிவுக்கு காரணமாகும். இந்தப் போட்டியில் சதம் அடித்து ஆறுதல் தந்த இந்தியாவின் விராட் ஹோக்லி 17 இடங்கள் முன்னேறி 50ஆவது இடம் பிடித்தார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப்பட்டியலில் தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன் முதலிடத்தில் உள்ளார். இங்கிலாந்துக்கு எதிராகச் சுழலில் அசத்திய சயீத் அஜ்மல், இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். மற்றொரு பாகிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் அப்துர் ரெஹ்மான் முதன்முறையாக 9ஆவது இடம் பிடித்தார்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகிர்கான் ஒரு இடம் பின்தங்கி 10ஆவது இடத்தில் உள்ளார். மற்ற இந்திய வீரர்களான பிரக்யான் ஓஜா(21 ஆவது), ஹர்பஜன் சிங்(23 ஆவது), இஷாந்த் சர்மா (28 ஆவது) ஆகியோரும் பின்னடைவையே சந்தித்துள்ளனர். (ங-15)

# சுழலே சரணம்....!


ஸ்ட்ரோஸ்

சுழற் பந்துவீச்சை சமாளிக்கத் தெரியாததே எங்கள் தோல்விக்கு முக்கிய காரணம்.

பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் போட்டியில் 2:0 என்ற கணக்கில் நம்பர் 1 அணியான இங்கிலாந்து பின்தங்கியுள்ளது. இந்த தோல்வி குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ட்ரோஸ் கூறுகையில், ''டெஸ்ட் கிரிக்கெட் எப்போதுமே கடினமானது. ஒரு வீரரின் பலத்தை விட, பலவீனம் என்ன என்பது இதில் தெளிவாகத் தெரிந்துவிடும்.

சுழற் பந்துவீச்சை சமாளிக்கத் தெரியாததே எங்கள் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. மொத்தத்தில் சிறப்பாக விளையாடத் தவறிவிட்டோம்.

குறிப்பாக துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இதற்காக எந்த காரணமும் சொல்ல முடியாது. இந்த வெற்றிக்கு பாகிஸ்தான் முழுத்தகுதி உடையது. இதில் இருந்து விரைவில் மீள்வோம் என நம்புகிறேன்'' - என்று கூறியுள்ளார்.(ங-15)

# சேர்ந்து தோற்கலாம் வாங்க...


ஹர்பஜன் சிங்

''ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்தது குறித்து கவலைப்படத் தேவையில்லை. இது போன்ற நிலைமை உலகின் எந்த ஒரு அணிக்கும் ஏற்படலாம்'' என்று இந்திய சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் ஆறுதல் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 4:0 என்ற ரீதியில் இழந்தது. இதுகுறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது:

''ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி மோசமாக இழந்தது வருத்தம் அளிக்கிறது. எனினும் இதுகுறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை. ஒரு சில தொடர்களில் இதுபோன்ற மோசமான சரிவைச் சந்திக்க வேண்டியிருக்கும். இந்தத்தொடரில், இந்திய வீரர்களின் செயற்பாடு திருப்தியாக இல்லை என்பது உண்மை. அதேவேளையில், விரைவில் இந்திய வீரர்கள் எழுச்சி பெறுவார்கள் என நம்புகிறேன். இந்திய அணி தோல்வியின் பிடியிலிருந்து மீண்டு, விரைவில் வெற்றிப் பாதைக்கு திரும்பும் என எதிர்பார்க்கிறேன்.

காயத்தில் இருந்து மீண்ட நான், விரைவில் தேசிய அணியில் இடம் பிடிப்பேன் என்று நம்புகிறேன். சர்வதேச போட்டிகளில் விளையா[illegible] உள்ளேன். உள்ளூர் போட்டிகளில் எனது திறமையை நிரூபித்து மீண்டும் இந்திய அணிக்காக விளையாடக் காத்திருக்கிறேன்.'' - இவ்வாறு ஹர்பஜன் சிங் கூறினார். (ங-15)

# ஜெயித்தார் ஜோகோவிச்







ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் செக்குடியரசின் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்றது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் செக் குடியரசின் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபேல் நடாலை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியின் தொடக்கம் முதலே இருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் விளையாடியதால் போட்டி விறுவிறுப்பாக இருந்தது.

முதல் செற்றை 7-5 என்ற கணக்கில் நடால் கைப்பற்றினார். இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்றை முறையே 6-4, 6-2 என்ற கணக்கில் ஜோகோவிச் வென்றார். நான்காவது செற்றை 7-6 என்ற கணக்கில் நடால் போராடி வென்றார். சம்பியனை நிர்ணயிக்கும் இறுதி செற்றை ஜோகோவிச் 7-5 என்ற கணக்கில் கைப்பற்றி பட்டம்பெற்றார். (ங)


பட்டம் வென்ற ஜோகோவிச்

## இலங்கை – இந்தியா – ஆஸ்திரேலியா முக்கோண ஒரு நாள் தொடர் அட்டவணை

| | | |
|---|---|---|
| பெப்ரவரி - 5 | இந்தியா - ஆஸ்திரேலியா | மெல்பேர்ன் |
| பெப்ரவரி - 8 | இந்தியா - இலங்கை | பேர்த் |
| பெப்ரவரி - 10 | ஆஸ்திரேலியா - இலங்கை | பேர்த் |
| பெப்ரவரி - 12 | இந்தியா - ஆஸ்திரேலியா | அடிலெய்ட் |
| பெப்ரவரி - 14 | இந்தியா - இலங்கை | அடிலெய்ட் |
| பெப்ரவரி - 17 | ஆஸ்திரேலியா - இலங்கை | சிட்னி |
| பெப்ரவரி - 19 | இந்தியா - ஆஸ்திரேலியா | பிரிஸ்பேர்ன் |
| பெப்ரவரி - 21 | இந்தியா - இலங்கை | பிரிஸ்பேர்ன் |
| பெப்ரவரி - 24 | ஆஸ்திரேலியா - இலங்கை | ஓவல் |
| பெப்ரவரி - 26 | இந்தியா - ஆஸ்திரேலியா | ஓவல் |
| பெப்ரவரி - 28 | இந்தியா - இலங்கை | சிட்னி |
| மார்ச் - 2 | ஆஸ்திரேலியா - இலங்கை | மெல்பேர்ன் |
| மார்ச் - 4 | முதலாவது இறுதிப் போட்டி | பிரிஸ்பேர்ன் |
| மார்ச் - 6 | இரண்டாவது இறுதிப் போட்டி | அடிலெய்ட் |
| மார்ச் - 8 | மூன்றாவது இறுதிப் போட்டி [தேவையேற்படின் மாத்திரம்] | அடிலெய்ட் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.31

அகில இலங்கை பாடசாலை துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு III முதலாம் சுற்றுப் போட்டித் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த வாரம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட் டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 43:2 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மதுஷன் 75 ஓட்டங்களையும் மாதவ றூபன் 25 ஓட்டங்களையும் நிதர்சன் 25 ஓட்டங்களையும் நிமலேந்திரா 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக பிருந்தாபன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கபிலன் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் துவாரகசீலன் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் அற்றி யன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர்.

தனது முதலாவது இனிங் சிற்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 69.4 ஓவர் கள் நிறைவில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற் றது.

இதில் ஏபிகாம் அனோ ஷன் 95 ஓட்டங்களையும் பிருந்தாபன் 65 ஓட்டங் களையும் றஜிந்தன், துவாரக சீலன் ஆகியோர் 47 ஓட்டங்களையும் கபில்ராஜ் 41 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக நிமலேந்திரா 85 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் நிலக்சன் 70 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக் களையும் கஜேந்திரன் 78 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்சுக்காகத் துடுப் பெடுத்தாடிய வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 33.3 ஓவர் கள் நிறைவில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற் றது.

இதில் நிமலேந்திரா 59 ஓட்டங் களையும் கஜேந் திரன் 27 ஓட்டங்களையும் மதுஷன் 10 ஓட்டங்களை யும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிருந்தாபன் 26 ஓட் டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கவாங்கர் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுக்களையும் அற்றியன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் துவாரகசீலன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(த-23)

# கிரிக்கெட் போட்டி



யாழ்ப்பாணம், ஜன.31

கொக்குவில் வளர்மதி விளையாட் டுக்கழகமும் சனசமூக நிலையமும் நடத் தும் விக்ரம்- ராஜன்- கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண் ணத்துக்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் சனிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள் ளது.

இதில் பங்குபற் றும் அணிகளின் விவரங்கள் வரு மாறு:- காலை 8.30 மணி யாழ் ஜொலிஸ் ரார் விளை யாட்டுக் கழகம் எதிர் கொக்கு வில் மத்திய சன சமூக விளையாட் டுக்கழகம்.

மதியம் 1 மணிக்கு அரி யாலை விளை யாட்டுக்கழகம் எதிர் யாழ். பல்கலைக் கழகம்.

(த-23)


## விற்பனைக்கு

நீண்ட கால பாவனைக்கு அதிசிறந்த அப்பலோ தயாரிப்புக்கள் இல.618, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள

**அப்பலோ ரயர் காட்சியறையில்**

- ★ மோட்டார் சைக்கிள்
- ★ கார்
- ★ ஓட்டோ
- ★ வான்
- ★ லொறி

மற்றும் கனரக வாகனங்களுக்கான ரயர், ரீயூப்புக்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன என்பதனை நண்பர்கள், வாடிக்கையாளருக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

**லிவர்பூல் நெவிக்கேசன் (P.V.T)**

இல. 618, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (13929) 45-6-7)
021 221 9366


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி செல்லமுத்து



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லமுத்து நேற்று (30.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், இராசலெட்சுமியின் அன்புத் தாயும், சிவகுமாரின் அன்பு மாமியும் சிவரஞ்சினி-சுதர்சன், வானதி-ஆதவன், சிந்துஷா- யசோதரன், சிவாயினி-மயூரன், கஜேந்தினி, வினோதரன் ஆகியோரின் பேர்த்தியும், சின்னப் பிள்ளையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவக்கொழுந்து, வைத்திலிங்கம், நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஜீவன்,சவன்யா, சஞ்சைறோஷன், தரன், சர்வியா, சபிசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கட்டையாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.சிவகுமார்
பலாலி றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
(கஜேந்தினி உணவகம்
உடுவில்)

(13695) (6,7,10)

### பொன்னையா தங்கராசா



தம்பிராய், பூநகரியைச் சேர்ந்த முன்னாள் பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக்கழகத்தின் தலைவரும், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், பூநகரி பிரஜைகள் குழுத்லைவரும் ஓய்வு பெற்ற ஆயுள்வேத மருந்துக்கலவையாளரும் சமாதான நீதிவானுமாகிய பொன்னையா தங்கராசா நேற்று (30.01.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தயாபரன் (பூநகரி ப.நோ.கூ.ச எரிபொருள் முகாமையாளர்), தயானந்தன் (பூநகரி ப.நோ.கூ.ச. கிளை முகாமையாளர்), தயாசீலன் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), தயாரூபன் (பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்), தயாதேவன் (பூநகரி பிரதேசசபை), தயாரூபி, தயாநிதி, தயாறஜனி ஆகியோரது அன்புத் தந்தையும், விவேகானந்த லட்சுமி, சந்திரபவாணி (ஆசிரியை, யாழ்ப்பாணம்), கலாதேவி, சிவகுமாரி, சாமினி, பிரபாகரன் (அக்கராயன் வைத்திய சாலை), சிறிலதன், அசோகன் ஆகியோரது அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது மகளின் இல்லமான குமரபுரம், பரந்தனில் இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோரக்கன்கட்டு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரந்தன் சந்திக்கு
அருகில் 200 மீ. தூரத்தில்,
ஏ9 வீதியில் உள்ளது.

தகவல்
த.தயாபரன்
(மகன்)

(13695) (6,7,10)


## தவறிவிட்டது

தம்பாட்டியிலிருந்துபுங்குடுதீவுக்கு வியாபாரத்திற்கு சென்ற இராஜகுமார் இன்பதீபன் (912773558V) என்பவருடைய தே.அ.அ., மோட்டார்வாகன வரிப்பத்திரம், அடைவுப்பத்திரம், பாடசாலை அடையாள அட்டை, கடலுக்குச்செல்லும் அனுமதி அட்டை, என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 5681081/077 8806932

## வாடகைக்குண்டு

கணேஸ்வரம் அளவெட்டியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு. 021 3201282,
077 5946046.

## தவறிவிட்டது

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த நாகேந்திர சர்மா கமலநாதன் எனபவரது தேசிய அடையாள அட்டை (702140617 V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் 25.01.2012 அன்று யாழ் நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0777074739 என்னும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, சுன்னா கம், மல்லாகம், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு.077 3504376,
077 9037222.

## வேலைக்கு ஆள் தேவை

குமாரன் சுற்றுலா விடுதிக்கு Room Boy தேவை. 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு : குமரன் ரூறிஸ்ற் இன்,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனிப்பட்ட முறையில் அல்லது குழுக்களாக ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம் சரளமாகக்கதைக்கப்பயில. By:ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக, சண்டிலிப்பாய்.

Tel - 077 6751649

## ஆள் தேவை

பிரபலமான Restourant ஒன்றிற்கு சமையல் உதவியாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு.
077 1815917

## கணிவி திருத்தம் (COMPUTER REPAIR)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரியமுறையில் திருத்தித் தருகின்றோம்.

அழையுங்கள்- 0779086737

## தவறிவிட்டது

முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழக் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீ ஆனந்தராஜா
TP- 0776544565

## விற்பனைக்கு

G.W xxxx இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள COMRT SUPER LEYLAND வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0771546842


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.01.2012 (ஞாயிறு) அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (BA) பட்டம்பெற்ற

### உத்தமசீலன் சிவகுமார்

அவர்களை மனமார வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

வாழ்த்துவோர்:
க.சுப்பிரமணியம் (சிறியதந்தை),
சு.இராசலக்ஸ்மி (கிளி-சிறியதாய்),
சு.பிரசாந் (தம்பி)

(13697) (6,7,10


## பணி நிலை வெற்றிடம்

எரிபொருள் நிரப்புநர் (பம்பர்) களுக்கான வெற்றிடம் இல. 207, கே.கே.எஸ் வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள K.K. பிள்ளை எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இல.21, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள ராஜன் உமையாள்எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் காணப்படுவதால் 31.01.2012 தொடக்கம்03.02.2012 வரை சுயவிவரக்கோவையுடன் சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேரில் சமுகம் தரவும்.

நிர்வாகத்தினர்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(02.02.2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(13302) (45-7-9)

## காணி வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வசதியுடன் கூடிய ஐந்து (5) அறைகள் கொண்ட பெரிய வீடு காணியுடன் 3 பரப்பு 6 குழி வில்வெம் தெரு வீதி, புங்கன் குளம் சந்திக்கு அருகில் விற்பனைக்குண்டு.

தனியாருக்கு மட்டுமன்றி, நிறுவனம் கம்பனிகளுக்கு உகந்த இடம்.

தொடர்பு: திருமதி வஸந்தி தேவராஜன்,
40, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 077 1172953 (13696) (45-6-7)


## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை அம்பலவாணர்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், முகத்தான் குளம், செட்டிகுளத்தை வசிப்பிடமாகவும், பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய ஐயம்பிள்ளை அம்பலவாணர் கடந்த (28.01.2012) சனிக்கிழமை வட்டக்க்ச்சியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்கு இல.273, சில்வா வீதி, வட்டக்கச்சியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வட்டக்கச்சி.

தகவல்: அ.தனபாலன் (இந்திரன்-மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு:- வெங்கடேஸ்வரா TP- 021 222 8306

## மரண அறிவித்தல்

### செல்வி தியாகராசா கிருசாந்தினி

நவாலி வீதி, 2ம் ஒழுங்கை, ஆனைக்கோட்டை யைச் சேர்ந்த செல்வி தியாகராசா கிருசாந்தினி நேற்று (30.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசா - சுசிலா தம்பதியரின் அன்பு மகளும் ஜீலிற்றன், துஸ்யந்தன், துஸ்யந்தினி, தர்சாயினி (ஆனைக்கோட்டை, பாலசுப் பிரமணிய வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2012) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி, 2ம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்
சி. தியாகராசா (தந்தை)

## பேர்த்தியின் மண நாளுக்கு வந்தவர் மாரடைப்பில் மரணம்

தென்மராட்சி, ஜன.31

பேர்த்தியின் திருமணத்துக்காக லண்டனில் இருந்துவந்த மூதாட்டி மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று கைதடி, நுணாவிலில் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது- லண்டனில் இருந்து முதலித்தம்பி ஜெயலட்சுமி (வயது-74) என்பவர் கடந்த 27ஆம் திகதி பேர்த்தியின் திருமண நிகழ்வுக்காக சொந்த இடமான கைதடி, நுணாவிலுக்கு வந்திருந்தார். இதில் கலந்துவிட்டு நேற்று முன்தினம் தனது சொந்த வீட்டுக்கு வந்தார்.

அங்கு இரவு உணவை உண்டுவிட்டு படுக்கைக்கு சென்ற இவருக்கு நேற்று அதிகாலை நெஞ்சுவலி ஏற்பட்டது. சற்று நேரத்தில் மயங்கி விழுந்து இறந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். இதனைப் பார்வையிட்ட நீதிவான் சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு பணித்தார். (207)

## மரண அறிவித்தல்

### கணபதி அண்ணாமலை



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி அண்ணாமலை கடந்த (28.01.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அழகம்மாவின் அன் புக் கணவரும் தெய்வேந்திரன் (உரிமையாளர்-யாழ்மில்), மகேந்திரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (லண்டன்), செல்வேந்திரன் (பிரான்ஸ்), ஜனதாமலர், ரசீந்திரன் (பிரான்ஸ்) ,காலஞ்சென்ற விஜேந்திரன் மற்றும் விமலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பால கௌரி, கௌரி (பிரான்ஸ்), ரஜனி (லண்டன்), பகிர்தராணி (பிரான்ஸ்), சாந்தகுமார் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), ஜெயத்திகா (பிரான்ஸ்), இந்துமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் கௌசிகா, துசாரா, பார்த்தீபன், இமாசன், கஜீந்தா, தினேஸ், கிருபன், ஜெசிந்தா, பகி, சாருஜன், சஞ்சீவ், சம்ரன், சகீன், டெனுசியா, கத்திரின், இமிலி, மதுஷா, திவாபரன், திருஸ்ஸி, பவீன் ஆகியோரி அன்புப் பேரனும் கந்தையா, செல்லத்துரை, காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் கிருஸ்ண பிள்ளை, நாகரத்தினம், செல்லபாக்கியம், பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான குணலிங்கம், இராசலிங்கம் மற்றும் கமலராணி (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மன்), யோகராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2012) புதன்கிழமை மு.பகல்11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்

## மதுவால் வந்த வினை

தென்மராட்சி, ஜன.31

சாவகச்சேரி நுணாவில் சந்தியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த யாழ். நகரவாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில்விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (207)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர். பொன்னையாதங்கராசா



என்னுடன் பூநகரியில் ஒரே பள்ளியில் கல்வி கற்றது மட்டுமின்றி என்னுடன் இணைந்து பூநகரி மக்களை மனதார நேசித்து பல்வேறு சமூக நிறு வனங்களூடாக சமூகப் பணியில் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்த பெருமகன் தங்கராசா அண்ணன் அவர்கள். அமரரான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றேன். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது பாசத்திற்குரிய துணைவியார் சிவபாக்கியம் அக்கா அவர்களுக்கும் அவர்தம் குழந்தைகளுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எனது குடுமபத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருநாவுக்கரசு இராசநாயகம்
முன்னாள் அரசாங்க அதிபர், கிளிநொச்சி.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
22 ★ 12 ★ 1958



விண்ணில்
01 ★ 01 ★ 2012

### அமரர் பூரணலிங்கம் பரமேஸ்வரன்
### (நயினாதீவு - 5ம் வட்டாரம்)

*பாரினிலே பூத்த பரமே!*
*பாதியிலே போன தென்னையா*
*பண்பின் உறைவிடமாய் உயர்ந்தவரே*
*பாசத்தின் சிகரமாய் விளங்கியவரே*
*பரிவுடனே அனைவர்க்கும் பாசமாய் விளங்கியவரே*
*பாரினிலே உயர்ந்திட நினைத்தீரே*
*பாதியில் உம்மை இயமன் இரையாக்கினானோ?*
*மனைவி முகம் வாடியதே*
*மக்கள் முகம் சோர்ந்ததே*
*உம் உறவினர் ஏங்கித் தவிக்க*
*உம் முகம் மலர்ந்த சிரிப்பெங்கே?*
*அனைவருக்கும் உதவும் உள்ளமெங்கே?*
*தெய்வமாகி விட்ட பரமேஸ்வரனே*
*மாதமொன்று சென்றாலும்*
*மாறவில்லை எம் ஆறாத்துயரம்*
*உம்நினைவு என்றென்றும் எம்மைவிட்டு நீங்காது*
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சைவபாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### *சிவசுப்பிரமணியம் சாயாதேவி*

யாழ்ப்பாணம், அராலியைப் பிறப்பிடமாகவும், இல.72, சிவிக் சென்ரர், வட்டக்கச்சி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சாயாதேவி நேற்று (30.01.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும், மற்றும் இ.சிவசுப்பிரமணியத்தின் (சுப்பர்) அருமை மனைவியும், தவராசா, சா.ஆனந்தராசா, செல்வராசா, சறோஜாதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சிறிறஞ்சிதமலர் (ஆசிரியர், கிளி/ இராமநாதன் மகாவித்தியாலயம்), பவானந்தன் (ஆசிரியர், கிளிநொச்சி), பவானி (மருந்தாளர், முழங்காவில் வைத்தியசாலை), ஜெயந்தினி (ஆசிரியை, வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), சிவானந்தன் (ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அருமைத் தாயும், இளங்குமரன் (பணிப்பாளர், பகீர் ஒப்பந்த நிறுவனம்), உதயகுமார் (முல்லைத்தீவு), சுகந்திரன் (அதிபர், முல்லைத்தீவு), குமுதினி (கொக்குவில் மேற்கு) ஆகியோரின் மாமியும், பகீர்த்தன் (மாணவன், கிளி/ இராமநாதன் மா.வி), கவின் (மாணவன்/ கிளிநொச்சி இராமநாதன் மா/வி), யஸ்வினி (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை), மதுஷாயினி கோபிஷன், வவிக்சன், தர்மிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.72, சிவிக் சென்ரர்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.


உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ். குடாநாட்டில் நம்ப முடியாத விலைக் கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றன.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு– 2 தொ.பே.:021 222 7835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் நண்பர்கள் எதிரிகளாயினர் வாளை எடுத்து வெட்டினார் கையை!

## ஒருவர் ஆஸ்பத்திரியில்; மற்றவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஜன.31

மதுபோதையில் நின்ற நண்பர்கள் எனக் கூறப்படும் இருவரில் ஒருவர் மற்றவரது கையில் வாளினால் வெட்டிக் காயப்படுத்தினார். படுகாயமடைந்த அவர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார். அதனையடுத்து ஏற்படுத்தப்பட்ட காயம் தொடர்பான மருத்துவ அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நாவாந்துறையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது பிரஸ்தாப இருவரும் மது போதையில் இருந்துள்ளனர். அவ்வேளை இருவரிடையே முரண்பாடு ஏற்பட்டது. அவர்களில் ஒருவர் மற்றவரை வெட்டுவதற்கு வாளை எடுத்தார். அதன் போது மற்றையவர் அதனைத் தடுக்க முற்பட்டுள்ளார். அதன்போதே இந்தக் காயம் ஏற்பட்டுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து யாழ். நீதிமன்றில் இருவரையும் நேற்று முற்படுத்தினர். இதன்போது கையில் படுகாயமடைந்த நபரை தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்க உத்தரவிட்டதோடு மற்றைய சந்தேக நபரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது திட்டமிட்டு செய்யப்பட்ட காரியமா அல்லது எதேச்சையாக நடந்ததா என்பது பற்றி நீதிமன்றில் விசாரிக்கப்படவுள்ளது. (ஒ-4)

# வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா

1 »

பிரிவும் நிறுவப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் இந்தப் பிரிவுகளுக்கான கட்டங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிதியினைப் பயன்படுத்தி 40 வைத்தியசாலைகளுக்கான ஆய்வுகூடங்கள் நிறுவப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# ஜெனீவாவில் அரசை எதிர்க்க கூட்டமைப்பும் தயாராகிறது

1 »

இலங்கையில் இறுதிப்போரில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை நடத்தப்படுவது அவசியம் என்று மேற்குலக நாடுகள் பலவும் வலியுறுத்த காத்திருக்கின்றன. இது தொடர்பான பிரேரணை ஒன்று கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்ற விடயமும் இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தப் பட்டுவிட்டது.

அந்த பிரேரணையின் விவாதத்துக்கு அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ள நிலையில், அதைத் தடுப்பதற்கான முயற்சியில் இலங்கை அரசு இறங்கியிருக்கிறது..

இந் நிலையில் ஜெனிவாவில் அரசுக்கு எதிரான கடும் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகி வருகிறது. இந்தக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனுக்கு' தெரிவித்தார்.

தமிழர் தரப்பு நியாயங்களை சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்வதற்காகவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்லவுள்ளனர். இதில் தலைவர் சம்பந்தன் உட்பட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்வர் - என்றார் (த-15)

## முதல்முதலாக..

வரணி தாவளை - இயற்றாலைக் கிராமம் முதன் முறையாக மின் வெளிச்சம் காணவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தக் கிராமத்துக்கான மின் விநியோக பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்தால் மின்சாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (207)

## சாவகச்சேரியில் பொலிஸ் பதிவு

1 »

பாரிகள் நகரப் பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்பாளர்கள் ஆகியோரிடம் நேரடியாகச் சென்று பொலிஸார், பெயர் விவரங்களைக் கேட்டு பதிவு செய்துகொண்டனர்.

இது பற்றி விசாரித்த போது ஜனாதிபதியின் வருகையையிட்டு பாதுகாப்பு நிமித்தம் பதிவுகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# ஈழ விடுதலைப் போராட்டம் கோரி நிற்கும் மீள்கட்டமைப்பு

14 »

இல்லை என்பதையே காட்டுகின்றது.

இந்த நிலையில் ஒரு புதிய தொடக்கமும், அதற்கான ஒரு மீள்கட்டமைப்பும் ஈழத் தமிழருக்கு தேவை என்பதே வரலாற்றின் கட்டளையாகும். ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கம் என்பதற்கேற்ப நாம் உயிர், உடைமைப் பாதுகாப்பு, ஜனநாயகம், சுதந்திரம், சுயகௌரவம், சமத்துவம், சமூகநீதி, தலைநிமிர்ந்த வாழ்வு என்பனபோன்ற அத்தியாவசிய தேவைகளின் பொருட்டு விடுதலை பெற்ற மக்களாக வாழவேண்டிய தேவைக்கான ஒரு மீள்கட்டமைப்பைப் பற்றி அதிகமதிகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

தேசிய இனங்கள் பிரிந்து சென்று விடுதலை அடைந்துவரும் வரலாறு 1905ஆம் ஆண்டு சுவீடனிலிருந்து நோர்வே பிரிந்ததுடன் தொடங்கி 2011ஆம் ஆண்டு தென் சூடான் பிரிந்தது வரை நீண்டு செல்கிறது.

அதாவது இரண்டு நூற்றாண்டுகளைத் தழுவி அதன் வரலாறு நீண்டு செல்கிறது. இந்த வரலாற்றுப் போக்கிற்கு ஒடுக்கப்படும், இனப்படுகொலைக்கு உள்ளாகும் உயிர்ப் பாதுகாப்பற்ற, வாழ்வுரிமையற்ற ஈழத் தமிழர்கள் விதிவிலக்காக முடியாது. உலகளாவிய நீதியும், நியாயமும் எமக்கு மறுக்கப்படக் கூடாது.

# பிள்ளையானை எச்சரிக்கிறார் கருணா

1 »

எனக்குத் தெரியவில்லை. அவர்கள் வாக்குகளைக் குறிவைத்தே இவ்வாறு கோரிக்கைகளை விடுகின்றனர்.

கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் கூட காணி,பொலிஸ் அதிகாரங்கள் தேவை என்று கோரியுள்ளார்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டே அதனுடன் முரண்பட்டால், அது சந்திரகாந்தனுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (த)

# எமக்கு வேண்டும் நியாயமான தீர்வே

1 »

ரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வே எமது தேவை. தீர்வுப் பேச்சுகளில் நாம் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை. புதிய விடயங்களையும் புகுத்தவில்லை. தீர்வுப் பேச்சுகளை ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியும், நானும் நடத்திய பேச்சின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறே நாம் இப்போது கூறுகிறோம். இது கூட்டத்தின் குறிப்பில் கூட தெளிவாக உள்ளது. இது புதிய நிபந்தனையாகப் பார்க்கப்படுகின்றமை எம்மையும், அமைதித் தீர்வொன்றை விரும்பும் எமது மக்களையும் கவலையடையச் செய்துள்ளது. எதுவித புதிய நிபந்தனைகளையும் நாம் விதிக்கவில்லை'' - என்றார் சம்பந்தன். (ஒ-சி)

# விடுதலைப் புலிகள் மீதான தடை தமிழக அரசுக்குக் கால அவகாசம்

1 »

ஓய்வுபெற்ற நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையில் இந்திய மத்திய அரசால் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்த தான் கருத்து தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள தீர்ப்பாயம் மறுத்த தால், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அவர் தொடர்ந்த இந்த வழக்கு நீதிபதிகள் தர்மாராவ், கிருபாகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. தமிழக்அரசின் சார்பில் முன்னிலையான சட்டவாளர் நவநீதகிருஷ்ணன், இந்த வழக்கு தொடர்பாக பதில்மனு தாக்கல் செய்ய காலஅவகாசம் வேண்டும் என்று கூறினார்.

அதற்கு, மனுதாரர் வைகோவும் சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து வழக்கு விசாரணை வரும் பெப்ரவரி 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

# கூட்டமைப்பின் தேவை தனிநாடே அவர்களுக்கு இல்லை அதிகாரம்

1 »

ளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தம் இப்போதுள்ள விடயம் என்பதால் அதற்கு மேல் பேச்சு நடத்தத் தெரிவுக்குழுவிற்குச் செல்லவேண்டும். 13 பிளஸ் என்பது புதிய விடயம் அல்ல. இதனை முன்னர் கூட இந்தியாவிடம் நான் கூறியிருக்கிறேன்.

13 பிளஸ் பற்றி என்னுடன் பேசிய இந்திய அமைச்சர் கிருஷ்ணா, ''அது குறித்து பகிரங்கமாக அறிவிக்கவா'' என்று என்னிடம் கேட்டார். நான் சரி என்றேன். ஏனெனில், இது புதிய விடயமல்ல. 13 பிளஸ் பற்றி அல்லது காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி சில அமைச்சர்கள் என்ன கூறினாலும், நியாயமான ஓர் அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிட்டுள்ள மஹிந்த சிந்தனையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் என்னால் பெந்தரைக்குக்கூடப் போகமுடியாது. சம்பந்தன் வேண்டுமானால், அவரின்இடங்களுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும்.

அவர்களுக்குத் தனிநாடு ஒன்றுதான் தேவை. அவர்களின் படிப்படியான செயற்பாடுகள் இதனைத்தான் கூறுகின்றன. அன்றிருந்த அடிப்படையிலிருந்து அவர்கள் இன்னமும் விலகவில்லை. இப்போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர்களில் பலர் அன்று புலிகளுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புகளை வைத்திருந்தனர். கூட்டமைப்பு உறுப்பினர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவென உறுப்பினரொருவரைப் புலிகள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்திருந்தனர். இதுதான் வரலாறு.

**என்னால் மட்டும் இயலாது**

13 பிளஸ் அல்லது செனட்சபை குறித்து பேசுவதாயின், முதலில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் பெயர்களைக் கொடுக்கவேண்டும். ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் பெயர்களைக் கொடுத்துள்ளன. இதுபோல, ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஜே.வி.பி. மாற்றுக் குழு என்பனவும் பெயர்களைக் கொடுக்கவேண்டும்.

நாம் ஜனநாயக ரீதியில் அனைவரிடமும் பேசவேண்டும். நான் தனியே தீர்வொன்றை கொடுக்க முன் வந்தால், நிச்சயம் அதற்கு எதிர்ப்பு வரும். ஒருவர் ஒன்றைச் செய்ய முற்பட்டால் எல்லோரும் அதனை எதிர்ப்பர். அதுதானே வரலாறு. 13 பிளஸோ, 13 மைனஸோ எது வேண்டுமானாலும் என்னால் தனித் தீர்மானம் எடுக்கமுடியாது. இது தேசியப் பிரச்சினை. எனது தனிப்பட்ட பிரச்சினை அல்ல.

ஊடகங்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படவேண்டும். தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் இனவாதத்தைக் கக்குகின்றன. சில பத்திரிகைகள் தவறான கொள்கையில் உள்ளன. அது கூடாது. ஆட்சி மாற்றமொன்று தேவையானால், அதை தேர்தல் வரும்போது பார்க்கலாம். அதைவிடுத்து, உலகத்திற்குத் தவறான செய்திகளைச் சொல்ல வேண்டாம். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் விவகாரம் மற்றும் தீர்வு பற்றிய இறுதி முடிவை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எடுப்பது பற்றியும் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசவுள்ளோம். இன்னும் சில தினங்களில் இது நடக்கும்.

**எல்லோருடனும் பேசுவோம்**

நாடாளுமன்ற [illegible] நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குப் பெயர்களைத் தராதது ஏன்? இது ஒருவருக்கொருவர் பேசித் தீர்வு காணமுடியாத விடயம். அனைவரும் பேசவேண்டும். குறைந்தபட்சம் உங்களது பெயர்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குக் கொடுங்கள் என்றுதான் கூறுகிறோம். புலிகள் செய்த வேலையைத்தான் கூட்டமைப்பு தொடர்ந்து செய்கிறது.

ஆனாலும் நாம் நேர்மையாக விட்டுக்கொடுத்து செயற்படுகின்றோம். 30 வருடகால பிரச்சினையை தனி ஒருவரால் தீர்க்கமுடியாது. அப்படியான தீர்வை மக்கள் ஏற்கமாட்டார்கள். மக்கள் ஏற்காவிடின் தீர்வில் அர்த்தமில்லையே. தெரிவுக்குழுவிற்கு வராமலிருப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது. தெரிவுக்குழுவிற்கு வருவதற்கு அவர்களுக்கு எண்ணம் இல்லை.

சிலவேளை காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாக நாம் கூறினால் நிதி அதிகாரம் இல்லையே என்று அதையும் கேட்பர். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையானோரின் விருப்பமே, தீர்வு விடயத்தில் [illegible] விருப்ப[illegible] - என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி. (ஒ-சி)

# திருமலை மாணவர்களைக் கொன்றது அதிரடிப்படையே

1 »

தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்த நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கேபிள் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கிற்கும், அப்போது ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த பஸில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பில் பகிரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் விசேட அதிரடிப்படையினருக்கு தொடர்பு இருப்பதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஒத்துக்கொண்டார் என்று ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

''எனினும், மாணவர்களைத் துளைத்த குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் என்பன விசேட அதிரடிப்படையினருக்கு சொந்தமானதல்ல. யாரையேனும் கொலை செய்யும் போது விசேட அதிரடிப் படையினர் வேறு துப்பாக்கிகளைப் பயன்படுத்திருக்கக் கூடும் .யார் இதனைச் செய்தார்கள் என்பது எமக்குத் தெரியும் ஆனாலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது.மனித உரிமை விவகாரங்கள் குறித்து இலங்கை இராணுவத்தினருக்கு போதியளவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது, எனினும் கடற்படையினருக்கு உரிய பயிற்சிகள் அளிக்கப்படாத காரணத்தினால் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக அதிகளவில் குற்றம் சுமத்தப்படுகின்றது'' என்றும் பஸில் தெரிவித்தார் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ங-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினையை பகடையாக வைத்து ஜனாதிபதி தேர்தலுக்கு மஹிந்த இலக்கு

## அவர்களுக்கு சீனி மிட்டாய் கூட அரசு வழங்காது என்கிறார் சிறிதுங்க ஜெயசூரிய

கொழும்பு, ஜன.31

தமிழர் பிரச்சினைகளை சர்வதேச அரங்கில் பகடையாக வைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இலக்குவைத்து வருகின்றார் ஜனாதிபதி மஹிந்த. பேரினவாத போக்கைக் கடைப்பிடிக்கும் இந்த அரசு, தமிழ்மக்களுக்கு எதையும் வழங்காது. இதனைப் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் மிகவும் தெளிவான முறையில் கூறியுள்ளேன் - என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய ''உதயனுக்கு'' நேற்றுத் தெரிவித்தார்.

போராட்டங்கள் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்ற நிலை இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. எனவே, இடதுசாரிகளுடன் இணைந்து அனைவரும் போராடத் தயாராகவேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

ஜனாதிபதி மஹிந்தவும், கிருஷ்ணாவும் இணைந்து அரங்கேற்றியதுதான் இந்த 13 பிளஸ் கதை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

13 பிளஸ், செனட்சபை போன்ற கதைகளெல்லாம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்துக் கட்டவிழ்த்து விடப்பட்ட கதைகளாகும்.

சிங்கள, பௌத்த வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்துவிடும் என்ற அச்சத்தால் காலத்தை இழுத்தடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசு உள்ளது.

ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதே அரசின் தற்போதைய ஒரே நோக்கமாகவுள்ளது. அது தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்தாது.

எம்மைப் பொறுத்தமட்டில், தமிழர்களுக்கு இந்தப் பேரினவாத அரசு ஒரு சீனி மிட்டாயைக்கூட வழங்காது என்பது உறுதியாகத் தெரியும். நான் லண்டன் சென்றிருந்தபோது, புலம்பெயர் தமிழர்களிடமும், தொழிற்சங்கவாதிகளிடமும் இதனை உறுதியாகக் கூறினேன்.

நாட்டில் இன்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்த்துக் கொள்ளவேண்டுமானால் அனைவரும் போராடுவதற்கு முன்வரவேண்டும். அதற்கு இடதுசாரிகள் பக்கபலமாக இருப்பர்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தாத இவர்கள் அதற்கு அப்பால் என்று சொல்வது ''தமிழர்களுக்கு ஒன்றுமில்லை'' என்பதையே - என்றார் அவர். (ஒ-சி)

# கம்பனியை அரசு சுவீகரித்ததால் தயா கமகே இந்தியாவில் முதலீடு

கொழும்பு, ஜன.31

சீனி உற்பத்தி செய்யும் நோக்கில் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவில் . முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவருமான தயா கமகே தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருவருடன் இணைந்து தாம் இந்த முதலீட்டை மேற்கொள்கிறார் என தயா கமகே தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, இந்திய கோராபுரியில் கரும்புச்செய்கையை ஆரம்பிப்பதற்கு 'தயா கமகே வியாபாரய' தீர்மானித்துள்ளது.

இலாபத்தில் இயங்கிய செவனகல சீனித் தொழிற்சாலையை அரசு சுவீகரித்ததன் காரணமாகவே, இந்தியாவில் முதலீடு செய்ய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என செவனகல தொழிற்சாலையின் தலைவரான தயா கமகே தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருவரும் தன்னுடன் இணைந்து இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவிருந்தனர் என்றும், அரசின் சுவீகரிப்புச் சட்டத்தால் அவர்கள் அச்சமடைந்து தமது திட்டத்தை மாற்றிக்கொண்டனர் என்றும் தயா கமகே கூறியுள்ளார்.

அத்துடன், இந்த வருடம் முடிவடைவதற்குள் இந்தியாவில் வியாபாரத்தை ஆரம்பிப்போம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(ஒ-சி)

# தெரிவுக்குழுவுக்கான பெயர்களை கூட்டமைப்பிடமிருந்து எதிர்பார்க்கிறோம்

## சஜின் வாஸ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.31

தீர்வுப் பேச்சை ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் தொடர்பில் இருந்து வருகிறோம். இருந்தபோதிலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் பெயர்களை வழங்கும் விடயத்தில் இன்னும் இறுதி முடிவு கூட்டமைப்பிடமிருந்து வரவில்லை.

- இவ்வாறு ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீர்வுப் பேச்சுக்குழுவுக்கான ஆளுங்கட்சியின் அங்கத்தவருமான சஜின் வாஸ் குணவர்தன நேற்றுத் தெரிவித்தார்.

பத்திரிகைகளின் ஆசிரியர்களை ஜனாதிப்தி நேற்று சந்தித்துப் பேசியபோது அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸும் அரசு - கூட்டமைப்புப் பேச்சு குறித்து விளக்கினார்.

தீர்வுப் பேச்சுகளை முன்னெடுப்பது எப்படி என்பது குறித்து நாம் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். பேச்சுகளை சிறந்த முறையில் முன்னெடுக்கவேண்டுமென்பதில் அரசு உறுதியாக உள்ளது. எவ்வாறாயினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பெயர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் எங்களிடம் தரவில்லை. அதனை நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம் - என்று குறிப்பிட்டார் சஜின் வாஸ். (ஒ-சி)

# நெடுந்தீவு பயணத்தில் நேர மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.31

நெடுந்தீவு கடற்போக்குவரத்துச் சேவை மீண்டும் மாற்றம் செய்யப்படவுள்ளது. இதன்படி நெடுந்தீவில் இருந்து காலை 6.15 மணிக்கு குமுதினி குறிகாட்டுவான் வந்து அங்கிருந்து மீண்டும் 8.30 மணிக்கு நெடுந்தீவுக்குத் திரும்பும்.

வடதாரகை காலை 10.30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு புறப்பட்டு மீண்டும் நெடுந்தீவில் இருந்து பி.ப 2 மணிக்கு குறிகாட்டுவான் திரும்பும்.

காலை 8.30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து பயணிகளுடன் வரும் குமுதினி மீண்டும் நெடுந்தீவில் இருந்து பி.ப 3.30 மணிக்கு குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து மாலை 5 மணிக்கு நெடுந்தீவு புறப்படும்.

காலை 10.30 மணிக்கு புறப்பட்டு பகல் 12.30 க்கும் மீண்டும் நெடுந்தீவுக்குப் புறப்படும் குமுதினிப் படகுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

அடிக்கடி படகுச் சேவையில் ஏற்படும் மாற்றங்களால் மக்கள் திக்குமுக்காடிப் போயுள்ளனர். (ஒ-7)

# கல் அகழ்ந்தவர் கட்டினார் அபராதம்

தென்மராட்சி, ஜன.31

மீசாலை வடக்கு வேம்பிராய்ப் பகுதியில் சட்டவிரோதமாக கல் அகழ்வு செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பகுதிக்குச் சென்று கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நபரைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-207)

# சட்டவிரோத மின்பெற்ற குற்றச்சாட்டு மூன்று வழக்குகளும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் கூறி பெண் ஒருவர் உட்பட யாழ். நகரைச் சேர்ந்த மூவர் மீது இலங்கை மின்சார சபையினரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மூன்று வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. அதன்போதே மேல் விசாரணைக்காக இரண்டு வழக்குகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கும் மூன்றாவது வழக்கை எதிர்வரும் 16ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முறைப்பாட்டாளரான இலங்கை மின்சார சபை சார்பில் அரச சட்டவாதி வி. திருக்குமரனும், சட்டத்தரணி ஜெகத் பெர்னாண்டோவும் வாதாடினர். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத் தரணிகளான எம். திருநாவுக்கரசு, எஸ். வரதராஜா, மு.றெமிடியஸ், சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

கடந்த வருட இறுதியில் இலங்கை மின்சார சபையினரால் யாழ். நகரை அண்மித்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

# 'தாத்தா'வுக்கு விளக்க மறியல்

மீசாலை வடக்குப் பகுதியில் பதின்ம வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட 68 வயது நபருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சந்தேக நபர் நச்சு மருந்து அருந்தி யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார் என்பதை பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

சந்தேக நபரை யாழ். போதனா வைத்தியசாலையில் பார்வையிட்ட சாவகச்சேரி நீதிவான், அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் உத்தரவை யாழ். நீதிமன்ற நீதிவான் ஊடாக விடுத்துள்ளார்.

(ஒ-207)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பமாகவுள்ள வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1, அரசாங்க பதிவுடைய தாதியர்.
2, அரசாங்க பதிவுடைய மருந்தாளர்.
3, அரசாங்க பதிவுடைய ஆய்வுகூட பரிசோதகர்.
4, வரவேற்பாளர்கள்.
5, காசாளர்

மேலதிக விவரங்களுக்கு
இல.126, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்**

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் [01.02.2012] புதன்கிழமை அன்று மு.ப 10 மணிக்கு யாழ். பெருமாள் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளதால் அனைத்து பட்டதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

**வீடும் காணியும் விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் வீடும், 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0776258116

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**

எம்மிடம் சட்ட ஆலோசனை பெற்று குடிபெயர்ந்தவர்கள் 3 குடும்பங்கள் விண்ணப்பம் சமர்ப்பித்தோர் 31 குடும்பங்கள் இறுதித்தினம் (07.02.2012) சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

**திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்**



37, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 021 221 9016

**முதல் ஆண்டில் காலடி வைக்கும்**

புதுமுக மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி
மருத்துவ மாணவர்களுக்குரிய நூல்கள்
MEDICAL BOOKS அனைத்தும்
விசேட கழிவு விலையில்
வழங்கப்படுகின்றன.

ஆர்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
22, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

Screen Printing
வேலை தெரிந்தவர்கள் தேவை

தொடர்புகளுக்கு:
359, Kasthuriyar Road, Jaffna
T.P 0215672222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.